"VIVEKA B...
Vol. IV December 1911. Durbar Special Number No. 6

**Our sincere and hearty Welcome to Their Gracious Majesties**



KING GEORGE V and QUEEN MARY

## CONTENTS


| | |
|---|---|
| A Homage to His Majesty ... ... ... ... ... ... | i |
| Desire ... ... ... ... ... ... ... | 229 |
| Image Worship and Temples ... ... ... ... ... ... | 230 |
| Delhi and the Emperor's Durbar: by M. R. Ry. V. Seshagiri Sastriar Avl., B.A. ... ... ... ... ... ... ... | 234 |
| Moral sayings explained ... ... ... ... ... ... | 239 |
| Popular Maxims explained ... ... ... ... ... ... | 243 |
| Malaria ... ... ... ... ... ... ... ... | 245 |
| Gratitude : by M. R. Ry. G. S. Krishnasami Aiyer Avl., B. A. ... ... | 248 |
| Elephants : by M. R. Ry. P. R. Venkatesalu Naidu Garu ... ... ... | 249 |
| Leeches and Worms ; by M. R. Ry. N. S. Sambunatha Aiyar Avl., B. A., L. T., F.Z S., Sub-Assistant Inspector of Schools ... ... ... ... | 252 |
| Chemistry : Air.—What it contains : by M. R. Ry. M. R. Subrahmanyam, B.A ... | 254 |
| Vasanta Malikai.—An adaptation of Sir Walter Scott's Kenilworth : by M. R. Ry. R. S. Narayanasami Aiyar Av., B.A., B.L. ... ... ... | 256 |
| Students' Pages : Essay—Writing.—Reflective Essays :—Proverbs.—Familiarity breeds contempt ... ... ... ... ... ... | 258 |
| Children's Pages : True Greatness or Vasudha Sastri ... ... ... | 261 |
| Ladies' Pages : Delhi Durbar Kummi : by M. R. Ry. Pundit S. Muthusami Pillai Avl. ... ... ... ... ... ... | 263 |
| News and Notes ... ... ... ... ... ... ... | 266 |


[All Rights Reserved]

252




பொருளடக்கம்


தலைவன் வழிபாடு ... ... ...
ஆசை ... ... ... ... 229
விக்ரஹாராதனமும் கோயில்களும் ... ... 230
டில்லிமா நகரமும் சத்ரபதியின் தர்பாரும் ... .. 234
ஆத்திசூடி விளக்கம் : 9. ஐயமிட்டுண் ... ... 239
நியாயமாலை ... ... ... ... 243
மலேரியா என்னும் விஷஜுரம் ... ... 245
நன்றியறிவின் மஹிமை ... ... ... 248
யானைகள் ... ... ... ... 249
அட்டைகளும், மண்உண்ணிப் புழுக்களும் ... 252
வஸ்துதத்துவ போதினி ... ... ... 254
வஸந்த மாளிகை ... ... ... 256
மாணவர் பக்கங்கள் : வியாஸ விதானம் : (iv) ஆராய்ச்சி வியாஸங்கள், (1) பழமொழிகள்— பழகப்பழகப் பாலும் புளிக்கும் ... ... ... 258
சிறுவர்களுக்கான பக்கங்கள் : உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி ... ... 261
ஸ்திரீகளுக்கான பக்கங்கள் : டெல்லி தர்பார் கும்மி ... 263
விசேஷக் குறிப்புகள் ... ... ... 266


[காபிரைட்]



இப்பத்திரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் பிரசுரிக்கக்கூடாது.

# THE CORONATION OFFER




## JUST UNPACKED

**A large assortment of Fountain Pens, Clips, Inks, &c.**

The "*Improved Fortune*" Fountain pen: one of our best and most popular brand: specially manufactured for us by one of the leading manufacturers in England—Fitted with high class 14-carat Gold nib and Silver Regulator, barrel beautifully chased: In attractive box, &c., complete.

**Rs. 3-8**

The "*Fortune No. 3*" *Fountain Pen.*—This is also made to our special order. *This is fitted with a special feed*—Has an excellent nib fitted to it: In Black or mottled color. **Rs. 4-8**

The "*Caltonian*" Fountain Pen, fitted with 14 carat Gold Nib and duplex feed. **Rs. 2-2**

The "*Supplies*" Fountain Pen. A very reliable Gold Nib Pen: Appreciatedby all. **Rs. 2-8**

*Note.*—We have also other varieties of Pens, Clips, Inks, etc, and spare parts For Fountain pens in stock.

**Special Reduction of 10% will be allowed on these Excellent Fountain Pens and our Tamil Publications from 7th December 1911 to 15th January 1912, both days inclusive.**

## SPECIAL OFFER

**A beautiful portrait of Their Imperial majeties, In Coronation Robes. size 28 " x 20 " priced Rs.-1-8-each will be given away free to those who purchase books &c. from us for Rs. 15- and upwards, at a time. Please look sharp.**

## JUST OUT
### LESSONS FROM GEOLOGY

BY

Mr. M. R. Subrahmanyam, B. A., specially adapted for Elementary, Training and High schools—It treats of Rocks and Minerals, their action and uses—With more than 30 fine illustrations.—

**Price : As. 8.**

**H. Narayana Rao, Esq., M.A., F.G.S., Lecturer on Geology, Presidency College, Madras** writes :—This little book (Lessons in Geology by Mr. M. R. Subrahmanya Aiyar, B.A.) is an introduction to Geology in Tamil. By referring to Indian Examples, the author has attempted to familiarise the reader with the various Geological phenomena. Without going too much into the details of the subject which would naturally be repulsive to an ordinary reader, the author has given a general outline of the subject *in an easy and popular style.* The concluding chapter deals with the mode of occurrence in India of the most important minerals, coal, gold and diamond. *I have no doubt that the book will supply a real want and I hope it will be largely used in Secondary Schools and especially by teachers.*

## GUARDIAN
# DIARY
## 1912

**Price As. 6.**

*Address:*—**The General Supplies Co., Mylapore, Madras, S.**

255

# தலைவன் வழிபாடு

## TRIBUTE TO HIS MAJESTY






### கட்டளைக் கலித்துறை

வான்கொண்ட சோதி வழிகொண்ட தொன்மை மரபின்வந்த
தேன்கொண்ட மாரி திறல்கொண்டு பெய்த கொடையர்வாழ்ந்த
வான்கொண்ட ருவ வரைநின்று கங்கை வளனும்பாயத்
தான்கொண்ட நாட்டை நினைவுந்த வந்த தலைவவாழ்க !

குவளைக் கரங்கள் குவிந்தன்பி னீட்டி குறிப்பையுன்னி
பவளப் பரப்பின் பதுமங்க ளென்னு முகமலர்ந்து
தவளச் சிறப்பின் நகுவாய் மலர்ந்து தரளம்வீசி
யிவர்வளைக் கையலைத் தின்பத் திழைக்குமிந் நாடுகண்டாய் !

### விருத்தம்

ஐய வாரிய நாடிவ ளன்பலை கொழிக்கும்வெண் ணுரைமாலை
செய்ய மோலியின் மிலைதந்து புல்லுபுச் செஞ்செயிற் புணர்ச்சங்கம்
பெய்யும் பண்ணொடு மலரளை வண்டொடும் பெருகுத மதுவின்வாழ்
செய்ய தாமரை முகமலர்ந் தாசையி னழைத்திடுஞ் சிறப்பினன்றே!

காட்டின் வாழ்பற வைக்குலங் கருத்தினோ டினிமையி னிசைத்திடநற்
கூட்டின் வாழ்பவுங் கூட்டத் திருப்பவு மெழிலிசை யெனப்பயிற்ற
சூட்டு மோலியன் மனங்களித் தெனைப்புணர்த் துணிவினா னெனவிம்மி
வேட்டு மங்கமுங் கூச்சிட் டென்றிட மிகபயிர்த் தசைஞ்சிடுமால்!

## வேறு

ஐம்பொறி யுற்றவு மன்றி வாழ்பவும்
பைம்புல னறுத்திட்ட புரையின் மௌனருந்
தம்புலன் வழிப்பட்ட தகைமைப் பெற்றரு
மெம்புரத் தலைவனென் றெண்ணுங் காண்டியால்.

வளர்த்திரு வையநின் வரவை நோக்கிப்புல்
வளர்த்திடு மிடம்படும் வறிய ரெண்வரேல்
கிளர்த்திரு விடம்படுங் கேண்மைக் கொண்டரும்
வளர்த்திடு மன்பின ராத லரியதென் ?

மழலையின் பொருட்கொளு மாண்பின் றந்தையுஞ்
சுழலையுண் மயக்கறுத் துணர்த்து சோதியும்
பிழையனைத் தையும்பொறுத் தாளும் பெற்றியும்
வழுவிலை! நினையலான் வையத் தார்கொலோ ?

## வேறு

பின்னைக் கேள்வன் பிறங்கிடு மருணிதி
தன்னை வழிகொளுந் தரணியின் மாமணி
மன்னு மன்பினின் மாமுடிச் சேர்த்திட
என்ன நற்றவத் தீட்டிய தாகுமால் ?

ஐய நின்முகங் காண்டிடு மாசையின்
னையு நெஞ்சம்புன் னகைதந்தெ ழுந்தினி
யுய்யு மென்வழி யுண்டென் றிசைத்திடிற்
செய்ய காட்சியைச் செப்பவும் வேண்டுமோ ?

பண்டு நற்றவப் பலிதங்கண் டாலென
மண்டு வாரன்பின் வாரியின் ஓதைமன்
கொண்ட விந்தியக் குழாத்தவர் காதன்னி
தண்ட ளிர்கழற் சாதலுங் காண்டியால் !

இம்மை யம்மையின் மெய்வழி யீதெனச்
செம்மை யாரிய நாட்டவள் சீர்முடி
மெய்ம்மை யிற்கொள வேட்டிய நின்கழற்
கெம்ம வர்பெயு மிறையன்புங் காண்டியால் !

257



ஆங்கி லப்பெயர் அணங்கினை யோர்பக்கிற்
றாங்க லன்றியுக் தடவரை யிந்தியைப்
பூங்கு ழற்றன்னைப் புல்லவு மறுபுறத்
தோங்கத் தூங்கலி னுளமுறற் காண்டியால்!

பெயரும் வண்மையும் பெய்ம்மழைத் தன்மையும்
வயிர வாண்மையு மையறு நெஞ்சமும்
முயிரின் மீதுள்ள முருகிடு முணர்ச்சியும்
பயிலு மன்பனை பழிச்சலுங் காண்டியால்!

### வேறு

வாவென் றழைத்து வழியுரைத்து வளருந் தவிசு மலரளித்துக்
கோவென் றெண்ணி யுளமுருகிக் குவிகைக் கொண்டு முடிசேர்த்தி
மாவென் றொழியா மாதவ! நின் மாற்கண் டன்பாற் கழற்பணிந்து
நாவிற் குழைந்து நவின்மழலை நுகர்ந்துங் கண்ணிற் காண்டியால்!

கன்று மானுங் கலந்தென்னக் காண்பா னொழியா வன்பளக்கர்
குன்று விரக்கத் தலைவீசிக் குமிற்றுங் கருணை முத்தெரிக்கப்
பொன்றுப் புகழ்க்கொள் கோப்பிறையோன் புன்மைக் கொண்டற் குடற்கீறி
நின்றின் னூட்டி னிலவெரிக்கக் கிளைக்கக் காண்பக் காண்டியால்!

### வேறு

சுடராழி திங்கள் வழிகொண்ட தொன்மை பொருநர்ப் புரந்த வுல்லைச்
சுடரோன்றன் வாம மொழியாத நாட்டின் றலையாப் புகழ்க்கொள் பெரியோ
னிடராழி நீங்க வின்பந் திளைக்க விங்குற்று மௌலி புனையா
மடைபாயு மன்பி னறவத்தி தைய மலர்மாலை சூட்டுங் கண்டாய்!

### வேறு

சுடர்விடு கதிரவ னுதையமு மாமெனத் துளவிடுந் திரையுறை யுலகளந் தானெனப்
படர்விடு வழிமனக் களிப்பவ னாமெனப் பழமையும் புதுமையும் பயிர்ப்பவ னாமென
யிடர்படு பவர்மனங் கிளைத்திடு வோனென இழிவினை யகற்றிநன் மதியளிப் போனெனத்
தொடர்கொளு மகர்களைத் துணைக்கா மோச்சிநற் றுணையென வருவது நமதரு ளேந்தலே.

### வேறு

தனக்கிணை யிலாத தகைமையும் வீரமுந் தமர்களை விடாத கருணையுஞ் சாந்தமு
மனக்குறை விலாத முறைமையு மாட்சியு மறநெறி வழாத வருள்பொழி யார்வமும்
பனிக்குடன் படாத விதயமும் வானவன் பணிவினைத் தடாத வொழுக்கமும் வாழ்க்கையுஞ்
சினக்கிடந் தராத செழுமையு நீர்மையுந் தனதிடத் தெனுக்கொ ளெமதரு ளேந்தலே.

### வேறு

கொடிகுடை சாமரை கோலொடுசீர்க் குடமலர் மாலை நற்றோரணத்தோ
டடலுடை வாரணம் வாரணங்கூர் அமர்வளை வாளெனும் வேந்துருப்போ
டிடும்பத்தி ராசனத் தேரியிவ்வா ரியர்மன மூறன்பி னுஞ்செயா
முடிபுனை கோலத்தன் மூதுணர்வோன் முதலவன் வாழியென் றுசிசொலா.

### வேறு

கோமடந்தைப் புயஞ்சேரக் குலமடந்தை யுடன்சேரக் கோணி லந்த
நாமடந்தை நலங்கூர நலமடைந்த ஜனங்களின களிகொண் டாட
மாமடந்தை யுடன்சேர்ந்திம் மண்மடந்தைத் தனைப்புல்ல மகுடஞ் சேர்த்தி
தாமடைந்தப் பெருந்தகையைத் தனிநாட்டு தலைவனென வாழ்த்திற் றன்றே.

### வேறு

அறமோங்க வருள்சுரக்க வமுதம் பெய்யு ஆருந்தக் கடலின்வரூஉ மமுதம் போன்று
மறஞ்சாய மருள்வீழ மாண்பு வாழ மாலவன்றன் தகைமையின்வந் தவனி யாள
முறையோங்கு மாநிருபன் ஜார்ஜென் றேத்து மூதறிவின் வழிகொண்ட முதல்வற் கின்றே
இறைபுனைமா முடிசூட்ட விதயங் கூட்டி இன்பவா ழியிற்குளித்த தியம்பற் பாற்றோ ?

### வேறு

நலமென்னுங் குடைவி ரித்து ஞானச்சா மரையி ரட்டக்
குலமென்னுந் தவிசி ருந்துக் கொற்றமென் வட்டம் வீச
நிலமென்னு மடந்தை வேட்டு நெறியென்னு நாண்மு டித்து
கலையென்னு கயமீ தேந்தல் கவின்வரும் புவனி கண்டாய் !

### வேறு

மன்ன னேயென மாதவ னேயென
மின்ன னேயென மிந்திர னேயெனும்
பன்னுங் காதலின் பார்த்திபன் றன்மையைச்
சொன்னச் சொற்களைச் சொல்லப் பெறுபவோ ?

ஆந்தி கழ்க்கொடை வேந்தனை யார்தமிழ்
பூந்தொ டைக்கொடு போற்றினன் சேடப்பேர்
வாய்ந்த வன்பினவ் வாரிய ணையிட
ஆழ்ந்த ணில்மண்கொண் டோம்பிய வாறென.

### வேறு

வாழிய வரசன் ஜார்ஜு மேரியென் மாது மக்கள் ;
சூழியச் செழுமைச் செங்கோற் றனையருள் விளங்கி ; வெங்குற்
றாழிய மறமும் பொய்யு தகாப்பொரு ளனைத்தும் ; வேத
வாழியப் பாமன் வீசு மருட்டிரு நோக்கின் மன்னே !

# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி IV } விரோதிகிருது௵ கார்த்திகை௴ : 1911-௵ டிசம்பர்௴ { பகுதி 6


## ஆசை

### DESIRE

புதிய விஷயங்களைக் காணுங்கால், அவைகளை நாம் அடைய வேண்டும் என்று நமது மனத்தில் எழும் உணர்ச்சிக்கு ஆசையென்று பெயர். முன்னரே நாம் அனுபவித்து ஸுகம் கொடுப்பவை, என்று உணர்ந்திருந்த விஷயமாக இருந்து, நாம் முயன்றால் அது கிட்டத்தக்கது என்றும் தோன்றிவிட்டால், ஆசை அதிகரித்து நம்மை முயற்சிக்கும்படி தூண்டிவிடும். இதுவும் அல்லாமல் ஒரு விஷயத்தை அனுபவித்தறியாவிடினும், பிறர் அதன் ஸுகம் கொடுக்கும் தன்மையை எடுத்துரைக்கக் கேட்டபொழுது இவ்வாசை ஓங்கி எழும். ஆகவே பொதுவாக ஆசை ஸுகவஸ்துக்களிடம் தானாகவே எழும். அந்த விஷயம் முதலில் ஸுகம் கொடுப்பதாக விருந்து பின்னர் துக்கத்தைக் கொடுப்பதாக இருப்பினும் அதன்மேலேயே கண்மூடித்தனமாக ஆசைபாய்ந்து செல்லும். இத்தகைய விஷயங்களுக்குக் கெட்டவைகள் என்று பெயர். 'தொடங்குங்கால் துன்பமாய் இன்பம் பயப்பவைகள்' நல்லவைகளே. இவைகளிடம் ஸாதாரணமாக ஆசை எளிதில் பாய்ந்தோடாது. இவைகளிடம் ஆசை செல்ல வேண்டுமாகில் பகுத்தறிவைத் தீட்டி கல்வியிலும் ஒழுக்கத்திலும் தேர்ச்சி அடைந்தால்தான் முடியும். எப்படி இருப்பினும் எல்லோரிடத்தும் பொதுவாக நன்மையைக் கருதாது ஸுகத்தை மாத்திரம் கருதிக் கதித்தெழும் ஆசை இல்லாமல் போகாது. இதனால்தான் பெரியோர்களுக்குத் துக்கம் உலகில் வருவது. இம்மாதிரியான விஷய ஆசை இல்லாப் பெரியோர்கள் அநேக ஆயிரத்தில் ஒருவர் இங்கு இல்லாமற் போகவில்லை. அவர்கள் நடவடிக்கைகளைப் பின்பற்றித்தான் நாம் எல்லோரும் ஆசையை அடக்க முயல்வது. அத்தகையோர் இல்லை என்ற திடஞானம் நமக்கு வந்துவிட்டால் ஆசையை அடக்க ஒருவரும் முயற்சிக்காது, அஸாத்தியம் என்று மனமழிந்து நிற்பர்.

அதிக ஆசை அதிக நஷ்டம் என்பது ஒரு பழமொழி. இது உலக விஷயங்களைப்பற்றி நிற்கும். மனத்தில் விஷய ஆசை அதிகமாக எழுங்கால் நமது மனம் எருமைமாடு விழுந்து கலக்கும் குட்டையைப்போலாய் விடும். பகுத்தறிவு மழுங்கிவிடும். ஆசைப்படும் விஷயத்தை அடைய வேண்டிய முயற்சிக்கு ஏற்ற மனோபலம் தேஹபலம் முதலியன குன்றும். மேலும் தகாத வழியில் அவஸரத்தில் தொடங்க விஷயம் கைகூடாமல் போய்விடும். ஆதலால் அதிக ஆசை அதிக நஷ்டத்தை ஏற்படுத்துமே ஒழிய லாபத்தைக் கொடுக்காது. மேலும் உலகவிஷய ஆசை வரவாக் குறைந்துகொண்டு வந்தால் நமக்கு ஒருவித் ஸுகம் ஏற்படும். மனம் கலங்காதிருக்கும். கிட்டாத விஷயங்களில் ஏற்படும் ஆசை வீண் மனஸ்தாபம்தான். கிட்டக்கூடிய விஷயங்களிலும் அதிக ஆசையிருப்பின், அவை ஒருதரம் தவறினால் மனத்தளர்ச்சி ஏற்பட்டு மறு முயற்சி செய்யவேண்டிய வலிமை குறையும். ஆகவே எப்பொழுதும் ஆசையை மிதமிஞ்ச விடலாகாது. மேலும் அனுபவித்தால் ஆசை குறையும் என்பர் ஒரு சாரார். விஷயம் அநித்யம், அவைகள் பூர்ண ஸுகத்தைத் தரா; வரும் ஸுகமும், துக்கத்துடன் கலந்தேயிருக்கும்; கிடைக்கும் முன் கிட்டவில்லையே என்ற துக்கம், கிடைத்தபின் தக்கவேண்டுமே என்ற அச்சம்; அதிகமாகிவிட்டால் வெறுப்பு, ஆகிய இவைகளால் விஷய ஸுகம் பூர்ண ஸுகமில்லை. ஆதலால் இவைகளில் உள்ள ஆசை கேடு விளைப்பதே ஒழிய நல்லது அன்று என்ற பகுத்தறிவோடு விஷய ஸுகங்களை அனுபவித்து வந்தால்தான் ஆசை குறைந்துகொண்டே வரும். இல்லாவிடில் நெய்விட அக்நி வளருவதுபோல, அனுபவத்தால் ஆசையும் மனச்சஞ்சலமும் அதிகரிக்கும். எவ்வளவிருந்தும் ஆசை மேலெழும். இதற்கு யயாதி கதையே தகுந்த உதாரணம். ஆதலால் பகுத்தறிவால் ஆசையைக் குறைக்க முயன்றால் மனம் அடங்க சாந்தி உண்டாகும். இதுபற்றியே தாயுமானவரும் 'ஆசைக்கோர் அளவில்லை * * * ஆதலால் உள்ளதே போதும்நான் நான் எனக்குளறியே ஒன்றைவிட்டொன்று பற்றி பாசாடவிக்குளே விழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை அருள்வாய்' என்று கதறுகிறார்.

# விவேக போதினி

தொ 4] விரோதிகிருது ௵ கார்த்திகை ௴ [பகுதி 6


## விக்ரஹாராதனமும் கோயில்களும்

## IMAGE WORSHIP AND TEMPLES

அகண்டமாகிய பிரஹ்மபதத்தை அடைய, தொடக்கத்தில் கண்டமாகிய அக்னிஸூர்யன் முதலிய தோற்ற வஸ்துக்கள் மூலமாக ஆராதனை தியானாதிகள் செய்வது வேத ஸம்மதமான வழி என்றும், இதிலிருந்து சப்த ரூபமான வர்ணனைகளைக்கண்ணுக்குத்தோற்றும்படியான உருவங்களாக்கி ஸாதாரணப் பிராஹ்ம்மணர்களும் பூஜை முதலியன செய்து கடைத்தேறவேண்டிய ஏற்பாடுகள் நமது முன்னோர்கள் செய்தார்கள் என்றும் எடுத்துக் காட்டிவிட்டோம். பொதுவாகப் பிராஹ்ம்மணர் முதலிய எல்லா வர்ணத்தாரும் கடைத்தேற உதவி புரியும் பொருட்டு நமது முன்னோர்கள் இதனோடு நிறுத்திவிடாமல், ஆகம சாஸ்திரங்களை ஏற்படுத்தித் தனிமையாகப் பூஜை செய்து நிர்வஹிக்க முடியாதவரும் அவ்வாறு செய்து தேர்ந்து வருபவரும் ஆகிய எல்லோரும் ஆராதனை செய்து மேன்மை பெற அவைகள் பிரயோகங்களாகிய கோயில்களையும் அமைத்துவிட்டனர். இம்மாதிரி கோயிலில் ஒவ்வொருவனும் தனிமையாக இவ்வாறு மனத்தைச் சாந்த நிலையில் வைத்துக்கொண்டு, கடவுளுக்கு வந்தனை வழிபாடுகள் செய்து வரவேண்டும் என்பதை முன்னே எடுத்துக் கூறியாயிற்று. இங்குக் கோயில் விக்ரஹாராதன மூலமாக இவ்வாறு வேத சாஸ்திர உண்மைகளை வெளிப்படுத்தி ஆராதிப்பவர்கள் எத்தகையராயினும் இவ்வாறு அவர்களைச் சீர்திருத்த முயல்கின்றது என்பதை நன்கு விளக்குவோம்.

‘தேஹமே தேவாலயம் அதனுள்ளிருக்கும் ஜீவனே சிவன்’ என்று முறையிடுகின்றது மைத்ரேயோபநிஷத்து. இந்த ரஹஸ்யத்தை நன்கு விளக்கவே ஏற்பட்டவை கோயில்கள். ஸாதாரணமாக தேஹத்துள்ளிருக்கும் ஆத்மாவே ப்ரஹ்மம் என்று கூறிவிட்டால், இது எல்லோருக்கும் எளிதில் விளங்காது. ஆதலால் தேஹத்தின் அமைப்பைப்போலவே ஆலயம் அமைக்கப்பட்டு, அதிலிருக்கும் தத்வங்களுக்கு ஏற்ப அதனுள் பாகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. யோகமார்க்கத்தில் தேர்ந்தவர் த்வஜஸ்தம்பம் முதுகெலும்பினிடம் இருக்கும் ஸுஷும்னா நாடி என்றும், நந்திகேச்வரர் கருடன் முதலிய கடவுள் முன்னிலையில் காணப்படும் பரமபக்தர் விக்ரஹங்கள் மோக்ஷவாயில் காவலாளர் என்றும் கூறப்படும். சமம்(அடக்கம்) விசாரம் (ஆராய்ச்சி) ஸந்தோஷம் (மனக்கிளர்ச்சி) ஸாது ஸங்கம் (நல்லோரிணக்கம்) ஆகிய இவைகளையும், கர்ப்பக்கிரஹத்தில் பிரகாசிக்கும் மூலலிங்கம் நமது தேகத்துள்ளிருக்கும் ஜீவாத்மாபோலக் காணப்பட்டு உண்மையில் ஸாக்ஷியாகவிருக்கும் பரமாத்மாவையும், இந்த லிங்கத்தின் உத்ஸவ விக்ரஹம் ப்ரபஞ்சரூபமாகப் பரிணமித்து அதனுள் அந்தர்யாமிபோல ஒளிரும் பரம்பொருள் உருவத்தையும், இந்த விக்ரஹங்களைச் சுற்றியிருக்கும் பிராகாரங்கள் ஆவரணங்களை (மறைப்பை)யும், இவைகளைச் சுற்றிவருவது இந்த மறைப்புக்களை நீக்கி நம்முள்ளிருக்கும் பரம்பொருளை உள்ளபடி உணருவதையும் குறிக்கும் என்று ஒருவாறு பொருள் படுத்துவர்.

கோயிலுள் நடத்தப்படும் சடங்குகளும் இம்மாதிரியே உட்பொருள்களை அடக்கி உள்ளன. ஆவாஹன மூலலிங்கத்திற்கு ஸ்தாபிதகாலத்திலேயே பெரியோரால் நடத்தப்பட்டிருக்கிறபடி

யால் அது அவ்வளவு நித்யபூஜையில் முக்கியமான பாகமன்று. அபிஷேகம் அலங்காரம் பூஜை முதலியவைகளுக்கு எல்லாம் தனிமையாக ஒவ்வொருவரும் செய்யும் பூஜையில் விஸ்தரித்தது போலப் பொருள்படுத்திக் கொள்ளலாம். நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது பின்னர் தீபாராதனையே. ஆதியில் தூபம் காட்டுவது பிரஹ்மத்தினிடம் விளக்கமில்லாத அவ்யக்தம் (மாயை) வருவதுபோலக் காணப்படுதல், தீபம் காட்டுவது பரம்பொருளது ஸ்ருஷ்டிகர்த்திருத்வம், இரண்டு மூன்று முதல் பஞ்சஹாரத்தி வரை ஒன்றாக இருப்பது முறையே த்வைதம் (முடிவு, வழி) திரிபுடி (அறிவு, அறிபவன், அறிபடு பொருள் முதலியன) சதுஷ்டயம் (அந்தஃகரணம் நான்கு படுதல்)பஞ்சகம்(பூதங்களாதல்) முதலிய ஸ்ருஷ்டிக் கிரமத்தையும், அநேக ஹாரத்தி அடுக்கு ரூபமாக இருப்பது பிரபஞ்ச வைசித்திரியத்தையும் அநேகத்வத்தையும், பின்னர் முறையே பஞ்சஹாரத்திமுதல் வரிசையாகக் குறைந்து •கும்பஹாரத்திக்கு வருவது ஒடுக்கத்தின் ஒழுங்கைக் காட்டி, அதில் கும்பஹாரத்தி முடிவில் ஜீவனில் எல்லாம் ஒடுங்குவதையும்,பின்னர் வரும் கற்பூரஹாரத்தி அந்த ஜீவனும் கற்பூரம் ஜ்யோதியாய் விடுவது போல விக்ரஹத்தால் குறிக்கப்படும் பரம்பொருளாகி விடுவதையும் நன்கு உணர்த்தும். ஸமுத்திரநீர் அலையாகி நுரையாகிக் கிளம்பி, மடிந்து விழுங்கால் நாமரூபமற்று எவ்வாறு மறுபடி கடல் நீராகின்றதோ, அவ்வாறு எல்லாம் பரம்பொருளிடமே தோன்றி, விசித்ர நாமரூபங்களடைந்து, முடிவில் பரம்பொருளில் ஒடுங்கி அதுவே ஆகின்றது; ஆகவே இங்கிருப்பது பரம்பொருளே ஒழிய வேறொன்றுமல்ல ; மற்றவையெல்லாம் வெறும் இடைத்தோற்றமே ஒழிய வேறல்ல என்பதைத் தீபாராதனை வெகு விரிவாக உணர்த்துகிறது. இங்குக் கூறப்பட்டது எங்கும் நடக்கும் தீபாராதனைகளிலும் காணலாம். ஆனால் இவைகளுக்குமேல் அநேக விடங்களில் விசித்திரமான தீபாராதனைகளும் காணப்படும். அவைகள் சிருஷ்டி வைசித்ரியத்தை மிக விரிவாக உணர்த்துகின்றன என்று மதிக்கலாம்.

கோயிலில் அம்பிகை என்றும், தேவகுமாரர் என்றும் குறிக்கப்படும் விக்ரஹங்கள் உண்டு. அம்பிகை என்னப்படுவது பரம்பொருளது மனைவியாக உருவகப்படுத்தி உள்ளது. இல்லறதர்மத்தில் மனைவிமார் எவ்வாறு முற்றிலும் கணவர் ஆதீனமாகவிருந்து, பாதந்திரிகளாக இருக்கின்றார்களோ அதுபோல அம்பிகையால் குறிக்கப்படும் விஷயமும் பரம்பொருளில் முற்றிலும் அடங்கியதே. மூலலிங்கம் பரம நிலையையும், அம்பிகை அதைச்சென்றடையும் ஞானவைராக்கியம், அப்யாஸம்ஆகிய ஸாதனங்களான சக்திகளையும் உணர்த்தும். இவைகளின் முடிவு பரமநிலையாதலால்,அம்பிகை எப்பொழுதும் பரம்பொருள் ஆதீனம்என்றும்,அம்பிகை ஸஹாயமின்றிப்பரம்பொருளை அணுகமுடியாதென்றும் ஆகமங்கள்கூறும். அம்பிகைக்கு இதனால் முக்திகாந்தா (சிவகாமி) என்ற பெயரும் உண்டு. இக்கருத்தை ஒருவாறு நம்போன்ற பாமரருக்கு வெளிப்படுத்தக் கருணை நிறைந்த பெரியோர், கடவுள் புருஷன்; தகப்பன் போல நம்மைத்தண்டித்துச் சீர்திருத்தும் குணம் வாய்ந்தவர்: அம்பிகையோ தாய்போன்ற கருணை நிறைந்தவள், தகப்பனாகிய கடவுளது கடுமையைச் சிபாரிசு மூலமாக மாற்றும் திறனுடையவள்; ஆகவே அவளைத் துதித்துத் திருப்திசெய்துவிட்டால், நமக்கு எளிதில் பரமபதம் கிடைக்கும் என்று உருவகப் படுத்தியிருக்கின்றனர். இந்த மாதிரியான எண்ணம் அறிவுடையோர்க்கு அதிகமாக ருசிக்காது. மேலும் இம்மாதிரியான எண்ணம், 'என்ன பாபத்தைச் செய்துவிட்டபோதிலும் அம்பிகையைத் துதித்துவிட்டால் அவள் கடவுளுக்குச் சிபாரிசைச் செய்து, நம்மை மன்னித்துவிடும்படி செய்வாள். இவ்வாறு முகஸ்துதியால் கடவுளை ஏமாற்றிவிடலாம்' என்றதுர் எண்ணத்தை நாளடைவில் உண்டாக்கி, ஆராதனை செய்தும் பாபம் நம்மைவிட்டு நீங்கா

மலிருக்கும்படி செய்துவிடும். ஆகவே அறிவு முதிர, கடவுளையும், அம்பிகையையும் தகப்பன் தாயாக மதியாது, ஸாதக ஸாதனமாக மதித்தல் வேண்டும். இதற்காகவே கடவுளைப் புருஷன் உருவில்லாது லிங்காகாரமாகச் சிவன்கோயில்களில் வைத்திருக்கிறது. அப்பொழுது கடவுள் குமாரர்கள் ஸாதகவிஷயத்தில் மனம் செலுத்தி, ஸாதனம் செய்வதால் ஏற்படும் ஞானம் முதலிய அரிய ஆத்மகுணங்களைக் குறிப்பார்கள். கோயிலில் ஏற்பட்டிருக்கும் பள்ளியறை ஸாதக விஷயத்தில் மனம் ஊன்றி ஸாதனங்களில் பழகுவதை உணர்த்தும். இவ்வாறு கருதுவதால் கோயிலில் உள்ள லௌகிகப் பழக்கங்கள் நம் மனத்தை விஷயங்களில் சிதறி ஓடவிடாது தகைந்துவிடும். இப்பள்ளியறை விஷயம் ஆகமப்பிரகாரம் பரப்பிரஹ்மம் இரண்டாகத் தோற்றியது முதல் ப்ரபஞ்ச வைசித்ரியம் ஏற்பட்டுவிட்டது என்பதையும், அவைகள் ஒன்று பட்டால்தான் மோக்ஷநிலை கைகூடும் என்பதையும் உணர்த்தும். எப்படி இருப்பினும், கடவுள் அம்பிகை, குமாரர்கள், பள்ளியறை ஆகிய இவைகளை எக்காலத்தும் உலகதர்மரூபமாகக் கருதவே கூடாது. அவ்வாறு கருதுவதால் சிறப்படைய இடமில்லாமல் போவதோடுகூட, ஸந்மார்க்கத்திற்கு அது பலமான தடையாகவும் ஏற்படும். ஆகவே கோயிற் சடங்குகளை எல்லாம் முற்கூறிய உட்பொருள் விஷயமாகவே கருதி நாம் பழக முயலவேண்டும்.

கோயிற்சடங்குகளுள் வருஷம் ஒருமுறை நடக்கும் பிரஹ்மோத்ஸவமே மிக முக்கியமானது. இதன் ரஹஸ்யப்பொருளை ஆராயப் புகுவோம். இந்த உத்ஸவ ஆரம்பத்தில் கோயில் த்வஜஸ்தம்பத்தில் ஒரு படம் கட்டி, அதிலிருந்து நீண்ட வால்போலத் துணியைக்கட்டி அந்தப் படத்தை த்வஜஸ்தம்பம் உச்சி வரையில் ஏற்றி, வால் பாகத்திலிருக்கும் துணியைக் கொடி மரத்தைச்சுற்றிக்கட்டுவது வழக்கம். இதற்குக் கொடி ஏற்றம் என்று பெயர். இவ்வாறு கொடி ஏறின நாள் முதல் 10-நாள் கோயிலில் திருவிழாக் கொண்டாடுவது வழக்கம். இத்திருவிழாக் காலங்களில் உத்ஸவ விக்ரஹத்தை நன்றாக அலங்கரித்து, ஒவ்வொரு நாளும் இரண்டு வேளையிலும் வேளைக்கு ஒரு வாஹனமாக ஏற்றி, ஊரைச் சுற்றிக்கொண்டு வருவது வழக்கம். இக்காலங்களில் வாத்ய கோஷம், வேதபாராயண பாணவேடிக்கை முதலியவைகளும், ஸ்வாமி வரும் வீதிகள்தோறும் மகர தோரணங்களும், வீட்டு வாயில்கள் தோறும் இழைக்கோலங்களும் காணப்படும். ஒவ்வொரு வீட்டுவாயிலிலும் மங்களதீபம் ஏற்றப்பட்டு, அருகில் வீட்டு யஜமானர், வரும் ஸ்வாமிக்கு மரியாதை செய்யத் தேங்காய் பழங்கள் வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். உத்ஸவம் பத்து நாளும் ஊர் ஜனங்கள் தமக்கு ஏதோ பெரிய சிறப்பு வந்ததாக எண்ணி ஸந்தோஷிப்பார்கள். இவ்வாறு கோயில் கொடி ஏற்றமானது ஊரையே குதூஹலப்படுத்தும். இவைகள் எல்லாம் முற்கூறிய உட்பொருள் விஷயமாக நோக்கில் அருமையான பொருளடக்கியுள்ளனவாக விளங்கும். வாலுடன் கூடிய கொடி த்வஜஸ்தம்பத்தில் ஏறுவது யோகசாஸ்திரப்படி மூலாதாரத்திலிருந்து குண்டலினி சக்தி என்ற பாம்பு கிளம்பி ஸுஷும்ந நாடி வழியாக ஏறி, மூளையாகிய ஸஹஸ்ரதளத்தாமரையாகிய ஸ்தானத்தில் சேருவதே. இவ்வாறு ஏறிவிட்டால் யோகிக்குப் பரமானந்தப் பிராப்தியாகிய உத்தமமான பிறப்பு (உத்ஸவம்) ஏற்படுகிறது. இதுதான் உத்ஸவம். இதில் மோக்ஷவாயிற் காவலர்கள் என்று கூறப்படும் குணங்களைக் குறிக்கும் நந்தி, கருடன் ஆகிய இவைகளில் பகவான் அலங்கரித்து வெளியேறும் உத்ஸவம் மிகச் சிறந்த பாகம் என்பதன் கருத்து இன்னது என்பது இப்பொழுது வெளியாகும். இவ்வாறு கொஞ்சகாலம் ஆனந்தானுபவமிருந்து, முடிவில் இந்த அனுபவ போதமும் இழந்து, பரம்பொருளாகவே யோகி நிற்பான் என்பதை ஸாதனம் ஸாதகத்தில்

முடிவு பெறுவதைக் குறிக்கும் திருக்கல்யாணம் உணர்த்தும்.

முற்கூறிய பொருள்களுடனே கோயிலை நாம் கவனிக்காவிடினும், ஸ்தூலமாகக் கருதுங்காலும் அது பரமரஹஸ்யத்தைக் காட்டுகின்றது. கோயிலிலிருப்பது வெறும் கல், செம்பு முதலியவைகளாலாகிய விக்ரஹங்கள்தாம். அவைகளை மூலமாகக்கொண்டு கோயில் விஷயங்கள் ஒழுங்காக நடந்தேறுகின்றன. நடவாமலிருப்பின் லிங்கத்துக்கு யாதொரு குறைவுமில்லை. அதை மூலமாகக்கொண்டு ஆத்மகுணங்களை ஸம்பாதிக்க ஏற்பட்டிருக்கும் நமக்கே குறைவு. கடைத்தேற வேதவிதிப்படி ஏற்பட்ட மார்க்கத்தால் நாம் கடைத்தேறவில்லை என்பது நமக்கல்லவோ குறை! ஆகவே கடவுள் ஒருவர் உண்டு அவர் ஸந்நிதான மாத்திரத்தால் 'காந்தசிலைமுன் இரும்புகள் சேஷ்டிக்கு மாறுபோல எல்லாம் நடந்தேறுகின்றன என்ற வேதவாக்கியத்தை விசாரித்துணர்ந்தவர்களுக்குக் கோயிலில் உள்ள விக்கிரஹத்தால் இந்தப் பரம ரஹஸ்யத்தை நம் முன்னோர் எல்லோருக்கும் எளிதில் நன்ருக உணர்த்த முயன்றிருக்கின்றனர் என்று தோன்றி ஆனந்தமுண்டாக்காமல் போகுமா? மேலும் உத்ஸவாதிகள் நடக்கும் விமரிசைக்குத்தான் என்ன குறைவு; ஆட்டம், பாட்டு, வாத்யம், பாணவேடிக்கை, வேதகோஷம், பக்திபரவசமாக ஒவ்வொருவர் வாய்விட்டு அரற்றும் ஓசையெல்லாம், உயரத்தூக்கி நிறுத்தி எல்லார்கண்களையும் கவர்ந்திழுப்பதாயும் எவனும் பார்க்காமல் போய்விட முடியாததாயும் உள்ள கடவுள் விக்கிரஹத்திற்காகத்தானே ஏற்பட்டிருப்பன! இவ்விஷயத்தில் செலவழிக்கும் பணத்திற்கு உலகவிஷயமான லாபம் ஏதாவது உண்டோ? அப்படியிருப்பினும் காசுக்கு இருகாசு வட்டி பார்க்கும் வணிகன்கூட இந்த விஷயத்தில் தங்குதடையின்றிக் கடவுளுக்காகச் செலவு செய்யத் துணிய வில்லையா! மேலும் ஒவ்வொருவருடைய மன நோக்கத்திற்கு ஏற்ப அவர்களைத் திருப்திசெய்து கடவுள் ஸந்நிதானத்திற்கு இழுக்கும் உத்ஸவங்களில் இவ்விதமான உள்ளெண்ணங்கள் ஏன் மனக்குவிவை உண்டாக்காமல் போகும்? இவ்வாறு எல்லாம் கடவுள் விஷயமாக ஒவ்வொருவரும் மனக்குதூஹலத்தோடு அவரவர்கள் மனம் போனபடி செய்யும் கைங்கரியம் என்ற எண்ணம்தான் இப்பிரமாதமான சப்தக் குழப்பங்களுக்கிடையில் நமக்கு மனக்குவிவை உண்டாக்குவது. கோபுரவாயிலில் பகவான் புறப்பட்டு வருங்கால் எல்லோரும் 'ஹர ஹர' வென்று கூவி சிரமேல் கரங்குவிக்குங்கால் இந்தக் குவிவு எல்லோருக்கும் வெளிப்படையாய் விளங்கும். மற்றைய எல்லா ஸமயங்களிலும் இது ஊன்றி விசாரிப்போருக்கு நன்கு விளங்கும். ஆதலால் கடவுள் விஷயத்தில் நிச்சப்தமாக விருந்து இதர மதஸ்தர்கள்போல உத்ஸவம் கொண்டாடினால்தான் மனக்குவிவு உண்டாகும் என்று அபிப்பிராயப்படும் சில மேதாவிகள் தீர விசாரித்தறியாது அவஸரமாகப் புதிய விஷயங்கள் எல்லாம் நன்மை; பழயவைகள் எல்லாம் குற்றம் என்று மதிக்கும் குணம் வாய்ந்தவரே. மேலும் சாஸ்திரங்களில் ப்ரஹ்வரிஷ்டன் (உலக ப்ரக்ஞையே அற்று ஸதா ப்ரஹ்மமாகவே நிற்பவன்)* நிலையிலிருந்து ஒரு மஹான் இவ்வாறு உலக உபகாரம் செய்யாமற் செய்யமுடியும் என்ற வேதரஹஸ்யத்தை இவ் விக்ரஹங்கள் நன்ருக வெளிப்படுத்தும். என்ன கஷ்ட நிலைகள் வந்தபோதிலும், எவ்வளவு மஹான்கள் போய்விட்டபோதிலும், கோயில் காரியங்கள் நிலைபெற்று நெடுநாள் விடாது நடந்துவருவதும், விக்கிரஹங்கள் மாருது ஒரே மாதிரி நிலைத்திருப்பதும் கடவுளது அழிவற்ற தன்மையை நன்ருகக்குறிக்கும். ஆகவே கோயில் விஷயங்களை ஸ்தூலமாகக் கருதினும் ஆஸ்திகன் பிழைத்துத் தேற வழியிருக்கின்றது.

இவ்வளவு சிறந்த வழிபாடாயினும் கோயில் ஆராதனத்தில் படுகுழி ஒன்று உண்டு. அது காம்ய ஆராதனம் என்பதே. தொடங்குங்கால் உலக ஸுகம் வேண்டும் என்றும், அது கைகூடினல் சிற்சில கைங்கரியம் செய்கிறேன் என்றும் வேண்டிக்கொண்டு காம்யமாக ஆராதனை செய்யலாம். ஆனல் இதிலேயே நின்றுவிடுவதுதான் வழிபடுபவனைக் குங்குமம்

சுமக்கும் கழுதையாக்கி விடுவது. கோயிலுக்குப் போயும் இவன் கடைத்தேறுமல் போய் விடுகிறுன். இதென்ன கஷ்டம்! ராமேச்வரம் போயும் சனிச்சரன் விடவில்லையே! என்று தோன்றும். இவ்வளவுதானு? 'அரச மரத்தைப் பிடித்த சனி பிள்ளையாரையும் பிடித்தது' என்ற கதையாக, ஆராதிக்கும் தேவதையும் வர வர இம்மாதிரி பக்தர்களால் ஒளி சக்தி முதலியவை களில் மழுங்கி ஸாத்விக தேவதா நிலையிலிருந்து, ராஜஸ தாமஸ தேவதைகளாகி, முடிவில் க்ஷுத்ர தேவதையுமாகிவிடும். அந்தக் கோயில் பெரியோர் சாந்தமாக அணுகக்கூடாத விடமும் ஆகிவிடும். ஆதலால்தான், 'தொழுதவன் தெய்வத்தைக் கெடுத்தான்' என்ற பழமொழி, 'எழுதினவன் ஏட்டைக்கெடுத்தான், படித்தவன் பாட்டைக் கெடுத்தான்' என்பவைகளோடு கூடச்சேர்ந்து வழங்கி வருகிறது. ஸாத்விக தேவதையாகிய மகா விஷ்ணுவான திருப்பதி ஸ்ரீநிவாஸன் கேவலம் ஆவேசமாக வரும் ஐயம்பிடாரி போலானதையும், ராமபக்தசிகாமணியாகி அவரிடம் ஈடுபட்டுத்தனியிருப்பிழந்த ஹனுமார் குட்டிச்சாத்தான் போல உபாஸகர்கள் கையிலகப்பட்டுத்தொழிற்படுவதையும், பரமஞானியாகிய பரப்ரஹ்மமான ஸாமிநாதன் என்னப்படும் பாலஸுப்ரமணியக் கடவுள், க்ஷுத்ர தேவதையைப்போல பிரார்த்தனை பெறத் தயாரயிருப்பதையும் கண்ணுற்றுல் எந்தப்பக்தர் மனம்தான் வருந்தாது? இவ்வாறுனவெல்லாம் கும்பிடப்போனவன் குடியைக்கெடுத்ததால்தான் ஏற்பட்டது. இதனுல் இந்தத் தேவதைகளை அன்புடன் ஆராதிக்கும் பக்தர்களுக்கு யாதொரு குறைவுமில்லை. இந்த மூர்த்தங்களுக்கு ஒரு இழிவும் இல்லை. முடிவாக ஏற்பட்டதென்னவென்றுல், அப்பியாஸ நிலையிலிருக்கும் அன்பர்கள் இந்தக்காம்ய விடங்களை அணுகி இந்தத்தேவதைகளைச் சாந்தமாக ஆராதிக்கவும் முடியாது; இந்தச் சிறந்த தேவதைகளிடமிருந்து காம்யமாக ஆராதிப்பவர்களுக்கு யாதொரு சிறப்பும் வாராது. இவ்வளவுதான்! ஆதலால் கோயில்ஆராதனத்தில் காம்ய நிலையைச் சீக்கிரம் விட்டு நீங்கவேண்டும், இவ்வாறு உண்மையாகக் கடவுளை வழிபட்டுத் தேறுவதற்குத்தான்ஔவை 'கோயிலில்லாஊரில் குடியிருக்கவேண்டாம்' என்றும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் கூறியிருக்கிறுள்.

## டில்லிமாநகரமும்: சத்ரபதியின் தர்பாரும்

## DELHI & THE EMPEROR'S DURBAR

காண்டவ ப்ரஸ்தமென்று புகழ்பெற்றிருந்த காட்டருகே தருமர், தாம் அரசு செலுத்தப் பெரியோரது அனுமதியின் பேரில் அஸ்தினுபுரத்திற்கு அருகு 50 மைல் தூரத்திற்குள் கட்டியது **இந்திரப்ரஸ்தம்.** இதுவே தருமர் இருந்த இடம். குருக்ஷேத்ர நகரம். அருகு இருந்த காண்டவத்தை அக்னிக்கு அர்ச்சுனன் இரையாக்கி நகரத்தை விஸ்தரித்தனன். பாரதயுத்த முடிவில் அஸ்தினுபுரமும் இந்திரப்ரஸ்தமும் ஒன்றுய் மயங்கி இருக்கலாம் என்று தோன்றுகிறது. இதற்கு ஆதாரங்களில்லை. இந்நகரமே முன் இந்திய நாட்டில் **புரோத்தமமென்று** கூறப்பட்டது. இந்நகர்க்குச் சக்ரபுரி, சக்ரப்ரஸ்தம், சதாக்ரதுப்ரஸ்தம், காண்டவப்ரஸ்தம் என்னும் வேறு அபிதானங்களுண்டு. அவை இந்திரப்ரஸ்த மென்னும் பொருளேபடும். பாண்டவர் வம்சத்தினர்க்குப் பின் இந்நகரிலே யாதவர் மன்னன் அனிருத்தன் மகன் வைரன் சக்கரவர்த்தியாக ஏற்படுத்தப்பட்டனன். மற்றும் இந்நகர் சரிதை இதிகாச புராணங்களிலிருந்து இதற்கு மேல் வெளிப்படையாக வில்லை. (பௌத்த அரசர் காலத்து க்ஷீணிக்காவிடினும், ஓங்கித் தலை நகரமாக விளங்கியதாகத் தெரியவில்லை. அவர் காலத்து முக்கிய நகரம் பாடலீபுரம் என்னும் பாலிபோத்திரமென்பது.)

அனிருத்தன் காலத்திலிருந்து 11-வது நூற்றுண்டு வரை நம்மால் ஒன்றும் இப்புரத்தைப் பற்றி சொல்லமுடியாது. 11-வது நூற்றுண்டில், தோமரவம்சத்து அனங்கபாலனென்னும் ராஜபுத்ரவீரன் "செய்ய கோட்டை"யைக் கட்டினுன். இது இப்பொழுது குடும்பினர் இருக்குமிடத்திருந்தது. கோட்டையோடு ஒரு நகருங் கட்டினன். இவனே சந்த்ரகுப்த விக்ரமாதித்யனுடைய புகழ்பெற்ற அயசிலா சாதனத்தை வட

மதுரையிலிருந்து பெயர்த்துக் கோயிற்கலங்கார மாக இங்கு வைத்ததாகத் தெரியவருகிறது. கி. பி. 1052. (இக்கோயில்பொருள்களைக்கொண்டு ஆப்கானியர் மஸூதி கட்டினர்.) அவ்வரசன் இந்த ஸ்தூபியைக்கொண்டு வரப்போகும்பொழுது ஓர் பார்ப்பனன், "அதன் அடிவாஸுகித் தலைவரை யுள்ளமையால் அந்நகர் நீடித்திருக்கும் நிலைமை யது" என்று கூறினன். அரசனும் தோண்டியபொழுது அதனடியிலிருந்து வாஸுகியின் தலையிலிருந்து ரத்தம்வரப் பயந்துஅதை மற்றும் இருந்த இடமே வைக்கமுடியாது திகைத்தனன். (இதுவே அவனிராஜ்ய மழிவிற்குங் காரணமென்பர்). டிஹ்லமாக இருந்த ஸ்தூபியின் சம்பந்தத்தால் கட்டிய நகர்க்கு டிஹ்லி எனப்பெயர் வந்ததென்பர். இது பிற்காலத்து மதியூகக்கதை யென்றே சொல்லவேண்டும். ஸாதாரணமாக ஹிந்துக்களெல்லாம் டில்லி என்பரே யல்லாது டிஹ்லி என்று சொல்வாரில்லை. டிஹ்லி எனப் பெயர்வந்தது மகமதியர் அரசாண்ட காலத்தில்தான். டில் என்னும் அடியைக்கொண்டு டில்லி எனப் பெயர் வந்திருக்கவேண்டும். டில் எனில் பெருமை எனப் பொருள்படும். பெருமைமிக்க நகரம் டில்லி என ஆயிற்று. இந்திர பிரஸ்தத்தைப் புரோத்தமம் என்றே பாரதத்திலும் கூறப்பட்டுள்ளது. அவ்விந்திரப்ரஸ்தமே இப்பொழுது டில்லி என வழங்கப்பெற்று வருவதும்.

அநங்கபாலன் காலத்திற்குப்பின் ஆஜமீளத் தலைவன் விசாலதேவன் தலைநகராய் விளங்கியது. அவன் பேரன், பெரும்பெயரும் கீர்த்தியும்பெற்ற பிருத்விராயின் காலத்து இந்நகரம் விசாலிக்கப் பட்டு சுற்றும் புறச்சுவர்கள் எழுப்பப்பட்டன. இன்னமும் குடிப்பினர் அருகும் காணலாம். அவன் காலத்து மஹம்மதியரை எதிர்த்துப் பாஞ்சால நாட்டிற்கும் குருநாட்டிற்கும் டில்லியைத் தலை நகராக ஏற்படுத்தினன். மஹம்மத் கோரியினால் பிருத்விராய் துரத்தப்பட்டபின் இப்பெரும்புரம் மஹம்மதியர் கைக்குள் விழுந்தது.

அவரிடம் பலநூற்றாண்டு நிலைத்திருந்தது. குட்புடீன் காலத்தே இங்கே குடுப்மினர் எழுப்பப்பட்டது. அவனே தன் பெயரால் விளங்கும் பெரிய மஸூதியையும் கட்டியது. அதன்பின் சில வலியற்றோர்களால் ஆளப்பட்டு ஆல்டமஷ், பால்பன் என்பவர்களது தலை நகராய் இருந்தகாலத்து மஹம்மதிய நகராய் விளங்கி, ஹிந்துக்களின் ஹிம்ஸைக்கே புரமாக விளங்கியது. அக்காலத்து மொகலாயர் படையெழுச்சியால் ஓடிவந்த அரச கூட்டங்கள் அவன் ஸபையில் அனேகமிருந்தன. அவர்களின் பெயர்களைக்கொண்டே டில்லியின் தெருக்களின் பெயரெல்லாம் அமைக்கப்பட்டது. இதை யின்னமும் காணலாம். இவ்வரசன் வம்சத்திற்குப்பின் கில்ஜீ வம்சத்தினர் டில்லியைக் கைக்கொண்டனர். (1288-கி. பி.) அப்பொழுது டில்லிச்சுவரெல்லாம் படைகளின் வாயில் பட்டுத் தத்தளித்தது. இந்தச்சமயத்தில் ஜிலாலுடீன் கில்ஜி தன்னகருள் மஹம்மதியராகிய மொகலாயர்க்காக ஓர் தனியிடம் உண்டாக்கினன். இதற்கு மொகலாய புரமென்று பெயர். இதை இப்பொழுதுங் காணலாம். இவன் பின்வந்த அல்லா உடீன் டில்லியை மொகலாயர் நாசஞ் செய்வதைத் தடுத்தான். எதிர்த்தவரைப் பலமுறையும் தோல்வியடையச் செய்தனன். இந்த அரசன் காலத்தில்தான் மாலிக்காபர் தக்ஷிணம் படை எடுத்துக் கொள்ளையிட்டது. அவன் கொண்டுவந்த பொருள் இராஜாங்க பொக்கிஷத்தில் சேர்ந்தும் பிரயோஜனப்படாமலே அழிந்து போய்விட்டது. பின் காபர் தன் தலைவனைக் கொன்று நகரைக் கைக்கொள்ள முயன்று குஸூரு என்னும் கீழ்மகன் கைக்கிரையானன். இவனைத் தோக்லக் வம்சத்தார் கொலை செய்து டில்லி நகரைப் பற்றிக் கொண்டனர். இவ்வம்சத்து அரசனுகிய மஹமத பின் தோக்லக் என்னும் பித்துக்கொண்ட அரசனல் தலை நகரம் டில்லியிலிருந்து தோக்லக் பாத்திற்கு மாற்ற மும்முறை முயற்சி செய்யப் படினும், டேன்றியர் நகரத்து இன்பதூதன் என்னும் தேசாசானல் காணப்பட்டு இந்திய

ஞட்டு பெருநகர் என்று புகழப்பெற்றது. அத்தேசாசான் இந்நகரத்தில் பிரியதாஸி என்னும் அசோகசக்கரவர்த்தியினால் எழுப்பப்பட்ட புத்த நிலையாகிய அசோக ஸ்தூபியைப் பற்றிப் புகழ்ந்து பேசியது இந்தியாது பெருமையையே குறிக்கும்.

இவ்வம்சத்தினர்க்குப்பின் பிரோஜ்ஷா ராஜ்யமாண்ட காலத்துத் தன் பின்னோர் செய்த பாபத்திற்குப் பிரயாஸ்சித்தமாகப் பிராஜஷபாத் என்னும் உபநகரமுண்டாக்கியதன்றித் தர்மஸம்ஸ்தாபனர்த்தஞ் செய்து, முன் மஹமதியர் செய்த அழிவை ஒழித்து டில்லியைப் புதிப்பித்து, தன் ராஜ்ய நிர்மாணங்களைப் பிராஜஷபாத் மஸூதியில் சாஸநஞ் செய்வித்தனன். இம்மஹானுக்குப் பின் வலியற்றார் அரசாண்டு வந்தனர். அக்காலத்து தாமர்லேன் என்னும் மேற்றிசை கொள்ளைக்காரன் ஊரைக் கவர்ந்து, ரக்தப்ரவாஹத்தில் மிதக்கச் செய்ததன்றி, தான் செய்த பெருஞ் செயற்குத் தெய்வாராதனம் செய்தனன் எனத் தெரியவருகிறது. இக்கொள்ளையே மொகலாயர் டில்லியில் முதல் குடிகொள்ள அடிகொடுத்தது. தாமர்லேன் கொள்ளைக்குப்பின் இரண்டுமாதம் அராஜகம் டில்லியில் விளங்கியது. ஊரைவிட்ட ஜனங்களும் மெதுவாக மற்றும் குடியேற, ஜனமற்ற நகரம் மற்றும் ஜனநிறைந்தது. இதில் மிகவிளங்கிய பாகத்திற்கே புதிய நகரம் என்று பெயர்.

இதற்குப்பின் ஸய்யத் வம்சமும் லோடி வம்சத்தாரும் ராஜ்யத் தலைமையைக் கண்டதும், தலை நகரம் டில்லியிலிருந்து ஆக்ராவிற்கு மாற்றப்படினும், புராதன நகரம் தனது பெருமையையும் பெயரையும் ஒழிக்கவில்லை. இவ்வம்சத்தினர்க்குப் பின் தாமர்லேன் வம்சத்து மொகலாயன் டில்லியைக் கைப்பற்றிக்கொண்டனன். அவன் மகன் ஹுமாயூன் டில்லியையே தலைநகராகப் பாவித்தனன். அவன் இந்திரப்ரஸ்தமிருந்த இடத்து புரான கில்லம்(பழங்கோட்டை) என்னும் கோட்டையைக் கட்டினான். ஹுமாயூனைத்துரத்தி டில்லியைக் கைப்பற்றிய ஷர்ஷா கோட்டையின் அகச்சுவர்களையும் புறச்சுவரையும் புதிப்பித்துத் தடப்படுத்தினன். அவன் கட்டிய கோட்டைவழியில் ஒன்றாகிய லால்தார்வாஜ் என்பதை இன்னமும் காணலாம். அவன் மகன் ஸலிம் கரம் என்னும் உபபுரியைக் கட்டினான். ஆக்பரும் ஜீஹாங்கிரும் ஆண்டகாலத்து தமது காலத்தை முழுதும் ஆக்ராவிலே செலவிட்டனர். ஆக்பர்காலத்து டில்லி நகரம் ஆக்ராவைக் காட்டிலும் ஓங்கவில்லை என்பது "**எனி ஆக்பாரி**" என்னும் புத்தகத்திலிருந்து வெளிப்படும். ஜீஹாங்கிர் மகன் ஷாஜஹான் டில்லியையே தலைநகராகக் கொண்டாடினன். நகரமுழுதையும் புதுப்பித்தனன். அந்நகரமே ஷஜஹானபாத் என்று சொல்லப்படுவது. பிரோஜஷபாத்தும், ஷர்ஷா கட்டிய உபபுரமும் கிலமாயிருந்தமையால் அவற்றின் பொருளைக்கொண்டு ஊரின் கொத்தளங்களையும், கோட்டைவரிசைகளையும், உறுப்புகளையும் சீர்திருத்தி, நகரைப் பெரிதாகச் செய்து, பதினேடி அகலமுள்ள சுவரால் மதிலுங் கட்டினன். ஜம்மா மஸூதியும் இவனே கட்டியது. இந்த ஷாஜஹானபாத்தையே சௌக்கியத்தின்பொருட்டாக ஜாஹனபாத் என்பார். இதுவே இப்பொழுது டில்லிமா நகரமாக விளங்குவதும். இப்புரத்தை முற்றும் கட்டுவதற்குள் ஷாஜஹானை அவனது கொடிய மகன் சிறையிட தான் கட்டிய நகரைக் காணாது இறந்தான். இதன்பின் சிறிது காலந் தவிர முற்றும் இதுவே மொகலாயரது தலைநகரமாக விளங்கியது. அவுரங்கஜீப் காலத்து கஷ்டமுண்டு, பின்வந்த வலியற்றாரால் முற்றுகையுண்டு, சிவாஜியின் கோபத்திற்கு மெலிந்தும், மஹராஷ்டிரத்தாரது கோளுக்கு நடுங்கியும் பெரியயுத்தகளமாக விளங்கியும்,லாராட் லேக்கால் 1803-வருஷம் செப்டம்பர்மீ 11உ ஆங்கிலேய ராஜ்யத்தின் போஷணையின் கீழ் வந்தது.

பிரிடிஷ் ராஜாங்க போஷணையிலிருப்பினும் மொகலாய அரசர்களது பெயராலேயே ராஜ்யம் நடத்தப்பட்டு வந்தது. மொகலாய வம்சத்துக்

கடைசியரசனும், அரசி விக்டோரியா அம்மையும் ஒரே வருஷத்தில்தான் பட்டமடைந்தனர். சிப்பாய் கலகத்தில் மற்றும் டில்லி அமளி குமளியாகித் தத்தளித்தது. 1857-ம் வருஷம் செப்டம்பர் மாதம் ஈஸ்டிந்தியா கும்பெனியாரது ராணுவத்தாரால் கொள்ளப்பட்டு, அடுத்த வருஷம், ஆங்கில அரசாட்சியின் கீழ்க் கொள்ளப்பட்டது. இதற்குள் முழு இந்தியநாடும் ஆங்கில ராஜ்யத்தின் கீழ் வந்துவிட்டது. அவ்வருஷமே ராணி விக்டோரியாவினது இந்தியா நாட்டரசர்களுக்கும் ஜனங்களுக்கும் விடுத்த அறிக்கைப் பத்திரம் அவ்விடமே படிக்கப்பட்டது. 1876-ம் வருஷம் அரசர், ஏழாவது எட்வர்டார் டில்லியில் விஜயம் செய்தார். 1877-ம் வருஷம் அரசி அம்மை விக்டோரியா இந்திய நாட்டரசியென்னும் பெயரை வஹித்தனர். அவர் பின் எட்வர்டார் ராஜ்ய நிர்வாஹத்தைப் பெற்றுக்கொண்டதும் டில்லிமா நகரத்திலேயே அப்பொழுது ராஜப்ரதிநிதியாக இருந்த கர்ஸன் ப்ரபுவால் தர்பார் நடத்தப் பெற்றது. நமது அரசர் எட்வர்டார் சென்ற வருஷம் தேக வியோகமடைந்ததும், தான் 1905 வருஷத்தில் கண்டநாட்டில் தானே முடிபுனைய நினைத்திருந்திய தேவியை மணக்க வருமன்னன் ஜார்ஜியாரது முடிபுனையும் நகராக விளங்கும் டில்லிநகரத்து வைபவமிற்றெனக் கூறப்பாலதோ ?

இந்திய நாட்டின் விருத்தியோடு விருத்தியும், தேய்வோடு தேய்வும் அடைந்து, பல அரசர் முடிபுனைந்த நகராகி, மதங்கள் பலவற்றின் இராஜ்யமாக விளங்கிய இந்த்ரப்ரஸ்தம் இந்திய நாட்டின் முகம்போல் விளங்கி, முடிபுனைபத் தக்க நகராகி இருக்க அங்கு நமது ஐபன் அரசன் ஐந்தாவது ஜார்ஜியார் இந்திய நாட்டின் திருமுடியை முடிப்பது எல்லார் மனத்தும் மிக்க ஆநந்தத்தை யூட்டாதிருக்குமா ?

அவ்விடஞ் செல்வார் முடிபுனை கோலங்கண்டு தமது மனத்தை மன்னன்பால் ஈடு செய்வதன்றி ஊரின் அழகானும்,வளப்பத்தினுலும், பெருமையாலும் விருத்தாந்தங்களானும் மனத்திநுத்தப விக்கப்படும் ஆவற்கு உட்பட்டுச் சென்றங்கு காணவேண்டிய விஷயங்கள் பல உள ; அவை வருமாறு:—

1. **இந்திரப்ரஸ்த ஸ்தானம்.**—இதற்கு இப்பொழுது இந்திரபநம் என்று பெயர். புரான கில்லம் என்றும் பெயர். இப்பொழுதிய நகரத்திற்குத் தெற்கு இரண்டுமைல் தூரத்திலிருப்பது. இது காண்டவப்ரஸ்தத்திலிருப்பது. இது டில்லி மாநகரத்து ஆதிபீடம். ஹிந்து அரசர் காலத்து **புரோத்தமம்** என்னும் பெயரோடு சிறப்புற்று விளங்கியது. இவ்விடமே தருமரால் ராஜஸூய யாகம் இயற்றப்பட்டது. (ஷர்ஷா ஆண்ட காலத்திற்கு இதன் பெயரை ஷர்கர் என்னும் பெயரால் மாற்ற முயற்சித்தான்.) இவ்விடத்தினருகு நிகமபோதகட்டமென்னும் பெருஞ்சிவ க்ஷேத்ரமிருக்கின்றது. இங்கே சிவபிரான் ஒழிந்த வேதங்களை மீண்டும் வரச்செய்தனர். இப் புரான கில்லத்தில் ஸோமவார அமாவாசைகளில் பெருஞ்சந்தை கூடும். இல்லத்தருகே பானிபட் என்னும் சரித்ரப் பெயர்பற்ற இடமிருக்கின்றது. அதனருகு பக்வதம், சோனபதம் திலபதம் என்னும் இடங்கள் இருக்கின்றன. இவ்விடம் யாவரும் காணவேண்டியது. இந்தியாவின் ஆதிநகரம்.

2. பிரோஜஷாபாத்.—டில்லிக்குத் தென் அரைமயிலுக்குள் யமுனைக்கரையில் இருப்பது. இந்தப் பாகம் பிரோஜஷாவால் கட்டப்பட்டது. இப் பாகத்தில் ஸீதாராம பஜாரின் முனையில் ராஜீயா ஸுல்டானாவின் ஸமாதி இருக்கின்றது. இந்தியாவின் முதல் அரசியின் கல்லறையே அது. அக்நாள்களில் குஷக்-யி-பிராஜ்ஷா என்று பெயர். இவ்விடம் பெரும் ரணரங்கமாக மாறி கிலமானதும் இதன் பொருள்களைக்கொண்டே ஷாஜஹான் புதுநகரம் கட்டியது. இந் நகரத்து வடப்பக்கத்து தலைவாயிலே லால்தர்வாஜா என்னும் பெயர்கொண்டது. இதற்குத் தெற்கில் இப்பொழுது கைதிகளை யிடும் ஜயிலே

பரீட்கான் கட்டிய பெருஞ்சத்திரமாகும். இதற்கருகே பெயர்பெற்ற யமுனமஸூதி (ஜும்மாமஸ்ஜிட்) பிராஜஷாவால் கட்டப்பட்டது. இது சித்ரம் நிறைந்து அழகு பொலிந்து விளங்குவது. இந்தப் பாகத்திலேதான் அசோகனது கல் ஸ்தம்பம் இருக்கின்றது. இதைப்பொதுஜனங்கள் லாத் என்பர். இந்த ஸ்தம்பம் தோப்ராவிலிருந்து 42 சகட்டையுடைய வண்டியில் இலவம்பஞ்சமனியில் சேமித்து 5000 பேர்களால் இழுக்கப்பட்டு இந்த இடத்தில் முன் அது இருந்த இடத்தில் இருந்தவாறு பதிப்பிக்கப்பட்டது. இது நிலையில் நாட்டப்பட்ட விமரிசையைக் கண்ட விசித்திரத்தை, ஜியாயுத்தின் பர்ணீ, அவர் எழுதிய அக்காலத்து சரித்ரத்தில் விவரித்துரைத்திருக்கின்றனர்.

3. **புரான கில்லத்தருகாமை.**—புரான கில்லத்தருகாமையில் பல மொகலாய அரசரது மஸூதிகள் இருக்கின்றன. அவையன்றி, ஜந்த்ரமந்திரமென்னும் ஜயபுரத்தரசரால் கட்டப்பட்ட வான சாஸ்திரசாலை யிருக்கின்றது. ஜாட்படையால் மிக நாசமடைந்திருப்பினும் மத்யரேகா பரிமாண நிலை, நக்ஷத்ர கலை விபாகஞ் செய்யும் அளவைகளையுங் குறிப்பிக்கும் ஸ்படிக கமான் கொண்ட ககோளபரீட்சா சாலைகளிருக்கின்றன.

4. **ஜஹன்பநா.**—இவ்விடத்திற் கருகாமை டைமூர் கொள்ளையிட்ட ஸிரிக்கோட்டையிருக்கின்றது. ஷர்ஷாவின் மஸூதியும் இதனருகே இருப்பது. ஹூமாயூன் கீழ்வீழ்ந்திறந்த மாடியும் இங்கே இருக்கின்றது. இப்நாவினுள் இருக்கும் பத்மண்டயிலிருந்து ஊரின் அழகை நன்கு காணலாம். டைமூர் கொள்ளையிட்டபின் தன் படைத்தலைவரோடு கலந்த இடமாகிய ஹாஜ் காஸ் என்னும் இடம் பநாவின் மேற்பால் இரண்டு மைல் தூரத்தது.

5. **கில-ராய்-பிதரா.**—அநங்கபாலனும், பிருத்விராயும், அவன் வம்சத்தினரும் அரசாண்ட இடம். இங்கு அநேக கோட்டைகளிருக்கின்றன. அதன்றி அயஸ்தம்பம் ஒன்று இங்கு மிகு பிரஸித்தியாக விளங்கும். இந்த ஸ்தம்பத்தில் தான் சந்திரகுப்த விக்ரமாதித்யனது சாஸனம் செதுக்கப்பட்டிருப்பது. இதன் உயரம் அடிவாரம் உள்ளிட்டு 23¾ அடி. இதன் பருமன் அடியில் 164 அங்குலமும், மேற்பாங்கில் 12 அங்குல பரிமாணமாகும். இதன் வயது கிட்டத்தட்ட 1500 வருஷங்களுக்கதிகம். கொஞ்சமும் களிம்படையாது உலகத்தை மயக்குவதன்றி உலோஹ தத்துவ சாஸ்திரியின் மனத்தையும் வெருட்டி விளங்குகிறது. இது இந்தியாது மதியூகத்தையும் ரஸாயன சாஸ்திரப்பயிற்சியையும் குறிப்பிக்கும். யாவரும் பார்க்கவேண்டிய காட்சி. உலகத்தில் எங்கும் இரும்பை தட்டி நீட்ட முடியாத காலத்து பெருந்தொகுதியான இரும்பையடித்து 23 அடி நீட்டி என்றைக்கும் களிம்படையாது, கலப்பில்லா சுத்த இரும்பாக விளங்க வைத்த பெரியோரின் செயலைக் கண்டெந்தக் கைதான் தலைமேல் குவியாது. இது நிற்க, இப்பாகத்திலே ஜைனரது கைப்பழக்கமும் மனப்பழக்கமும் மிகுதியாக விளங்குவது. இவ்விடத்திலே தான் பிருத்விராயனுல் கட்டப்பட்ட ஆலயமும் இருக்கின்றது.

இவ்விரும்புத்தூணுக் கருகாமையே மஹம்மதிய அரசன் குட்புடீன் கட்டிவைத்ததாகச் சொல்லப்படும் ஜய ஸ்தம்பமாகிய குடுப்மினர் லோகப்பிரஸித்தியாக விளங்குவது. இதையும் இரும்புத்தூணையும் புகழாத்ரர் யாருமில்லை. இக்குடுப்மினர் மனத்தை யிழுத்துத் தன்பால் கொள்ளும் தன்மை வாய்ந்தது. ஓவிய சிறப்பிற்கும், கற்பனைப் பெருமைக்கும்,சிற்ப நுட்பத்திற்கும் பெயர்போனது. இதற்கிணை இனி இவ்வுலகில் கிடையாத பாக்கியம் பெற்றது. இந்தியாவின் த்வஜஸ்தம்பம்போல் விளங்குவது. இதைக் காணுதார் நேத்ரானந்தம்பெற்றுர் இல்லை என்றே சொல்லவேண்டியது. இதின் இயற்றுகையில் பல நாட்டுக் கைத்தொழில் கலந்தாற் போலக் காணினும் சைநரது கைத்திறமும் ஹிந்துக்களின் கைத்திறமுமே மேலோங்கி நிற்கும். இது பிரத்விராயரால் கட்டப்பட்ட ஜயஸ்தம்பமாகியது, குட்புடீனுல் கவரப்பட்டு அவன் பெயரால் விளங்கியதாகவும் கொள்கையுண்டு. அதற்கு ஆதாரங்கள் பல.

குடுப்மினருக் கருகாமையிலிருக்கும் குடுப் மஸூதியும் நேத்ரோத்ஸவமென்றே சொல்ல

வேண்டும். இதன் பக்கத்திலே மஹ்ராளி என்னும் சந்தைகூடும் இடம் இருக்கின்றது.

6. டோக்லகபாத்.—இதில் தகப்பனைக் கொன்று அவனைப் புதைத்த இடத்தில் அழகில் சிறக்கக்கட்டிய டாக்லக்கோரி மனத்திற்கினியது. இது மஹம்மத் பின் டோக்லாக் வேலை. அதற்கெதிரில் இருக்கும் ஏரியில் பிரதிபலித்துத் தேஜோமயமாக விளங்குந்தன்மை வாய்ந்தது. இதற்கிரண்டு மைல்களுக்கப்பால் பெரிய கற்குளமொன்றுண்டு.

7. ஷாஜஹானபாத்.—இவ்விடத்தில் தான் இக்காலத்திய கட்டடங்களெல்லாம் இருப்பது. இதனுள் ஜும்மாமஸூதியும் ஜைனர்கோயிலும் இருக்கின்றன. முற்றுகை யிடமும் ராணுவ ரங்கமு மிங்குதான். இவற்றின் அருகே முற்றுகையிற் சாய்ந்த பகைவரை நாசஞ்செய்து நாசமடைந்த ஒன்பதுபடைவீரர்களின் ஞாபகச் சின்னமாக ஓர்பலகை பதிக்கப்பட்டிருக்கிறது.

இது முதலாய பல ஆச்சரியமான விஷயங்களை யூட்டக்கூடியதும், தன்னோடே சரித்திரம் வாழப்பெற்றதும் ஆகிய இடங்கள் டில்லி நகரத்திற் பல. 4000 வருஷங்களுக்கு முன்னிருந்து தலைநகராக வாழ்ந்த நகரத்தில் இத்தகையன இருப்பது அசாத்தியமன்று. பல ராஜ்யத்தின் வரிசையைக் கண்டும், பல மதங்களின் தலைமையைக் கண்டும், தன் சரித்திரமுங் குன்றாது சுக துக்கங்களை அநுபவித்து வந்திருப்பினும் அரசர்களுக்கு முடிபுனையும் இடமாகவே எப்பொழுதும் இருந்ததன்றி நமது அரசன் பல்லாயிரம் மைல் தூரத்திலிருந்து வந்து, நமது மனத்தை உயர்த்தவேண்டிய எண்ணங்கொண்டு நம்மேல், முன்பு சென்னையில் விஜயஞ்செய்த காலத்துக் காட்டிய கருணைக்கடலின் அலை வீசி, அதனடுவே சக்ரவர்த்தித் திருத்தன்மையாகிய பகலவன் உதயஞ்செய்யுங்காலத்து நமது ஹ்ருதயத்தாமரை மலர்ந்து பக்தியென்னுந் தேன் கசிய சத்ரபதியின் மனமாகிய வண்டு அதன் இனிமையை அனுபவியாதிருக்க முடியாது. இது இந்தியநாடு செய்த பாக்கியமே! அரசனே இங்குவந்து முடிபுனைந்தது இன்றே அல்லவா? தன்னூர் உறவு யாவும்விட்டு இராஜ்யதர்மத்தினால் தூண்டப்பட்டு முடிபுனைய இங்கு வந்த மஹானது அன்பிற்கு அளவுமுண்டோ?

## ஆத்திசூடி விளக்கம்

### MORAL SAYINGS EXPLAINED

### 9. ஐயமிட்டுண்

பிச்சையிட்டுப் பின்னர் சாப்பிடு என்பது இதன் பொருள். இதை விரிவாகக்கூறில் ஒருவனுக்கு எவ்வளவுபேர் உறவினர்கள் இருந்தபோதிலும், அவனுக்கு ஏற்பட்டிருக்கும் வரும்படிக்குள் அதிதிகளை ஆதரித்து உணவளிக்க முடியாமலிருந்தபோதிலும், தன் வீட்டிற்குத் தேஹி என்று வரும் பிச்சைக்காரருக்காவது பிச்சையிட்டுத்தான் பின்னர் உண்ணவேண்டும் என்றதாகும். இதற்கேற்பவே ஔவையார் 'இட்டுண்டிரும்' என்றும், 'மருந்தேயாயினும் விருந்தோடு உண்' என்றும் கூறியிருக்கிறாள். இரண்டாவது சொன்ன வாக்கியத்துள் 'ஐயமிட்டுண்' என்ற வாக்கியத்தில் அடங்கியிருக்கும் ஒரு மறைபொருள் வெளியாகிறது. நம்மிடமிருக்கும் வஸ்துக்களிடம் நமக்கு ஒருவிதப் பற்று உண்டு. இந்த வஸ்துவால் சிறந்த பயன்கள் ஏற்படுமாயின் இந்தப் பற்று அதிகமாகும், இதைப் பிறருக்குக் கொடுக்க மனம் எழாது. இதுவும் அன்றி இந்த வஸ்து மிகுந்த முயற்சியின்மேல் கிடைத்ததாயின் நமக்கு அதனிடம் ஏற்படும் பற்றுக்கு எல்லையே இல்லை. இம்மாதிரி வஸ்துக்களை நாமே வைத்துக்கொண்டு அனுபவிக்கவேண்டும் என்ற துர் ஆக்ரஹம் உண்டாகிவிடும். இத்தகைய வஸ்து அமிருதம் என்பது. இந்த அமிருதமே நமக்குக் கிடைத்தபோதிலும் அதையும் பிறரோடு உண்ணவேண்டுமேயொழிய தனிமையாக உண்பது நல்லொழுக்கமன்று.

இந்த வாக்கியத்தை ஒட்டி சிற்சில பழக்கங்கள் நமது நாட்டில் நமது நித்திய கர்மங்களில் காணப்படுகின்றன. வாயிலில் யாராவது பிச்சைக்காரன் வந்தாலும்ஸரி, அல்லது ப்ரஹ்மசாரிகள் தேஹி என்று வந்தாலும்ஸரி எவ்வளவு ஏழையாயினும், பிச்சை எடுத்துப் பிழைப்பவனாயினும்

நமது நாட்டில் தன்னுலியன்ற மட்டும் கொஞ்சமாவது அரிசி அல்லது சோறு இடாமலிருக்க மாட்டான். அப்படி ஏழையாக இருப்பவர்கள் கூட உண்ணும் முன் காக்கைக்காவது பிடிசோறிட்டுத்தான் தாம் உட்கொள்ளத் தொடங்குவார்கள். இந்த வாக்கியத்தின் சிறப்பால்தான் நமது நாட்டில் அன்னதானம் விசேஷமாக நடந்து வருகிறது. பிற நாடுகளில் ஏழைகள் சோற்றுக்கில்லாது தெருக்களில் பட்டினி கிடந்து வயிறெட்டி அநேகக்கணக்காக இறப்பது உண்டு. பெரிய கண்டம் போன்ற பாரதநாட்டிலோ ஏராளமாக ஜனங்களிருந்தும் பட்டினி கிடந்திறப்பவர் மிகுதியாகவில்லை.

இப்படி இருப்பினும் வரவர மேல்நாட்டு எண்ணம் அதிகமாகிக்கொண்டு வர நமக்குத் தேவையானவைகள் அதிகரித்து விட்டன. ஆகவே கிடைப்பதெல்லாம் நமக்குப் போதாமல் போய்க்கொண்டு வருகிறது. ஆதலால் ஐயமிட்டுண் என்ற வாக்கியத்தின்படி நடப்பது இக்காலத்தியக் கல்வியின் சிறப்பால் குறைந்து கொண்டே வருகிறது. தேஹி என்று வருபவர்களுக்கு அப்போதைக்கப்போது நேரிடக் கொடுத்துக் கொடை மன உருக்கம் முதலியவைகளை விருத்திசெய்து மேன்மை படையாது, இக்காலத்தில் படித்தவர்கள் தாம் கொடுப்பது பிறர்களுக்குத் தெரிந்து கீர்த்தி உண்டாக வேண்டுமெனத் தர்மஸங்கங்களுக்கு மொத்தப் பணம் கொடுத்துவிட்டு பொது நன்மை புரிந்து விட்டோம் என்று இறுமாந்திருக்கின்றனர். இவர்கள் கொடுத்த பணம் ஏழைகளைச் சென்று எட்டுகின்றதோ அல்லது அதைப் பரிபாலனம் செய்ய ஏற்படும் தர்மகர்த்தர்கள் கீழ் உள்ள சிப்பந்திகள் ஆகிய இவர்களிடம் பெரும்பாலும் அடங்கிவிடுகின்றதோ என்பதே அவர்களுக்குத் தெரியாது. இதை எல்லாம் தெரிந்துகொண்டு தான் நமது பெரியோர்கள், எவ்வளவுதூரம் ஒருவன் பொது நன்மைக்கு பெரும் நன்கொடைகள் அளித்திருந்த போதிலும் அவனிடம் வருபவனுக்கு நேரிடத் தானாகவே ஐயமிட்ட பின்னர் தான் விஷயங்களை அங்கீகரிக்கவேண்டும் என்று இவ்வாக்கியத்தால் வற்புறுத்துகின்றனர்.

ஆதலால் நமக்கு அதிதிகளோடு பங்கிட்டு உண்ணத்திறமில்லாம விருப்பினும், அல்லது அதிக உறவினர்களைப் போஷிக்கும்படி நேர்ந்த போதிலும், அல்லது,நமக்கு மிருத்தகஷ்டத்தின் பேரில் வஸ்துக்கள் அகப்பட்டபோதிலும், அல்லது நமக்குக்கிடைத்த வஸ்து மிகஅருமையான தாயினும், அல்லது, நாம் எவ்வளவு பொது நன்மைக்குக் கொடுத்திருந்தபோதிலும், இன்னும் எவ்வித விஷயங்கள் ஏற்பட்டபோதிலும், நாம் நேரிடக் கொடை அளித்து நம்மனத்தைச் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டியது அவசியம் என்பது இந்நீதி வாக்கியத்தால் நன்கு விளங்கும்.

இந்நீதி வாக்கியத்தின் சிறப்பை நன்கு விளக்கும் கதை ஒன்று **மதனகாமராஜன் கதை** (பன்னிரண்டுமந்திரிக்கதை)யில் பதினோராம் நாள் கதையாகக் காணப்படுகின்றது. இதற்கு **பிராஹ்மணப்பிள்ளை அன்னதானப் பலன் அறிந்த கதை** என்று பெயர். இதை ஒருவாறு சுருக்கிக் கூறுவோம். கலிங்க தேசத்தில் ஒரு அக்கிரஹாரம் உண்டு. அதில் ஒரு ஏழை பிராஹ்மணன் தன் மனைவி பிள்ளையோடு உபாதானம் எடுத்து ஜீவனம் செய்து வந்தான். பிள்ளைவெகு சீக்கிரத்தில் ஸகல கலைகளையும் எளிதில் கற்றுத் தேர்ந்தான். இவனுக்குப் பதினறு வயதானதும் இவன் தகப்பன் இறந்து போய்விட்டான். இவனும் உபாதானத்தால் தன் தாயைக் காப்பாற்ற வேண்டி வந்தது. தாயோ இவன்கொண்டுவரும் வஸ்துக்களைத் தகுந்தபடி சமைத்து முதலில் ஒரு வேதியருக்கு இட்டுப் பின்னர் தானும் பிள்ளையுமாகப் பகிர்ந்து உண்டு வந்தாள். எவ்வளவு குறைவாகக்கிடைத்த போதிலும் அதிலும் ஐயமிட்டு உண்டு வரும் தாயை நோக்கி 'அம்மா! நமக்கு வஸ்துக்கள் கிடைப்பது மிகக் கடினமாகவிருக்க இதைக் கவனியாது தினம் ஒருவருக்கு விடாது உணவு அளித்து வருகின்றனையே! இதற்கு என்ன கார

ணம்' என்று வினவ, அதற்குத் தாய், 'அப்பா! எவ்வித தானமும் அன்ன தானத்திற்கு நிக ரன்று என்று பெரியோர் கூறுவர். எங்கள் பரம்ப ரையில் எல்லோரும் இதைச் செய்து வந்தார்கள். நானும் இவ்வாறு செய்து வருவதாக விரதம் பூண்டு விட்டேன். ஆதலால் இவ்வாறு செய்து வருகிறேன்' என்றாள். இதனால் பூர்ணதிருப்தி வாராத பிள்ளை 'எனக்குக் கட்டுச்சோறு தயார் செய்துகொடு யான் போய் தவமிருந்து அன்ன தானப் பலனறிந்து வருகிறேன்' என்று கேட்க, தாயும் அவ்வாறே செய்து பிள்ளையை வழி யனுப்பினாள். இவன் வெகுதூரம் காடுமலை வனம் வனாந்தரங்கள் கடந்து வருகையில் ஒரு நாள் ஓர் அடர்ந்த காட்டுள் வந்து சிக்கிக்கொண்டான். பொழுதுபோகும் தருணமாக விருந்தது. அப் பொழுது அங்குத் தற்செயலாக வந்த வேடன் ஒருவன் அச்சிறுவனை நோக்கி, 'இருட்டும் தரு ணம் வந்துவிட்டது. என்னுடன் வந்து என் பர ணில் இன்றிரவு தங்கிப் பொழுது விடிந்ததும் உன்னிஷ்டப்படி போகலாம்' என்று அழைத் தான். சிறுவன் அதற்கு இசைந்து வேடன் பரண் போய்ச் சேர்ந்தான். அன்றிரவு ஆகாரத்திற்காகத் தேனும் தினைமாவும் தயாராயிருந்தது. அப்பொ ழுதுவேடன் தன் மனைவியைநோக்கி 'பெண்ணே! நம்பரணுக்கு ஒரு விருந்து வந்திருக்கிறது. உன் பாகத்தில் பாதியும் என் பாகத்தில் பாதியும் சேர்த்து அவருக்குக் கொடுத்து, உன்னிடத்தில் பாதியும் என்னிடத்தில் பாதியும் அவருக்குப் படுக்கக் கொடுத்து இன்றிரவு அவரை ஆதரிப் போம்' என்றான். அதற்கு அவள், 'உங்களுக்கு என்ன வேலை? வழியில் போகிறவர்களை எல்லாம் அழைத்து வருகிறதுதான் வேலையோ! நீர் வேண்டுமானால் உமது பாகத்திலிருந்து கொடு த்து அவரை ஆதரியும். நான் கொஞ்சம்கூடக் கொடுக்கமாட்டேன்,' என்று மறுத்துவிட்டாள். இவளை ஒரு பொருட்டாக மதியாது வேடன் தன் பாகத்தில் பெரும்பாலும் சிறுவனுக்குக் கொடுத்து, தன்னிடத்தில் ஒரு பாகத்தை ஒழித்து உள்ளே சிறுவனைப் படுக்கச் செய்து தான் பரண் ஓரமாகப் படுத்துக்கொண்டான். இரவில் தூக்கக் கலக்கத்தில் வேடன் பரணி லிருந்து கீழே விழ, அவனை புலி கொண்டுபோய் விட்டது. விடிந்ததும் சிறுவன் எழுந்து வேட னைக் காணாது அவனுக்கு என்ன ஆபத்து வந் ததோ, தனக்காக இவ்வளவு அன்பு பாராட்டியவ னுக்குத் தானே யமனாகும்படி நேர்ந்ததே என்று பலவாறு துக்கித்துவிட்டு, அடங்காப் பிடாரியா கிய அவன் மனைவியை ஒருவாறு தேற்றித் தன் காரியமாகப் புறப்பட்டு விட்டான். போகும்வழி யில் சில விடங்களில் தங்கும்படி நேர்ந்தது. அங்கிருப்பவர்கள் இவன் நோக்கத்தை அறிந்து மெச்சிக்கொண்டனர். அவர்களில் சிலர் தமக் கிருக்கும் சில குறைகளை எடுத்துச் சொல்லி அது தீரும்வழி இன்னது என்பதை கடவுளிட மிருந்து அறிந்து வரவேண்டும் என்று வேண் டிக் கொண்டனர். அவ்வாறே செய்வதாக ஒப் புக்கொண்டு ஒரு பெருங்காடு சென்று அங்கு கொஞ்சகாலம் கடும் தவம் செய்தான். இதன் முடிவில் பரமசிவன் பிரத்யக்ஷமாக அச்சிறுவன் ஸ்வயகாயம் கருதாது மற்றவர்களுடைய குறை கள் விஷயமாகக் கேட்டுவிட்டு முடிவில் அன்ன தானப் பலன் என்னவென்று கேட்டான். அதற் குப் பரமசிவம் 'நான் கூறவேண்டியதில்லை. நான் கொடுக்கும் அக்ஷதையையும் விபூதியையும் கொண்டுபோய் விராடதேசத்தரசன் பெண்சாதிக் குக் கொடு. பிள்ளை இல்லாது தவித்துக்கொண்டி ருக்கும் அரசனுக்கு ஒரு பிள்ளை உண்டாகும். அது பிறக்கும்பொழுதே பூமியில் படாது ஒரு பொற்றட்டில் ஏந்திவரச் சொல்லி அதைக் கேட் டால் அது உன் கேள்விக்குத் தகுந்தபதில் உரைக் கும்' என்று கூறி மறைந்தார். சிறுவன் வரும் வழியில் எல்லோருக்கும் குறை தீரும் வழிகளைப் பரமசிவனிடமிருந்து கேட்ட வண்ணம் வெளி யிட அவர்கள் குறைகள் தீர்ந்தன. அவர் கைம் மாறு செய்ய அவைகளை அவ்வவர்களிடம் அடைக்கலமாக வைத்துவிட்டு, நேரே விராட நக

ரம் சென்று அவ்வரசன் யோகக்ஷேமங்களை விசாரித்து, தான் அக்ஷதையும் விபூதியையும் கொடுத்து அவருக்குப் புத்ரஸந்தானம் உண்டாகும்படி செய்வதாகச் சொன்னான். அதற்கு அரசன் 'அப்பா நீயோ சிறுவன். உன்னால் என்ன முடியும். எவ்வளவோ பெரியவர்கள் முயன்றும் முடியாமற்போய்விட்டதே' என்று மனவருத்தத்துடன் கூற, அதற்குச் சிறுவன், 'நான் கொடுக்கும் விபூதி முதலியவைகளில் உமக்குப் பிள்ளை பிறக்காவிடில் நான் உயிரை மாய்த்துக் கொள்ளுகிறேன்' என்று உறுதிமொழி கொடுத்தான். அரசன் வியப்படைந்து 'ஆனால் செய் பார்ப்போம்' என, பரமசிவத்தைத் தியானம் செய்து அரசன் மனைவிக்குச் சிவப்பிரஸாதத்தை உட்கொள்ளும்படி கொடுத்தான். கொஞ்சநாளில் அவள் கர்ப்பம் தரிக்க, அரசன் சிறுவனுக்கு ஆசார உபசாரம் செய்து பாதுகாத்து வந்தான். ப்ரஸவகாலம் வந்ததும் அச்சிறுவன் அரசனை நோக்கிக் 'குழந்தை வெளிவருங்கால், பொற்றட்டில் வாழைக் குறுத்திட்டு, அதைப் பூமியில் படாது ஏந்தி ராஜ ஸபைக்குக் கொண்டுவரவேண்டும்' என்று கூற, அரசன் அவ்வாறே செய்வித்தான். அச்சிறுவன் பொற்றட்டைக்கையிலெடுத்து அதிலிருந்த குழந்தையை நோக்கி 'அப்பா! அன்னதானத்தின் சிறப்பு என்ன?' என்று கேட்டான். ஸபையோர் கண்டு வியக்கும்படி அது வாயைத் திறந்து 'கொஞ்சம் தினைமாவு கொடுத்ததற்கு எனக்கு இந்நிலை வந்ததென்றால், ஒருவன் முற்றிலும் திருப்தி அடையும்படி அன்னதானம்செய்த தன்பலன் எவ்வளவு என்று நீரேபார்த்துக்கொள்ளும். என்னால் கூற முடியாது. மேலும் தானம் செய்ய மனம் வராத என் மனைவி இந்த ஊர் பரச்சேரியில் பன்னிக்குட்டியாகப் பிறந்திருக்கிறாள்' என்று கூறி நிறுத்திவிட்டது. உடனே சிறுவன் வந்த காரியம் முடிந்ததென்று புறப்பட்டு தனக்குக் கிடைத்தவைகளை அடைக்கலம் வைத்தவரிடமிருந்து வாங்கிக்கொண்டு தன் கிராமம் வந்து, தாயை வணங்கி, எல்லாவற்றையும் முழுவதும் கூறி அன்னதானத்தை விடாது செய்து பரமசிவன் அருளால் மேலான பதவியை அடைந்தான்.

இம்மாதிரியான கதை ஒன்று மஹாபாரதம் அச்வமேத பர்வத்தின் முடிவில் காணப்படுகின்றது. இதற்குப் பொன்னிறமான கீரிப்பிள்ளை அல்லது அதிதிபூஜையின் சிறப்பு என்று பெயர். இதன் விஸ்தாரத்தை **மஹாபாரத வினாவிடை மூன்றாம் பாகத்தில் காண்க.**

ஆத்திசூடியிலுள்ள முதல் 9-வாக்கியங்களையும் கொடைவிஷயமாகவே ஒருவாறு பொருத்தலாம். முதலாவது அறஞ்செயவிரும்பு. அதாவது 'ஈதலறம்' என்று கூறியதற்கு ஏற்பக் கொடுப்பதற்கு விருப்பமுடையவனாயிரு என்பதாகும். ஆறுவதுசினம் என்பதால், கொடைக்கு முக்கிய விரோதி கோபம். பலருக்குக் கொடுக்கத் தொடங்கினால் ஏற்படும் குழப்பத்தில் இந்தக் கோபம் குறுக்கிட்டுக் கொடையைப் பயனற்றதாக்கிவிடும். ஆகவே கொடை சிறப்புறவேண்டுமானால் முக்கியமாகத் தணிக்கவேண்டியது கோபமே என்பது தோன்றும். இயலுவதைக் காப்பதும், நாம் கரப்பதுபோலப் பிறரையும் கரக்கும்படி செய்து ஈவதை விலக்குவதும் கொடையாளிக்கு அழகன்று. ஆதலால் இவைகளை அவன் பின்பற்றவே கூடாது. இவ்வாறு செய்யக்கூடாதாயினும் கர்வமிகுதியால் தன் சிறப்பை எக்காலத்தும் தானாகவே வெளியிட்டுக்கொள்ளலாகாது என்பதை உடையது விளம்பேல் என்பது குறிக்கும். அவ்வாறு செய்துவிட்டால் கொடையின் மேன்மை குன்றிவிடும். இவ்வாறு வெகு பயபக்தியுடன் கொடுத்துவருங்கால் கொடுக்கப் பணம் இன்றி ஏழ்மை ஏற்பட்டு விட்டால் ஒருவாறு மனத்தடுமாற்றம் உண்டாகலாம். அப்

பொழுது 'நாம் செய்ய வேண்டியதை செய்து வந்தோம். அதனிடையில் இவ்வறுமை வந்தது. இது கடவுள் சோதனைதான். இதிலும் நாம் நமது விருதத்தைக் கைவிடாது கடவுள் கருணைக்குத் தகுந்தவனுக நடக்க வேண்டும். ஆதலால் நியாய வழிகளில் பொருள் தேடுவோம். கிடைத்தவைகளை மனதாரக் கொடுப்போம்' என்றிவ்வாறு மனனம் செய்து ஊக்கமதைக் கைவிடாதிருக்கவேண்டும். இப்படி இருக்கையில் பொருள் தேடுவதற்கு நல்ல வழி, கண்ணுக்கு நிகராகிய எண்ணையும் எழுத்தையும் பிறருக்குப் போதித்து அவைகளை இகழாவண்ணம் அவர்கள் ஞானக்கண்ணைத் திறந்து அவ்வாறு செய்வதால் அவர்கள் மனக் களிப்பால் குருதக்ஷிணை கொடுப்பதைக் கொண்டு நமது கொடைத்தொழிலை நடத்த வேண்டுமே ஒழிய, பிறரிடம்சென்று இழிவானதொழிலாகிய கெஞ்சிக்கேட்டுவாங்குவதைச் செய்யவேகூடாது. ஏற்பது இவ்வளவு இகழ்ச்சியாக விருப்பதால் காலகதியால் அவ்வாறு செய்யும்படி நேரிட்டவர்கள் நம்மிடம் வந்துவிட்டால் நமக்கு எவ்வளவு சிறப்பு அல்லது கஷ்டங்களிருப்பினும் மனங்கனிந்து அவர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தான் நமது முக்கியவேலைகளைச் செய்யவேண்டும். நமது உயிர் போவதாகவிருந்தாலும் மிக நொந்து போய் பிச்சைக்கு வருபவர்களைத் திருப்தி செய்துவிட்டுத்தான் நமது உயிரைக் கவனிக்க வேண்டும். இதுவே உண்மையான தர்மம். இதை நன்ருகச் செய்து பழகி வருபவர்களை எவ்வளவு கொடிய துக்கமும் தாக்க சக்தி அற்றதாகிவிடும். அற்பமான விஷயஸுகம் இவரை எவ்வாறு முழுத்தும்? இதற்கு உதாரணம் பாகவதம் 9-வது ஸ்கந்தத்தில் காணப்படும். ரந்திதேவர் கதை, **பாகவத வினவிடை** 1-ம் பாகத்தைப் பார்க்க.

# நியாயமாலை

## POPULAR MAXIMS EXPLAINED

### 15. अरुन्धतीप्रदर्शन न्यायः

### அருந்ததீ பிரதர்சன நியாயம்.

ஆகாயத்தின் வடபாகத்தில் பிரகாசமான எழு நக்ஷத்ரங்களாலாகிய வாலுடன் கூடிய காற்ருடி பறப்பது போன்ற உருவமுடைய நக்ஷத்ரக் கூட்டங்களுக்கு ஸப்தருஷிமண்டலம் என்று பெயர். இது கல்யாண மாதங்களாகிய தை முதல் ஆனிவரையில் சுமார் இரவு 6-மணிக்குக் கிழக்கே தோன்றத் தொடங்கி, வரவா முன்னர் பகலில் உதித்து ஆகாயத்தில் வெவ்வேறு பாகங்களில் காணப்பட்டு முடிவில் மாலை 6-மணிக்கு அஸ்தமித்துவிடும். இந்தக் கூட்டத்தில் வால் பாகத்திலிருக்கும் மூன்று நக்ஷத்ரங்களுள் மத்தியிலிருக்கும் நக்ஷத்ரத்திற்கு வஸிஷ்டர் என்றுபெயர். அதன் அருகாமையில் அதிஸூக்ஷ்மமாக ஊன்றிப் பார்க்குங்கால் ஒரு நக்ஷத்ரம் காணப்படும். அதுதான் **அருந்ததி** என்னப்படும்.

இந்த அருந்ததி நக்ஷத்ரத்தை ஸாதாரணமாக நமது கல்யாணங்களில் முகூர்த்த நாள் இரவு நடத்தப்படும் பிரவேசஹோம மத்தியில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் காட்டுவது வழக்கமாக நம்முள் வந்துவிட்டது. வஸிஷ்டரும் அருந்ததியும் எவ்வாறு இணைபிரியாதிருக்கின்றனவோ, அவ்வாறே மாப்பிள்ளையும் பெண்ணும் மனம் ஒருமித்து ஆதரவுபட்டுத் தர்மானுஷ்டானங்களைச் செய்யவேண்டும் என்ற கருத்துடன் இவ்வாறு செய்யத் தொடங்கியதாக விருக்கலாம். பின்னர் அருந்ததி கண்ணுக்குத் தென்பட்டுக் கொண்டிருக்கிற வரையில் ஆயுஸ்விருத்தி என்றும், அது தென்படாவிடில் மரணம் அணுகிவிட்டது என்றும், ஆதலால் மாப்பிள்ளையும் பெண்ணும் அதைக்கண்டு விட்டால் தீர்க்க ஆயுஸுடன் இருப்பார்கள் என்றும் உள்ள மூட நம்பிக்கைகள் இந்த வழக்கத்தைச் சுற்றிக் கிளம்பிவிட்டன.

இவ்வாறு அருந்ததியைக் காட்டுங்கால் நேரிட அதைக் காட்ட முடியாது. முதலில் ஆகாயத்தின் வடபாகத்தில் பிரகாசமான நக்ஷத்திரத்தை, இருக்குமிடத்தில் உள்ள மரங்களுடன் ஸம்பந்தப்படுத்தி முதலில் காட்டி, அதிலிருந்து படிப்படியாக வடக்கே காட்டிக்கொண்டே போய் ஸப்தரிஷியாகிய ஏழுநக்ஷத்ரங்கள் வந்து அதன் வாலைக் காட்டி அதன் நடு நக்ஷத்ரத்தைக் காட்டி அதன் அருகில் ஸூக்ஷ்மமாகப் பார்க்கச் சொல்லி அப்பொழுது காணப்படுவது தான் அருந்ததி என்றுகாட்டுவது. இம்மாதிரியே மூன்றாம் பிறைச்சந்திரனைக் காட்டும்போதும் அதன் அருகாமையில் மறைத்துக்கொண்டிருக்கும் பனை முதலிய மரங்களைக் காட்டி அவைகளின் மேல் பார்க்கச்சொல்லி ஆகாயத்திலிருக்கும் ஸூக்ஷ்மமான பிறையைக் காணும்படி செய்வது. ஆகவே ஸூக்ஷ்மவிஷயத்தைக் காட்டத் துணியும் ஒரு ஆசார்யன், அதனுடன் ஸம்மந்தப்பட்ட ஸ்தூல விஷயங்களை முன்பு காட்டிப் பின்னர் அவைகளை ஒழித்துக்கொண்டே வந்து ஸூக்ஷ்மவிஷயத்தை அணுகி அதைப் புகட்டுவதே இந்நியாயத்திற்குத் தக்க உதாரணம். இக்கருத்தை கைவல்ய நவநீத நூலாசிரியர்:—

தாலத்தின் மரங்கள் காட்டித்
தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தி னுடுக்கள் காட்டி
அருந்ததி காட்டுவார்போல்
ஸ்தூலத்தை முன்பு காட்டி
சூக்ஷ்ம ஸ்வரூப மான
மூலத்தைப் பின்பு காட்ட
முனிவார் தொடங்கினரே.

என்று விளக்கிக் காட்டி இருக்கிறார்.

### 16. असाधारण्येन व्यपदेश न्यायः
### அஸாதாரண்யேன வ்யபதேச நியாயம்

சாஸ்திர விஷயங்களுள் பிரமாணம் முதலிய பதார்த்தங்கள் பதினாறு என்று அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இவைகளுள் சாஸ்திரங்களில் எல்லாவற்றையும் எடுத்துக் கூறுவதோடுங்கூட ஒவ்வொன்றில் ஒவ்வொன்றைச் சற்று ஏற்றமாகவும் விஸ்தாரமாகவும் கூறப்பட்டிருக்கும். இதனால் அந்தச் சாஸ்திரத்திற்கு அதை ஒட்டிய பெயரிட்டழைக்கப்படும். கௌதமர்செய்த சாஸ்திரத்தில் பதினாறு பதார்த்தங்களை எடுத்துக் கூறிவருகையில் நியாயம் என்ற பதார்த்தத்தை அதிகமாக பிரஸ்தாபித்திருப்பதால் அதற்கு நியாய சாஸ்திரம் என்றபெயர் கொடுக்கப்பட்டது. இம்மாதிரியே பிரஸ்தாபம் செய்யப்படும் விஷயங்களுள் அதிகமாக எடுத்துக்காட்டும் விஷயங்களைக் கொண்டு ஒன்றற்குப் பெயர் அமையும் இடத்தில் இந்த நியாயம் உபயோகப்படும். மோக்ஷத்திற் படிகள் போன்ற கர்மம், பக்தி, யோகம், ஞானம் என்ற யோகங்கள் நான்கிலும் நான்கின் லக்ஷணங்களும் உண்டு. அப்படி இருந்தும் ஒவ்வொன்றிற்கும் அதில் முக்கியமாக மதிக்கப்பட்ட அம்சங்களால் பெயரிடப்பட்டிருக்கிறது. இவைகள் இந்நியாயத்திற்கு உதாரணமாகும்.

### 17. अहिकुण्डल न्यायः
### அஹிகுண்டல நியாயம்

பாம்பு எங்கிருந்தபோதிலும் குண்டலாகாரமாகச் சுற்றிக்கொண்டேயிருக்கும். இது அதனுடைய ஸ்வபாவம். 'நாயைக் குளிப்பாட்டி நடுஉள்ளில் வைத்தாலும் வாலைக் குழைத்துக்கொண்டு பீதின்னப் போகும்' என்ற பழமொழி ஒன்று உண்டு. அது இந்நியாயத்திற்கும் உதாரணம். ஒருவனுக்குக் குணம் பெருந்தன்மை முதலியவைக ளிருந்து விட்டால் அவனுக்கு என்ன ஏற்றத்தாழ்வு ஏற்பட்டபோதிலும் அவன் குணம் மாறாது. அது போலவேதான் இழிவான குணமுடையவர்கள் விஷயமும். இதை ஔவையார் :—

சிரியர் கெட்டாலும் சிரியர் சிரியரே
அல்லாதார் கெட்டாலும் அல்லாதார்—அல்லாதார்
பொன்னின் குடமுடைந்தால் பொன்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால் [என்னாகும்

என்றாள். இம்மாதிரி ஸ்வபாவம் மாறாமலிருப்பதைப்பற்றிக் கூறுமிடத்து இந்நியாயத்தை உபயோகப்படுத்தலாம்.

### 18. आभाणक न्यायः
### ஆபாணக நியாயம்

ஆபாணகம் என்பதுஉலகில் பிரஸித்தமானது என்பதை உணர்த்தும். ஒருவித வெளிப்படைக்

குக் காரணமும் இல்லாது உலக ப்ரஸித்தமாக இருக்கும் விஷயங்களில் இந்த ந்யாயம் உபயோகப்படும். ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் பல பாகங்கள் எல்லாவற்றிற்கும் வெளிப்படையான காரணங்கள் கூற முடியாது. இம்மாதிரியேதான் சகுன விஷயங்களும். இவ்விஷயங்கள் இந்நியாயத்திற்கு உதாரண மாகவிருக்கலாம். தமிழ் நாடுகளுள் தாய்மார்கள், மாதம் ஒருமுறை வீட்டுக்கு வெளியாகும்பொழுது 'ஏன் ஒதுங்குகிறாய்' என்று கேட்கும் குழந்தைகளுக்கு 'நான் ஓட்டை மிதித்துவிட்டேன். தீட்டு வந்துவிட்டது' என்று கூறுவது எங்கும் ப்ரஸித்தமாகவிருக்கிறது. இதுபோலவேதான் 'நாடறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் எதற்கு' என்ற பழமொழியும். இவைகள் எல்லாம் இந்நியாயத்திற்கு உதாரணம்.

### 19. आम्रवण न्यायः

### ஆம்ரவண ந்யாயம்.

காட்டில் அநேக மரங்களிருக்கலாம். அவைகளுள் ஒரு காட்டில் அநேகமாக மாமரங்களே இருப்பின் அதற்கு மாங்காடு என்ற பெயர் வந்துவிடும். இம்மாதிரியே ஒரு வஸ்துவில் அதிகமாக இருப்பவைகளின் ஸ்வபாவத்தால் அதற்குப் பெயரிடப்படுங்கால் இந்நியாயம் உபயோகப்படுத்தலாம். இது 16-ம் நியாயம்போலத் தோன்றுமாயினும் அதற்கும் இதற்கும் கொஞ்சம் வித்யாஸம் உண்டு. அது பிரஸ்தாப விஷயங்கள் ஸம்பந்தமாயும், இது வஸ்துக்கள் விஷயமாயும் உள்ளது. ஸ்தூலபஞ்சபூதங்கள் ஒவ்வொன்றிலும் பஞ்சீகரண விசேஷத்தால் மற்றைய பூதங்களின் அம்சங்க ளிருந்தபோதிலும் அதிகமாக உள்ள பூதத்தின் பெயரே அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இந்நியாயத்திற்குத் தகுந்த உதாரணம். ஆகாயம் என்னும் ஸ்தூல பூதத்தில் பாதி ஆகாயமும் அரைக்கால் ப்ருதிவி அப்பு தேஜஸ் வாயுவும் காணப்படுவதால் அதற்கு ஆகாயம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது. இதுபோலவே மற்றைய ஸ்தூலபூத விஷயங்களும். ஆகவே இந்நியாயம் வஸ்து சம்பந்தமாக அதிக வஸ்துவின் பெயர் கொடுக்கப்பட்ட விடங்களில் மாத்திரம் தான் பிரயோகிக்கலாம்.

## மலேரியா என்னும் விஷஜ்வரம்

## MALARIA

எல்லாக் கொசுக்களும் ஜலத்தில் உற்பத்தியாகின்றன. ஜலத்திலேயே அவைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. புழுதசையிலுள்ள (larvæ) அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள (wrigglers) கொசுக்கள் 24 மணி நேரமுதல் 48 மணி நேரத்துக்குள்ளாக முட்டைகளிலிருந்து ஜலத்தில் வெளிப்படுகின்றன. அப்போது அவைகள் உணவு கிடைப்பதற்காக நீர்மட்டத்துக்குக்கீழ் இருக்க வேண்டும். சுவாஸம் விடுவதற்காக அவைகள் இடையிடையே நீர்மட்டத்துக்குமேல் வர வேண்டியிருக்கிறது; இல்லாவிட்டால் அவைகள் முழுகிப்போய்விடும். அவைகள் தேகத்தின் வால் நுனியிலுள்ள ஒரு குழாய் மூலமாய் சுவாஸம் விடுகின்றன. நெளிந்து புரண்டோடும் தசையிலுள்ள கொசுக்கள் நனைந்த புல்லிலாவது ஈரமான தரையிலாவது வளர முடியாது. அவை குறைந்தது அரை அங்குலம் ஆழமுள்ள தண்ணீரில் ஜீவிக்கின்றன; அதனால் அவைகள் பூர்த்தியாய் வளர்ந்து தலைகீழாய் மிதக்கும்போது, நீரின் அடிப்பாகத்தைத் தொடாமலிருக்கின்றன.

புழு தசையிலிருக்கும் அனோபிலின் ஜாதியைச்சேர்ந்த கொசுக்களை, அவைகள் நீர்மட்டத்துக்கு அடியிலேயே தட்டையாய்ப் படுத்திருப்பதையும் துள்ளித்துள்ளிப் பின்பக்கமாய் அசைவதையுங்கொண்டு சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம். குலிஸைன் ஜாதியைச் சேர்ந்த கொசுக்கள் நீரில் தலைகீழாய்த் தொங்குகின்றன; அவைகளுக்கு நீண்ட சுவாஸக்குழாய் இருக்கிறது; அவை நெளிந்து புரண்டு முன்னுக்கு அசைந்து செல்லும்.

மேற்கண்ட புழுதசையிலாவது அல்லது நெளிந்து புரண்டோடும் தசையிலாவது அவைகளின் பூர்ணமான பரிமாணத்துக்குச் சரியாய்

வளர்வதற்கு ஆறு முதல் பத்துநாள் வரையில் செல்லும்; சில சமயத்தில் அதைவிடக் குறைந்த காலம் செல்லும். அவைகளின் பூர்ண மான பரிமாணத்துக்குச் சரியாய் அவை வளர்ந்துவிட்டால் அவை திடீரென்று தங்கள் தோல்களிலிருந்து வெளிப்பட்டுத் தண்ணீரில் அங்குமிங்கும் துள்ளிக்கொண்டு முற்றும் புதிய பூச்சிகளாய்க் காணப்படுகின்றன. இந்தப் பூச்சிகளுக்கு ப்யூபே (Pupæ) அல்லது நிம்புகள் (Nymphs) என்று பெயர். இந்தத் தசையானது இரண்டுநாள் முதல் நாலு நாள்வரையில் இருக்கிறது. பிறகு அவைகள் தண்ணீரில் மேற்பாகத்தில் மிதந்துகொண்டிருக்க, அவற்றிலிருந்து கொசுவானது இறக்கைகளுடன் கூடிய வயது வந்த பூச்சியாக வெளிப்படுகின்றது; இந்தக் கொசு முழுவளர்ச்சியுடையதாய் ஒருவேளை உணவு கிடைத்தவுடனே தன் இனத்து ஜந்துக்களை உற்பத்தி செய்வதற்கு ஸித்தமாயிருக்கும். மூன்று நான்கு தினத்தில் அது நீரில் தன் முதல் வரிசை முட்டைகளையிட்டு இன்னும் அதிகமான முட்டையிடுவதற்காக அதிக இரத்தம் உறிஞ்சும் பொருட்டு இராக்காலத்தில் புறப்பட்டுப் போகும்.

வீடுகளில் எவ்விதமாகவாவது சேர்த்துவைக்கப்பட்டிருக்கிற தண்ணீரிலும், குட்டைகளிலும், தொட்டிகளிலும், சாக்கடைகளிலும், குளங்களிலும், கிணறுகளிலும், வாய்க்கால்களிலும், சகல விதமான தண்ணீர்க்கால்வாய்களிலும், கொசுக்கள் உற்பத்தியாகக்கூடும். குறைந்த பக்ஷம் அரை அங்குலம் ஆழம் தண்ணீர்த் தேக்கமிருந்தாலொழிய அவைகள் தூறுகள், க்ரோடன்கள், புஷ்பத்தொட்டிகள் முதலியவைகளில் உற்பத்தியாக முடியாது.

தண்ணீர்ப் பாத்திரங்களை மூடி வைப்பதனால் வீடுகளிலாவது வீடுகளின் சமீபத்திலாவதுள்ள தண்ணீரில் கொசுக்களைச் சேரவொட்டாமல் தடுப்பதும், வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் சேரவொட்டாமல் தடுப்பதும் மிகவும் முக்கியமானவையாகும். தண்ணீர் தங்கக்கூடிய உடைந்துபோன பழஞ்சட்டிகள், கெரோஸின் எண்ணெய் டப்பிகள், உடைந்துபோன புட்டிகள் முதலியவைபோன்ற அநாவசியமான எந்தச் சாமான்களையும் வீடுகளிலிருந்து ஒழித்துவிடவேண்டும். வீடுகளின் சமீபத்தில் தண்ணீர் தேங்கியிருக்கும் குட்டைகள் எந்தப் பள்ளங்களில் ஏற்படுகின்றனவோ அவைகளைத் தூர்த்து கூடி குட்டைகளை எல்லாம் எடுத்துவிடவேண்டும்; குட்டைகளைத் தூர்த்துவிடமுடியாத இடங்களிலே, தண்ணீரின் மேல்பாகத்தில் சிறிது (மேல்பாகத்தின் ஒரு சதுரகஜத்துக்குத் தேத்தண்ணீர்க் கிண்ணியில் அரை அளவுள்ள) கெரோஸின் எண்ணெயை வாரத்துக்கு இருமுறை ஊற்றவேண்டும். இதனால் புழு தசையிலுள்ள கொசுக்களெல்லாம் செத்துப்போம். வீடுகளிலுள்ள கொசுக்களில் சில ஏற்கெனவே விஷஜுரத்தின் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெற்றிருக்கக்கூடுமாகையால், அக்கொசுக்களெல்லாவற்றையும் முயன்று கொல்வதே விவேகமான காரியமாகும்.

தெரிந்திருக்கிறவரையில் விஷஜுரம் பரவுவதற்குக் கொசுவே சாதனமாயிருக்கிறது. விஷஜுரம் விசேஷமாயிருக்கிற இடங்களிலிருந்து வரும் தண்ணீரைக் குடிப்பதனால் விஷஜுரம் உண்டாகாதென்பது அடிக்கடி நடத்தப்பட்ட பரீக்ஷைகளால் மெய்ப்பிக்கப் பட்டிருக்கிறது. ஆகையால் கொசுக்களில்லாதிருக்கும் பக்ஷத்தில் விஷஜுரமிராது; ஒரு நபர் தன்னை எப்போதும் கொசு கடிக்காமல் பாதுகாத்துக் கொள்ளக்கூடுமானால், அவனுக்கு விஷஜுரம் ஒருகாலும் வராது. இக்காரணத்துக்காகவே விஷஜுரப் பிரதேசங்களிலே பிரயாணம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் கொசுவலைகளை உபயோகித்துத் தங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமலிருக்கப் பிரயத்தனப்படுகிறார்கள்; ஆனால் அவர்கள் எப்போதுமே கொசு வலைகளுக்குள் இருக்க முடியாதாகையால் சிற்சில சமயங்களில் அவர்களைக் கொசு கடிக்கவே கடித்துச் சிற்சில சமயங்

களில் அவர்களுக்கு விஷஜ்வரம் காணவே காணுகிறது.

இதை மாற்றிச் சொல்லும் பட்சத்தில், மனிதர்களே இல்லாமலிருந்தால், கொசுக்களுக்கு விஷஜ்வரத்தின் தொத்துவியாதி சம்பந்தமே உண்டாகாது; ஆகவே ஜனசஞ்சாரமற்ற நெடுந்தூரத்துக் காட்டுப் பிரதேசங்களில் அனொபிலென் ஜாதிக்கொசுக்கள் நிரம்பியிருந்த போதிலும், அவைகளில் ஒன்றுக்காவது தொத்துவியாதி சம்பந்தம் உண்டாக முடியாதாகையால், எப்போதோ ஒருகால் அங்கே போகுமொருவனை அவை கடித்தாலும் அவனுக்கு விஷஜ்வரம் உண்டாகாது. விஷஜ்வரம் வராமல் தப்பித்துக்கொள்வதற்கான வழிகளுள் ஒன்றைத் தெரிந்துகொள்ள இதன் மூலமாய் நமக்கு நேராக ஒரு உபாயம் கிடைக்கிறது. விஷஜ்வரத்திற்குப் பேர்போன பிரதேசத்தில் பிரயாணஞ் செய்கையில், சாத்தியப்பட்டால் கிராமத்திலாவது மனிதர் குடியிருக்குமிடத்திலாவது அவைகளின் சமீபத்திலாவது இராக்காலத்தில் முகாம் போடாமலாகிலும் தங்காமலாகிலும் இருக்கவேண்டும்; அவ்விடத்துக்கப்பால் அரை மைல் தூரத்தில் இருப்பது க்ஷேமமாகும். முகாமில் ஒருவருடன் கூட வரும் பரிவாரத்தில் ஒருவனுடைய ரத்தத்தில் விஷஜ்வர கிருமிகள் ஏற்கெனவேநிறைந்திருக்கக் கூடும். ஆனால் ஒரே இடத்தில் ஒரு வாரத்துக்காவது அதற்கதிகமான காலத்துக்காவது தங்காமலிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்ட சேவகனால் கூடக் கெடுதி உண்டாகாது; ஏனென்றால், அவனிடத்திலிருந்து தொத்துவியாதி சம்பந்தத்தைப் பெறுகிற கொசுக்கள் அவனைக் கடித்த பிறகு குறைந்தது ஏழுநாளாகிறவரையில் இன்னொருவனுக்கு அதைத் தொத்தவைக்க முடியாது; ஆகவே முகாம் அவ்வூரைவிட்டுக் கிளம்பும்போது, அவை பின்தங்கிப் போய்விடுகிறபடியால் அவை ஒருவருக்கும் தொத்துவியாதி சம்பந்தத்தைப் பரவச்செய்கிறதில்லை. மனிதர் வசிக்கும் இடங்களுக்குச் சுற்றுப்புறங்களிலுள்ள தொத்துவியாதி சம்பந்தமுடைய பழைய கொசுக்களே அபாயகரமானவை.

இப்போது தெரிந்திருக்கும்வரையில் விஷஜ்வரக் கிருமிகளை அழிக்கக்கூடிய மருந்து ஒன்றே. அது **க்வினைன்** என்று சொல்லப்படும் மருந்து. பிரதிதினமும் ஒரு தடவை க்வினைனை உட்கொள்ளும் பட்சத்தில், கொசுக்களால் சரீரத்துக்குள் செலுத்தப்படும் இளங்கிருமிகள் அப்படிச் செலுத்தப்படும்போதே நசித்துப்போகிறபடியால் விஷஜ்வரம் விருத்தியாவது முற்றிலும் தடைப்பட்டுப்போம். விஷஜ்வரம் வாஸ்தவமாய்க் காணும்போது, க்வினைனை அதிக அளவாக உட்கொண்டு வந்தால் அது குணமாகும்; ஆனால் அப்போது இரத்தத்திலிருக்கும் கிருமிகளையெல்லாம் அடியோடு அழித்துவிடுவதற்கு மூன்று மாதகாலம் தினந்தோறும் க்வினைன் ஒரு தடவை உட்கொள்ள வேண்டியதவசியமாகும். பெரியவர்கள் (**எப்ஸம் ஸால்ட்** என்னும்) மக்னீஸியம் ஸல்பேட், 1 ட்ராமுடன் க்வினைன் ஸல்பேட் சுமார் 10 க்ரெயின் சேர்த்துச் சாப்பிடவேண்டும்.

விஷஜ்வர பிரதேசத்திலுள்ள கிட்டத்தட்ட எல்லாக் குழந்தைகளின் இரத்தத்திலும் விஷஜ்வரக் கிருமிகள் இருக்கின்றன. இந்தக் கிருமிகளின் காரணமாக அக் குழந்தைகளில் பலருக்கும் ஜ்வரக்கட்டி உண்டாயிருக்கும். விஷஜ்வரம் கண்டிருக்கிற எல்லாக் குழந்தைகளுக்கும் ஜ்வரக்கட்டி உண்டாயிருக்கும், சகலர்களுக்கும் மூன்றுமாத காலம் தினந்தோறும் க்வினைன் கொடுத்துவரவேண்டும். அப்படிச் செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு விஷஜ்வரம் பூர்த்தியாய் குணமாய்விடும். ஆனால், அவர்களை மறுபடியும் கொசு கடிக்காமலும், மறுபடியும் தொத்துவியாதி சம்பந்தம் அவர்களுக்கு உண்டாகாமலும் அவர்களைக் காப்பதற்காக அவர்கள் வசிக்கும் இடத்தைச் சுற்றிலும் உள்ள எல்லாக் கொசுக்களையும் அழித்துவிடுவதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

அடியிற்கண்ட விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்:

(1) விஷஜ்வரமானது தொத்துவியாதி சம்பந்தமுள்ள ஒருவனிடத்திலிருந்து தேகாரோக்கியத்துடனிருக்கு மொருவனுக்குக் கொசுவினால் பரவுகிறதேயொழிய, தெரிந்தவரையிலும் வேறெந்தமூலமாகவும் பரவுகிறதில்லை.

(2) ஆகையால், கொசுக்களில்லாத பட்சத்திலும் அல்லது உங்களுக்குக் கொசுக்கடி உண்டாகாமல் பாதுகாத்துக்கொள்ளக்கூடியபட்சத்திலும், உங்களுக்கு விஷஜ்வரம் ஒருபோதும் வராது.

(3) கொசுக்கள் தண்ணீரிலேயே உற்பத்தியாகிறபடியால், தண்ணீர் இல்லாத இடத்தில், கொசுக்களும் இரா, விஷஜ்வரமும் இராது.

(4) ஒரு ஜில்லாவிலுள்ள கொசுக்களெல்லாவற்றையும் அழிப்பதவசியமில்லை; மனிதர் வசிக்கும் இடத்திலும் அதைச் சுற்றிலுமுள்ள கொசுக்களே அபாயகரமானவை. வசிக்குமிடங்களைச் சுற்றிலும் கால்மைல் தூரம்வரையிலுள்ள பிரதேசத்தில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கேற்ற இடங்கள் இல்லாதிருக்கும் பட்சத்தில், கொசுக்கள் மிகவும் கொஞ்சமாயிருக்கும் அல்லது இருக்கவேயிரா; விஷஜ்வரமும் இராது.

V. RAGHĀVA CHĀRLU,
*Tamil Translator to Government.*

டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்குப் பண உதவி.— அடியிற்கண்ட தொகை மாகாணப் பண்டிலிருந்து டிஸ்டிரிக்ட் போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்டது. அனந்தப்பூர் 26,100, வட ஆற்காடு 50,800, தென்னாற்காடு 65,000, செங்கற்பட்டு 75,200, சித்தூர் 40,500, கோயமுத்தூர் 45,700, கடப்பா 32,200, கஞ்சம் 72,300, கோதாவிரி 93,800, குண்டூர் 107,400 கிருஷ்ணா 141,700, கோரப்பட்டு 9,200, கர்னூல் 46,400, மதுரை 54,400, மலையாளம் 68,100, நெல்லூர் 65,700, நீலகிரி 10,000 ராமநாதபுரம் 50,400, சேலம் 39,000, தஞ்சாவூர் 83,000, திருநெல்வேலி 53,200, திரிசிராப்பள்ளி 61,000, விசாகப்பட்டணம் 80,700, ஆக மொத்தம் 14,60,700 ரூபாய். இந்த ஜில்லாக்களுக்கு இப்படிக் கிராண்டு பகிர்ந்தது அவ்வவற்றின் லோகல் பண்டு ரோட்டுகளின்நிலைமையைப் பொறுத்ததாகவும், டிஸ்டிரிக்டு போர்டுகள் அத்தொகையைச் செலவழிக்கும் திறமையைப் பொறுத்ததாகவும், அவற்றின் கைமுதலைப் பொறுத்ததாகவும் இருக்கும். செங்கல்பட்டு ஜில்லா போர்ட்டார் சென்னைக்குப் போகும் ராஜபாட்டைகளைச் சீர்படுத்திக்கொண்டு வரவேண்டியிருப்பதால் அந்தப் போர்டுக்கு 30,000 ரூபாய் அதிகம் கொடுத்திருக்கிறார்கள்.

## நன்றியறிவின் மஹிமை

### GRATITUDE *

காசி தேசத்தில் ஒருவேடன் வேட்டையாடுவதற்காக வனம் சென்றான். சமீபத்தில் சில மான்களைக் கண்டு விஷம் பூசின ஓர் அம்பை அவன் பிரயோகம் செய்தான். அது குறிதவறி பக்கத்திலிருந்த ஒரு பெரிய மரத்தில் தைத்தது. விஷத்தினுடைய வேகத்தினால் மரத்தின் இலைகளும் காய் கனிகளும் உதிர்ந்து மரம் பட்டுப் போய்விட்டது. அந்த மரத்தின் பொந்தில் வெகு நாளாய் வசித்துவந்த கிளி ஒன்று மரம் பட்டுப் போயும் அதனிடத்திலிருந்த அன்பினால் அதை விட்டுப் போகாமல் அதிலேயே இருந்துகொண்டு வெளியில் போகாமலும் ஆகாரம் இல்லாமலும் தேகமெல்லாம் வாடி மரத்தோடுமரமாய்த் தானும் உலர்ந்துகொண்டே வந்தது. இந்த உதாரமானதும், மனுஷ்யனைக் காட்டிலும் உயர்ந்த நடத்தையுள்ளதும், சுகத்தையும் துக்கத்தையும் சமமாகப் பாராட்டினதுமான பிராணியைப் பார்த்து இந்திரன் மிகவும் ஆச்சர்யப்பட்டு அல்ப ஜாதிக்கு இயற்கையில்லாத நன்றியறிவுயென்ற உத்தம குணமானது இந்தப் பக்ஷிக்கு எப்படி ஏற்பட்டதென்று வியப்படைந்து பிறகு பிராணிகளுக்குள்ள எல்லா லக்ஷணங்களும் எந்தப் பிராணியிடத்திலும் இருக்கலாம் என்கிற நிச்சயத்தைச் செய்தான். அதன் மேல் இந்திரன், மனுஷ ரூபத்தை யடைந்து ஒரு பிராஹ்மண வேஷம் பூண்டு பூலோகத்தில் இறங்கி அந்தப் பக்ஷியைக்கண்டு "ஓ, பக்ஷியே, இந்தப் பட்ட மரத்தை விட்டுப்போகாமல் ஏன் அதிலேயே இருந்துகொண்டு கஷ்டப்படுகிறாய். இந்தப் பெரிய வனத்தில் அழகிய இலைகளோடும், பொந்துகளோடும், நீ நன்றாய் சஞ்சரிக்கக்கூடிய ரம்யமான இன்னும் பல விருக்ஷங்கள் இருக்கின்றனவே. அப்படியிருக்க இலை யுதிர்ந்து பட்டுப்போய் ஸாரமற்று அழகு குலைந்து வஸிக்க இடமில்

* Adapted from Mahabharata, Anusasana Parva.

லாத இந்த மரத்தை ஏன் அண்டிக்கொண்டிருக்கிறாய். உடனே விட்டு விடு" என்று இந்திரன் சொன்னான். அதற்கு மிகவும் உத்தம ஸ்வபாவமுள்ள அப்பக்ஷி, பெருமூச்சு விட்டு மிகவும் தீனமான ஸ்வரத்துடன் இவ்வாறு சொல்லிற்று. "இந்த மரத்தில் நான் பிறந்து, இதிலேயே இளவயதில் காப்பாற்றப்பட்டு இதிலேயே நற்குணங்கள் பொருந்தி வளர்ந்தேன். ஆகையால் இந்த மரத்தினிடத்தில் நன்றியறிவுள்ளவனாய் அன்பு பாராட்டி பக்கத்தில் போகாமல் அதோடு நசித்துக்கொண்டிருக்கும் என்னிடத்தில் கருணை பாராட்டி ஏன் என்னுடைய நல்ல விரதத்திற்குக் குறைவை யுண்டு பண்ணுகிறீர். தேவதைகளுக்கெல்லாம் அரசனாயிருந்துகொண்டு தர்மவிஷயமாய் தேவதைகளுக்குக்கூட ஏற்படும் சந்தேகத்தைத் தாங்களே நிவர்த்திசெய்ய வேண்டியவர்களாய் இருக்கிறீர். அப்படிக்கிருக்க, இந்த மரம் நன்றாய் இருந்த காலத்தில் அதை யண்டி ஜீவித்துவிட்டு அது பட்டுப்போன காலத்தில் அதை விட்டுவிடும்படி தாங்களே எனக்கு உபதேசம் செய்வது தகுதியல்ல."

இந்த அழகான வார்த்தைகளைக் கேட்டு, இந்திரனுக்கு மிகவும் சந்தோஷம் உண்டாகி உனக்கு வேண்டிய வரனைக் கேளென்று சொல்ல, அந்தக் கிளியானது, "அந்த மரம் திரும்பவும் துளிர்த்துத் தழைக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டது. இந்தக் கிளியினிடத்துள்ள திருடமான பக்தியையும், குணங்களையும் கண்டு சந்தோஷப்பட்டு அந்த மரத்தின்மேல் கொஞ்சம் அமிருதத்தை இந்திரன் தெளித்தான். உடனே, அந்த மரத்திற்கு அழகான கொம்புகளும் கிளைகளும் உண்டாகி, துளிர்களும் இலைகளும் தழைத்துப் பழங்கள் நிறைந்து முன்னிருந்ததைப் பார்க்கிலும் மிகவும் செழிப்பாய் விளங்கிற்று. அந்தக் கிளியும் இறந்த பிறகு இந்திரலோகத்தை யடைந்தது. இவ்விதமாகவே பக்தியுள்ள ஒரு மனுஷனை அண்டினால் எப்பொழுதும் நல்ல கதி யுண்டாகும்.

G. S. கிருஷ்ணஸ்வாமி ஐயர், பி. ஏ.

## யானைகள்

## ELEPHANTS

மேஜர் ஸ்கின்னர் என்பவர் (Major Skinner) யானைகளைப்பற்றி சொல்லும்போது பெரிய காட்டு யானைகளா யிருக்கிறவைகளும் கூட மிகவும் கீழ்ப்படியக் கூடியனவாயும், அமைதியுள்ளனவாயிருப்பதும் தவிர, மிகவும் ரோஷமுள்ளனவாயுமிருக்கின்றன என்று கூறி யிருக்கிறார். இலங்கைத்தீவில் சிங்களர்கள் பெரும் யானைகளைப் பிடிப்பதற்குச் சிறிய யானைகளை விட்டு ஏய்த்து வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்யும்போது அப்பெரிய யானைகள் தங்களைப் பிடித்துக்கொடுக்கும் சிறு யானைகளுக்கு யாதொரு தீங்கும் விளைக்கிறதில்லை. இதுவும் தவிர காட்டிலிருந்து புதிதாய் பிடிக்கப்பட்ட யானையானது அது பிடிபட்ட அன்று மாலையிலேயே ஒரு மனிதனுடைய கையிலிருந்த உணவைத் தன் தும்பிக்கையினால் எடுத்துத் தின்றதாம். இவ்வளவு நற்குணமும், அமைதியுமுள்ளதா யிருந்தபோதிலும் கோபம்வரும் காலத்தில் மிருகேந்திரனை சிங்கத்தைக்காட்டிலும் அதி மூர்க்கமுள்ளதாயிருக்கும். அப்படிக் கோபமும் ரோஷமும் அதிகரிக்கும் தருணத்தில் தன்னுயிரைத் தானே வலிதில் மாய்த்துக்கொள்ளக்கூடியதாயு மிருக்கிறது.

ஸர் சாமுவேல் பேக்கர் என்பவர் (Sir Samuel Baker) யானைகள் இலங்கையில் செய்த வேலைகளைப்பற்றி அடியிற்கண்டவாறுகூறியிருக்கிறார். ஒரு தரம் 20-எருமைக்கடாக்களாலும் இழுக்க முடியாத ஒரு பெரிய ஏர்க்கருவியைக்கொண்டு வந்ததாகவும், அதை ஒரு யானையானது ஒரு வேடிக்கைக் கருவியைக் குழந்தைகள் என்னவிதமாய் இலகுவாய் இழுத்துக்கொண்டு போகுமோ அம்மாதிரியாக அதை யிழுத்துக்கொண்டுபோய் ஒரு பழத்தைக் கூர்மையான கத்தியைக்கொண்டு அறுத்தால் எவ்வளவு சுலபமாக அறுக்கலாமோ அவ்வளவு சுலபமாக மிகவும் கெட்டியாயும்

கிராய்ப்புல் உள்ளதாயும் இருந்த தரையை உழுது கொண்டு போனதாகவும் சொல்லியிருக்கிறார். அதுவும் தவிர அந்த நிலத்தை விதை விதைத்த பிறகு மேற்கூறிய யானையானது, இரண்டு பெரிய மண் சமன்படுத்தும் கருவிகளையும், இரண்டு சிறிய மண்சமன்படுத்தும் கருவிகளையும் அதற்குப் பின்னால் மண்சமன் படுத்தக்கூடிய உருண்டு கொண்டேவரும் பளுவான ஒரு கருவியையும் கட்டி ஒரே சமயத்தில் இழுத்துக்கொண்டு போயிற்றாம். இப்படி ஒரு யானை செய்த தொழிலினால் எவ்வளவு கால லாபமும், தொழில் லாபமும், பணலாபமும் இருக்கிறதென்பது தானே விளங்கும்.

இம்மாதிரி வயல்களில் வேலையில்லாத காலங்களில் யானைகள் ஆறுகளுக்கு அணைமுதலானதுகள் போடுவதிலும் உபயோகப்படுகின்றன. இதற்குதாரணமாக இலங்கையில் நடந்த ஒரு சங்கதியைப்பற்றிச் சொல்லுவோம். இலங்கைத் தீவில் ஒரு நீரோட்டத்தில் அணைபோட வேண்டி நேரிட்டதாம். அந்த இடத்திற்குச் சமீபத்தில் 50-கஜ தூரத்துக்குள் புதிதாய் ஒரு காட்டையழித்து அதிலிருந்த மரங்களைப் பெருங்கட்டைகளாகத் துண்டித்துப் போடப்பட்டிருந்ததாம். அவைகளில் சில 15 அடி நீளமும் 18 அங்குல குறுக்களவும் உள்ளதாயிருந்ததாம். பாகன் உத்திரவு பண்ணியதின்மேல் யானையானது இம்மாதிரிக் கட்டைகளைத் தன் வாயில் கவ்வி தன் துதிக்கையில் அவைகளை இருபுறமும் கனம் சரியாயிருக்கும்படி யமர்த்தித் தூக்கிக்கொண்டு வந்து அந்நீரோட்டத்தில் ஒன்றுக்கொன்று வரிசையாக அடுக்கிற்றாம். இன்னும் பெரிய கட்டைகளாயிருப்பனவற்றைத் தன் தலையாலும் கால்களாலும் தள்ளித் தள்ளிக்கொண்டுபோய் சரியானபடி மட்டமாய் அடுக்கி அணைபோட்டதாம்.

யானையானது இவ்வளவு புத்தி கூர்மையுள்ளதாயிருந்தபோதிலும், அவைகளை இம்மாதிரித் தொழில்களுக்கு உபயோகப்படும்படி செய்ய நெடுநாள் பயிற்சி செய்யவேண்டும். எவ்வளவு காலம் அவைகளுக்குப் பயற்சிசெய்தாலும் அதற்கேற்ற பிரயோஜனத்தை யடையலாம். எப்படி யென்றால் யானை மற்ற மிருகங்களைப்போலச் சில காலத்துக்குள் இறந்துபோகும் மிருகம் அல்ல. சாதாரணமாய் ஒரு யானையானது 100 வருஷம் உயிரோடிருக்கும். சராசரியாய் எடுத்துப் பார்த்தால் யானைக்கு வயது 80-வருஷத்துக்குக்குறையாது. ஆனால் இலங்கைத்தீவிலோ சில யானைகள் 150 வருஷம் வரை உயிரோடிருந்து வேலைசெய்து கொண்டிருந்ததாகவும் தெரிகிறது.

பழகின யானைகளை இலங்கைத்தீவில் காடுகளை யழிப்பதிலும், மரங்களை யிழுப்பதிலும், பாதைகள் போடுவதிலும், கற்பாலங்கள் கட்டுவதற்குப் பெருங்கற்களைக் கொண்டுவந்து சேர்க்கவும் உபயோகப் படுத்துகிறார்கள். யானையின் தலையில் எலும்பும் தசையும் சேர்த்துச் சுமார் 8 அங்குல கனமுள்ளதா யிருக்கிறது. அப்படி யிருக்கும்போது அதைக்கொண்டு எவ்வளவு பலமாயும் வேகமாயும் தள்ளும் என்பதைப்பற்றி சொல்ல வேண்டியதில்லை. யானையின் மத்தகம் அவ்வளவு பெரியதாயும், கெட்டியாயும், கனமுள்ளதாயிருந்தபோதிலும் அதற்குள்ளிருக்கும் மூளையானது மண்டையின் அரைக்கால் பாகத்தில் தான் இருக்கிறது. இக்காரணத்தினால்தான் யானையைச் சரியான இடத்தில் எய்து இறக்கச் செய்வது கடினம். அப்படி இடங்கண்டு பிடித்து எய்து கொல்லக்கூடியவன் மிகத்திறமையுள்ளவனும் தேர்ச்சியுள்ளவனுயு மிருக்கவேண்டும்.

யானையின் உற்பத்தியும் வளர்ச்சியும் மிகவும் தாமதமானது. சாதாரணமாய் ஒரு பெண் யானையானது பக்குவப் பிராயம் அடைய பதினைந்து வருஷம் செல்லும். அது குட்டியை இருபத்திரண்டு மாதகாலம் வயிற்றில் வைத்திருந்து தான் ஈனும். ஆகையால் முதல்குட்டி போடுவதற்குள் பெண்யானைக்கு வயது 17 ஆகிவிடும். ஒவ்வொரு தடவையிலும் ஒரு குட்டிதான் போடும். அதற்கு இரண்டு வருஷகாலம் பால் கொடுத்து வளர்க்கும். அவைகளுக்கு இரண்டே

முலைக்காம்புகள் தான் உண்டு. அவைகள் முன்னிரண்டு கால்களுக்கும் மத்தியில் இருக்கின்றன. யானைக்குட்டிகள் வாயினால்தான் பால் குடிக்கும், தும்பிக்கையினால் குடிக்காது. ஆண் யானைகள் சரியான வயதுக்குவர இருபது வருஷமாகும். ஆனால் பிடித்து வளர்க்கும் யானைகளுக்கு 25 வருஷமாகும்.

யானை இவ்வளவு பெரிய ஜந்துவாய் இருந்தபோதிலும் மிகவும் மிருதுவான தேகத்தை உடையதா யிருக்கிறது. சரியானபடி பாதுகாக்காவிட்டால் யானையின் பாதமானது வெகு சுலபமாய் புண்ணாகக் கூடியதாயும், சரீரத்தின் மேல்தோல் மிகவும் இலேசில் வழுவுண்டு போகக் கூடியதாயும் இருக்கின்றது. யானை பெரு உருவமாயிருந்தபோதிலும் மிகச் சிறுத்த இருகண்களை உடைத்தாயிருக்கிறது. அக்கண்களோ கொஞ்சம் வெயில் அதிகமாய்ப் பட்டால் பொங்கி அழற்சியை யுண்டாக்கக்கூடிய தன்மைத்தாயிருக்கின்றன. யாதொரு வியாதியுமற்ற ஒரு யானையானது ஒருநாளைக்கு நாற்பது மைல் ஒரே நடையாய் நடந்துபோகும். ஆனால் அதை வேகமாய்த் துரத்திக்கொண்டு போனதினால் அதற்கு உபத்திரவம் ஏற்பட்டு இறந்து போனதாகவும்கூடத் தெரிகிறது. இதனால் யானை பாதத்தின் மெல்லிய தன்மையும் சரீரத்தின் மேன்மையும் நன்கு விளங்கும்.

யானைகளின் பாதங்கள் மிருதுவானவைஎன்று காட்டுவதற்குத் திருஷ்டாந்தமாகப் பிரிஸ்டல் (Bristol) நகரத்தில் ஒரு பழகின யானைக்கு நேர்ந்த ஒரு விஷயத்தைப்பற்றிக் கூறுவோம். அந்த யானையானது இருந்தாப்போல் இருந்து யாதொரு காரணமும் தெரியாமல் சரீர அசௌகர்யத்தை யடைந்ததுமன்றி நொண்டியாயும் போய்விட்டதாம். லண்டன் நகரத்தின் விலங்கினங்கள் கண்காட்சிசாலை சூப்பிரண்டாக மிஸ்டர் பார்லெட் (Mr. Barlett) என்பவரைக் கேட்டுக்கொண்டதின்மேல், அவர் யானையைவந்து பார்வையிட்டு இவ்விடத்தில் எலிகள் இருக்கின்றனவா என்று கேட்டாராம். இது பழங்கட்டடம் ஆனதினால் எலிகள் இருக்கின்றன என்று சொன்னார்களாம். அதற்கு அவர் அந்த எலிகள் இந்த யானையின் பாதத்தை அரித்திருக்கின்றன. நீங்கள் பார்த்தால் உள்ளங்காலில் பல்பட்ட இடங்கள் நன்றாய்த் தெரியும். யானை தூங்கும் போது எலிகள் வந்து அதின் பாதத்தை உட்சதையில் படும்வரை தின்றிருக்கிறது. அப்படித் தின்றதனால் பாதத்தில் சிறு பள்ளங்கள் ஏற்பட்டிருக்கிறது. அப்படி யிருக்கும்போது யானை வெளியில் நடந்துபோனதினால் சிறுகல் துண்டுகளும், மண்ணும் அதில் நுழைந்து கொண்டு யானை இம்மாதிரியாக நொண்டுகிறதென்றாராம். பிறகு அந்த எலிகளைப் பிடித்து விட்ட பிறகு யானை சவுக்கியத்தை யடைந்ததாம். இதைப்பார்க்கும்போது யானையின் பாதம் மிகவும் கெட்டியாக வெளித் தோற்றத்திற்குக் காணப்பட்டபோதிலும் உண்மையாய் இவ்வளவு மிருதுவானதென்பது நன்றாய் விளங்கும்.

கடைசியாய் யானைகள் தண்ணீரில் நீந்தும் சக்தியைப்பற்றி சொல்லி முடிப்போம். தரையின் மீது வசிக்கும் எல்லா ஜீவப்பிராணிகளிலும் யானையானது தண்ணீரில் நன்றாய் நீந்தக்கூடிய திறமையுள்ளது. இலங்கையில் இருப்பதை விட இந்தியாவில் பெருநதிகளிருப்பதால் யானைகள் இவ்விதம் நீந்துவதை இந்தியாவில் விசேஷமாய்க் காணலாம். மைசூரிலிருந்த மிஸ்டர் சாண்டர்ஸன் (Mr. Sanderson) என்பவர் தான் ஒரு சமயத்தில் டக்கா (Decca) விலிருந்து பாரக்பூர் (Barrackpore) என்கிற இடத்திற்கு 79-யானைகளை யனுப்பினதாகவும் அந்த மாதிரி போகும்போது அவைகள் கங்காநதியை மாத்திரமன்றி இன்னும் சில கிளைநதிகளையும் கடந்து சென்றனவெனக் கூறுகிறார். அந்த யானைகள் இடைவிடாமல் ஆறு மணி நேரம் நீந்தினவாம். பிறகு மணற்கரையில் சற்று நேரம் இளைப்பாறி மறுபடியும் அதே மாதிரியாக இன்னும் மூன்றுமணி நேரம் நீந்தினவாம். இவைகளினால் யானையின் நீந்தும் உன்னத சக்தி யினிது விளங்கும்.

பி. ஆர். வேங்கடேசலு நாயுடு.

## அட்டைகளும், மண் உண்ணிப் புழுக்களும்

### LEECHES AND WORMS

நெளிந்து நகரக்கூடிய பிராணிகள் ஒவ்வொன்றையும் பொதுவாகவே புழு அல்லது கிருமி என்று சொல்வது இந்நாட்டில் வழக்கமாயிருக்கிறது. அவ்வினத்தினுடைய பொது லட்சணங்களைச் சற்று விசாரிக்குமுன் அவ்வினத்திற் சேர்ந்த சில சாமான்ய புழுக்கள் அல்லது கிருமிகளையும் அவைகள் காணுமிடங்களையும் பற்றிக் கொஞ்சம் விசாரிப்பது அவசியம். தாமரைக் குளங்களில் பூப்பறிக்கச் சென்றவன் அட்டை கடித்தது என்கிறான். அதுவும் ஒரு புழுதான். மீன் பிடிக்கிறவன் தூண்டிமுள்ளுக்குப் பட்சணமாக மண் உண்ணிப்பூச்சி என்ற புழுவைத் தோண்டி உபயோகப்படுத்துகிறான். அதுவும் ஒரு ஜாதிப்புழு. நமது குடலில் புழுக்கும்படியான * நாக்குப்பூச்சி என்ற புழுவும், நாடாப்புழு (Tape-worm) என்றதுவும், நரம்புச்சிலந்தி என்ற வியாதியை உண்டுபண்ணும் படியான கிருமியும், புழுவினத்தைச் சேர்ந்தவைதாம். இவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இனமாக உட்பிரிவுகளுடன் வளர்ந்து வாழ்வனவாயினும் இவைகள் ஒவ்வொன்றின் செய்கைகளும் வெவ்வேறு விதமாகத் துக்கசுகத்துக்கு ஆஸ்பதமான செய்கைகளில் நாம் கண்ட போதிலும் அவைகளெல்லாவற்றிற்கும் சில பொதுவான லட்சணங்கள் அல்லது பொது அங்க அடையாளங்கள் உண்டென்று உயிர் நூலாராய்ச்சி யுடையோர் கூறியிருக்கின்றனர். அவைகளாவன.

(a) மேற்சொல்லிய புழுவினங்கள் ஒவ்வொன்றும் உருண்டு நீண்டு தேகமே வரையறுக்கப்பட்டுக் காணுவதுடன், அநேகமாய் ஒரு நுனியில் வாயையும் இன்னொரு நுனியில் ஆசனத்தையும் பெற்றுக் காணும்.

(b) நகர்ந்து நிலைபெயர உபகாரமாயுள்ள கைகால்கள் பிரத்தியேகமாயில்லாதபோதிலும் தேகத்தைச் சுருக்கி நீட்டுதலாலும், நெளியும் திறமை ஏற்பட்டு அட்டையைப்போல் நீந்தவும், மற்றைப் புழுக்களைப்போல் நெளிந்து நகரவும், சக்தியோடு இருக்கின்றன. பிடித்துக்கொள்ள, உறிஞ்சும் அவயவங்கள் (Suckers) அட்டைகளினிடத்திலும், நம் தேகத்தில் புழுக்கக்கூடிய மற்றைய கிருமிகளிடத்திலும் காணலாம். மற்றப்படி நகருவதற்கு உபகாரமாக மண்பூச்சிகள் தேகம் முழுமையும், கடினமாயும் மிக நுட்பமாயுள்ள முட்களால் (Setæ) நிறைந்த ஒரு போர்வையை யுடையனவாய்க் காணும்.

(c) உண்டு களிக்க உபயோகப்படும்படியாக மூன்று மேல்வளைந்த ரம்பம்போன்ற நாக்குகளை அட்டைகள் உறிஞ்சும் வாயில் அடக்கிக்கொண்டிருக்கின்றன. அவைகளினுபயோகத்தினாலே தான் நொடிப்பொழுதில் மூன்று பிளவுகளை நம் தோலில் உண்டாக்கி, உறிஞ்சும் வாயால் வயிறார இரத்தம் குடிக்கிறது.

பிராணிகளின் தேகத்தின் உட்புழுக்கும் கிருமிகளோ உறிஞ்சும் அவயவங்கள் தவிர வாய்ப்பக்கத்திலோ அல்லது ஆஸனப்பக்கத்திலோ சில கொக்கிகளுடன் காணும். இவைகளினுதவியினால்தான் அவைகள் நம் குடலின் உள் தோலைக் குத்திப்பிடித்துக்கொண்டு உள்ளேயேயிருந்து தம் வாழ்நாளைக் கழிக்கின்றன. நாக்குப்பூச்சி மருந்துபோன்ற மயக்கம் தந்து ஹிம்ஸை செய்யக்கூடிய மருந்துகளால்தான் அவைகளை இடம்விட்டு விலகி ஒழியச் செய்யலாம். சாப்பிடும் உணவு, தேகமாகக்கூடிய ஜீரணித்த நிலைமையிலிருக்கிறபடியால் மேற்கூறிய கிருமிகளுக்கு ஜீரணக்கருவிகள் அதிகம் வேண்டியதில்லை. ஆனால் குடித்த ரத்தம் உறைந்து போகாதபடி பாதுகாக்க அட்டைகளுக்கு உமிழ்நீர் உறுப்புகள் இருக்கின்றனவாம். மண்புழுக்-

* நாக்குப்பூச்சி யென்பதை நாகப்பூச்சி யென்று நூலாசிரியர்கள் கூறுவர். நாகம்போன்ற பூச்சியாதலின் அதற்கு இப்பெயர் வந்தது போலும்.

283



கள் மண்ணையே தின்று ஜீவிக்கிற விசேஷத்தை நம்மவர்கள் முன்னமேயே கண்டறிந்திருக்கிறார்கள் என்பதற்கு மண் உண்ணிப்பூச்சி யென்ற பெயரே அத்தாட்சியாக இருக்கிறது. மண்ணைத் தின்று பிழைப்பன செடிகளன்றோ? மண்புழுவெனப்படுவது பிராணியன்றோ? இவ்வாறிருக்கையில் மண்ணைப் பிராணி எவ்வாறு உண்ணும் என்று நாம் தெரிந்துகொள்ளல் அவசியம். மண்ணோடு கலந்து அநேக செடிவஸ்துவும் பிராணிவஸ்துவும் அழுகி நிலைகுலைந்து ஒருவித ரஸ பதார்த்த நிலைமையிலிருக்கின்றன. அவ்வித ரஸ பதார்த்தத்தையே உட்கொள்ளும் பொருட்டு மண்ணை இப்புழுக்கள் உட்கொள்ளுகின்றன. உபயோகமுள்ள பதார்த்தத்தைத் தேகத்துக்கு உணவாக எடுத்துக்கொண்டு தங்களுக்குஉபயோகமில்லாத மண்ணைக் கழிவு பதார்த்தத்துடன் மலமாக விலக்குகின்றன. இவ்வாறு மண்புழுக்கள் செய்யும் செய்கை நிலத்துக்கு உழுது உரம் வைத்ததுபோல் ஆகிறது. மேல்மண் கீழ்மண்ணாகப் புரளவும், இப்பிராணிகளின் கழிவு பதார்த்தங்களோடு சேர்ந்த மண்ணே உரமாகவும் ஏற்படுகிறது. இவ்விஷயத்தை (Darwin) டார்லின் என்ற உயிர்நூல் நிபுணர் விஸ்தாரமாக ஒரு புஸ்தகத்தில் கண்டுபிடித் தெழுதியிருக்கிறார்.

ஆகையால் இவைபோன்ற ஜீவராசிகள் மனிதற்குச் செய்யும் உபகாரத்தை உற்று நோக்குங்கால், உபகாரார்த்தமாகவே ஜீவிக்கும் ஜீவராசிகள் அளவிறந்தன வென்றும் அவைகளை நாம் போற்றி ஆதரிக்க வேண்டியது அவசியமென்றும் இவைகளால் புலப்படும்.

புழுவினத்தில் ஆண் பெண் என்ற விபரம் நாக்குப்பூச்சிபோன்ற சில புழுக்களில்தான் காணலாம். ஏனைய புழுக்கள் ஆணுறுப்புகளையும் பெண்உறுப்புகளையும் தனித்துத் தன்னிடமே கொண்டு அர்த்தநாரியாக விளங்குகின்றன. இருந்தபோதிலும், ஒரு பிராணியின் ஆண்உறுப்பும் பெண் உறுப்பும் ஒரேகாலத்தில் விகசித்துப் பக்குவகாலம் அடைகிறதில்லை. அவ்வாறு அடையுமாயின் அவைகளின் சேர்க்கையால் கருத்தரித்துப் புழு இனமே குன்றிக் குலைந்து நசித்துப் போய்விடும். அதற்கு அத்தாட்சி வெகுதூரம் போய் விசாரிக்கவேண்டாம். ஒன்றுக்குள் ஒன்று நெருங்கிய சம்பந்தத்தையே நாடும் குருக்கள் ஜாதிபோன்ற சில ஜாதிக் குடும்பங்களைப் பரிசோதித்துப் பார்த்தால் தெரியும். சகோத்திரம் உதவாது என்றும் ஏழு தலைமுறை விலகி இருக்கவேண்டுமென்றும் சம்பந்த முறைகளைக் கூறவந்த மனுவும் இதே அபிப்பிராயத்துடன் இருந்தாரென்பது நிச்சயம். ஆகவே ஒரு புழுவின் சுக்கிலத்திற்கும் இன்னொரு புழுவின் சுரோணிதத்துக்குமே விவாகம் ஏற்பட்டு அவ்வினத்தில் மக்கட்பேறு நடந்தேறி வருகிறது.



புழுக்கள் கருத்தரித்தால் முட்டை யிடுகின்றனவா, குட்டி போடுகின்றனவா என்ற விபரமும் நமக்குத் தெரியவேண்டியது அவசியம். பெரும்பாலும் இவைகள் முட்டைகள்தா னிடுகின்றன. சில நாக்குப் பூச்சி இனத்தைச் சேர்ந்த புழுக்களை வயிறு நிறையத் தம் குஞ்சுகள் நெளிய நிற்கும் நிலைமையில் நான் பரிசோதித்திருக்கிறேன். அவைகளே குட்டிபோடும் இனம். வியாதிகளுக்குக் காரணபூதமாக இருக்கும் நரம்புச் சிலந்தியோ, நாடாப்புழுவோ இவைகள் மலத்தின் மூலமாகத் தம் முட்டைகளைக் கடத்திவிட்டு, அவைகள் மறுபடி ஜலத்தின் மூலமாகவோ, அஜ்ஜலத்தைப் பருகும் ஆடு, கோழி போன்ற பிராணிகள் மாமிசத்தின் மூலமாகவோ, மறுபடி மனுஷ தேகத்தையே அடைகின்றன. ஆகையால் நாம் குடிக்கும் ஜலமும் சாப்பிடும் உணவும் சுத்தமாக இருப்பதுடன் நன்றாகக் காய்ச்சிக் கொதிக்க வைத்ததாக இருக்கவேண்டுமென்பது அவசியமாக இருக்கிறது.

இப்புழுக்களைப்பற்றிய ஆராய்ச்சியினாலும் நமக்குச் சுகாதாரமுறைகளை அனுசரிப்பது எவ்வளவு அவசியம் என்பது நன்றாகவிளங்குகிறது.

புழுக்களிலும் சில, வைத்திய முறைகளில் உபயோகப்படுத்தக் கூடியவைகளாயும் இருக்கின்றன. இரத்தத்தைக் கடித்து உறிஞ்சும் அட்டையின் சுபாவத்தைக்கண்டு, வேண்டாத இரத்தம் ஒருவருடைய தேகத்திலிருக்குமாயின் அட்டைகளைக்கொண்டு உறிஞ்சச் செய்கிறார்கள், விஷநீர்ப்பெருக்கத்தினால் வீக்கமுள்ள இடங்களிலும் அதே பிரயோகம் செய்கிறார்கள்.

N. S. ஐம்புநாதன், B.A., L.T., F.Z.S.

# வஸ்துதத்துவ போதினி

## CHEMISTRY

### Air

காற்று அல்லது ஸஹஜவாயு

What it contains.—அதிலடங்கியிருக்கும் வஸ்துக்கள்.

உலகத்தைச்சுற்றிலும் காற்றுமண்டலம் அல்லது வாயுமண்டலம் மூடிக்கொண்டிருக்கிறது என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். இந்த ஸஹஜவாயுவை நாம்கண்ணால் பார்க்கமுடியாவிட்டாலும், வேறு உணர்ச்சிகளால் அறிகிறோம். நமது கைகளை அங்குமிங்கும் அசைக்கினாலும், ஒரு விசிறியை எடுத்து விசிறினாலும், நம்மைச் சுற்றிக் காற்றிருப்பதை அறிகிறோம். இம்மண்டலத்திலுள்ள ஸஹஜவாயு அங்குமிங்கும் அடிக்கப்படுவதால் நிலக்காற்று, கடற்காற்று, புயல், தென்றல் முதலிய காற்றசைவுகள் உண்டாகின்றன. இந்த வாயுவின் குணங்களை அறிவதற்கு முன், இதிலடங்கியிருக்கும் வஸ்துக்கள் இன்னவையென்று பார்ப்போம். முக்காலத்தவர்கள் இவ்வாயுவை ஒரு மூலவஸ்து என்று நம்பினார்களென்று முன்னமே கூறியிருக்கிறோம். ஆனால் இதில் வெவ்வேறாகப் பிரிக்கக்கூடிய அநேக வஸ்துக்கள் இருப்பதை, இப்பொழுது பார்ப்போம்.



படத்திற் காட்டியிருப்பதுபோல், மணி போன்ற வடிவமுள்ள, அதாவது ஒரு பக்கம் அகன்ற வாயும், மற்றொரு பக்கம் குறுகியவாயுமுள்ள, ஒருகண்ணாடிப்பாத்திரத்தை எடுத்துக் கொள்வோம். தண்ணீர் நிறைந்த ஒரு பீங்கான் தொட்டியை எடுத்து, தண்ணீரின்மேல் ஒருசிறு பீங்கான்கிண்ணத்தை மிதக்கச்செய்வோம். பிறகு நிபாக்கினி (பாஸ்பரஸ்) துண்டு ஒன்றை (சிறு பட்டாணி அளவு) யெடுத்து, அப்பீங்கான் கிண்ணியில் போடுவோம். இந்த நிபாக்கினியை எடுத்துப்போடுவதில் மிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். இதைக் காற்றுப்படும்படி சிறிது நேரம் வைத்தால், நெருப்புப்பற்றி தானே எரிய ஆரம்பிக்கும். ஆகையால், இதை ஒரு புட்டியில் குளிர்ந்த நீரை ஊற்றி; அந்நீருக்குள் வைத்திருக்கவேண்டும். நமது சாதாரண தீக்குச்சியின் சிவப்பான நுனியில் வைக்கப்பட்டிருக்கும் வஸ்து இந்த நிபாக்னியே. இப்பொழுது நமது பீங்கான் கிண்ணத்திலிருக்கும் நிபாக்னித்துண்டை ஒரு சூடான இரும்புக்கம்பியினாலாவது, கண்ணாடிக்குச்சியினாலாவது தொடுவோம். உடனே இத்துண்டு தீப்பற்றி எரியும். மிக சீக்கிரமாக நமது மணிபோன்ற பாத்திரத்தைத் தொட்டியின் ஜலத்திற்குள், பீங்கான் கிண்ணம் பாத்திரத்திற்குள் அகப்படும்படி, வைக்கவேண்டும். உடனே மேலிருக்கும் பாத்திரத்தின் சிறுவாயை ஒரு தக்கையால் மூடவேண்டும். சற்று தாமதித்தாலும் நிபாக்னி எரிவதாலுண்டாகும் வஸ்து வாயுமண்டலத்தில் சிதறிவிடும். இப்பொழுது நமது பாத்திரங்களைக் கொஞ்சம் கவனிப்போம். நிபாக்னி எரிவதால் உண்டாகும் ஒருவித புகைபோன்ற வஸ்து முதலில் பாத்திரம் நிறைய காணப்படுகிறது. நிபாக்னி கொஞ்சம் எரிந்து பிறகு அணைகின்றது. இந்தப் புகைபோன்ற வஸ்து வரவரக் குறைந்து, சிறிது நேரத்திற்கெல்லாம், முற்றிலும் நிறைகிறது. இவ்வஸ்து எங்கு போகக்கூடும்? வாயுமண்டலத்தில் சிதறியிருக்க முடியாது; ஏனென்றால், பாத்திரத்தின் வாயை இறுக தக்கையால் மூடியிருக்கிறோம். ஆகையால் தொட்டியின் ஜலத்தில் கரைந்திருக்க வேண்டும். இதில் மற்றொரு விஷயம் கவனிக்க வேண்டும். இப்புகைபோன்ற நீரில் கரைந்து

கொண்டிருக்கும் போதே, பாத்திரத்தில் முதலி லிருந்த நீர்மட்டத்திற்குமேல் ஜலம் கொஞ்சம் கொஞ்சமாக ஏறுவதைக் கவனித்திருக்கலாம். கடைசியாக, முதலிலிருந்த நீர்மட்டத்திற்கு வெளியே காணப்பட்ட பாத்திரத்தில் ஏறக் குறைய 5-இல் ஒரு பாகம்(1/5) ஜலம் ஏறியிருக் கிறது. அதாவது அப்பாத்திரத்திலிருந்த காற்று அல்லது ஸஹஜவாயுவின் 5-ல் ஒரு பாகம் எங் கேயோ போய்விட்டது. அக்காற்றிருந்த இடம் காலியாக, நீர் உயர ஏறிற்று. இப்படிக் காணமல் போன வாயு நிபாக்னியோடு கலந்து எரிய, அப் புகைபோன்ற வஸ்து வந்தது. இப்பொழுது பாத்திரத்தில் தங்கியிருக்கும் வாயுவைச் சற்று பார்ப்போம். ஒரு எரியும் திரியையாவது, மெழுகுவத்தியையாவது, பாத்திரத்தின் தக் கையை எடுத்துவிட்டுச் சீக்கிரமாகச் சிறுவாயின் வழியாய்ப் பாத்திரத்தின் வாயுவில் வைப்போம். எரிகின்ற திரி அல்லது மெழுகுவத்தி அணைகின் றது. மெழுகுவத்தியை எடுத்துத் தீப்பற்றச் செய்து மறுபடி அந்த வாயுவில் வைப்போம். இப்பவும் வத்தி அணைந்துபோகிறது. ஆகை யால் நமது ஸஹஜவாயுவில் இரண்டுவித வஸ் துக்கள் இருக்கின்றனவென்று தெரிகிறது. வஸ் துக்களை **எரியச்செய்யக்கூடிய** வாயு ஒன் றும், வஸ்துக்களை **எரியவிடாத** வாயு மற் ருென்று மிருக்கின்றன. இதில், முதலாவ தற்குப் **பிராணவாயு** என்றும், இரண்டாவதற்கு **உப்புவாயு** என்றும் பெயர். இவைகளைப்பற்றி பிறகு பார்ப்போம்.

இவைகளைத்தவிர வேறு வஸ்துக்கள் ஸஹஜ வாயுவில் இருக்கின்றனவா என்று பார்ப்போம். ஒரு கண்ணுடி மூக்குக்கிண்ணத்தை எடுத்து, அதில் கொஞ்சம் பனிக்கட்டியைப் போடுவோம். சற்று நேரத்திற்கெல்லாம் பாத்திரத்தின் வெளிப் பக்கத்தில் நீர்த்துளிகள் காணப்படுகின்றன. இவை எங்கிருந்து வந்தன? உள்ளிருக்கும் பனிக்கட்டியின் நீர் வெளியே கசிந்திருக்கக் கூடுமா? இல்லை. நீர் மட்டத்தின் வழியாய் கசி வதுபோல், கண்ணுடிப் பாத்திரத்தில் கசி யாது நமது மூக்குக்கிண்ணத்தின் வெளிப்பக் கத்தில் நாம் ஜலத்தைத் தெளிக்கவில்லை. ஆகை யால் வாயுமண்டலத்தில் நீராவி (நீரின் ஆவி) இருக்கிறதென்றும், அந்த ஆவி பனிக்கட்டியின் குளிர்ச்சியால் நீர்த்துளிகளாக மாறிற்று என் றும் தெரிகிறது. பாத்திரத்தில் பனிக்கட்டி யோடு கொஞ்சம் சாதாரண உப்பைக் கலந்து வைத்துப் பார்ப்போம். கொஞ்ச நேரத்திற் கெல்லாம் பாத்திரத்தின் வெளிப்பக்கத்தில் ஒரு வித வெண்மையான வஸ்து காணப்படுகிறது. அதைக் கையால் தொட்டுப் பார்ப்போம். தொட் டவுடன் நீராக மாறுகிறது. இது என்ன? உப்பும் பனிக்கட்டியும் சேர்ந்தால் **சீதோஷ்ண** நிலை குறைகிறது. மிகக்குளிர்ந்த நிலையிலிருப் பதால், பாத்திரத்தின் சமீபத்திலுள்ள (வாயு மண்டலத்தின்) நீராவி உறைபனியாக மாறிப் பாத்திரத்தின் வெளிப்பக்கத்தில் தங்குகிறது. அதை நாம் தொடும்போது நமது தேகத்தின் உஷ்ணம் படுவதால் அது நீராக மாறுகிறது. இவ்விரண்டு பரீட்சைகளாலும் வாயுமண்டலத் தில், அதாவது ஸஹஜவாயுவில் நீராவியிருக்கிற தென்று அறிகிறோம்.

நமது வீடுகளில் உள்ள சுண்ணும்புப் பாத் திரத்தின் தண்ணீரின்மேல் என்ன பார்க்கிறோம்? ஏதோ வெண்மையான வஸ்து ஒரு படையாக மிதக்கப் பார்க்கிறோம். அது என்ன? நாம் முதலில் பாத்திரத்தில் சுண்ணும்பைப் போட்டு, தண்ணீர் விட்டபோது இது காணப்படவில்லை. இவ்வெண்மைப்படை சிமைச் சுண்ணும்புப் படை. ஆகையால் எவ்விதமாகவோ இச்சிமைச் சுண்ணும்பு உண்டாயிருக்கவேண்டும்.

சிமைச் சுண்ணும்போ, சுண்ணும்பும்,கரியமில

வாயுவும் கலந்த ஒரு சேர்க்கைப்பொருள். ஆகையால் இப்பொழுது இச்சிமைச் சுண்ணும்பு உண்டானதற்கு இவ்விரண்டு வஸ்துக்களும் வேண்டும்; அதில் சுண்ணும்பு, பாத்திரத்தின் நீரில் கரைந்து இருந்தது. கரியமில வாயு எங்கிருந்தது? வாயு மண்டலத்தில் அல்லது ஸஹஜவாயுவில் கலந்திருக்கவேண்டும். ஆகையால் ஸகஜ வாயுவில் கரியமிலவாயு இருக்கிறதென்று தெரிகிறது. ஒரு சிறு பீங்கான் கிண்ணத்தில் கொஞ்சம் சுத்தமான சுண்ணும்பு ஜலத்தை எடுத்துக் காற்றுப்படும்படி வைத்தால், சிறிது நேரத்திற்கெல்லாம் சிமைச்சுண்ணும்புப் படை அந்த நீரில் மிதக்கும். அந்த ஜலத்தைக் கலக்கிக் கொண்டே யிருந்தால், அது கொஞ்சம் கொஞ்சமாக வெண்மை நிறம் அடையும். சிமைச் சுண்ணும்புப் பொடிகள் அந்த நீரில் மிதப்பதால் இவ் வெண்மை நிறம் உண்டாகிறது. இவ்விஷயத்தாலும் ஸஹஜ வாயுவில் கரியமில வாயு இருக்கிறதென்றுகிறது.

ஆகையால் முற்காலத்தவர்கள், மூல வஸ்துவென்று நம்பின ஸஹஜ வாயுவில் உப்புவாயு, பிராணவாயு, நீராவி, கரியமிலவாயு முதலிய வஸ்துக்கள் இருக்கின்றன. இன்னும் நவச்சாரவாயு, உப்பு அமிலம் அல்லது உப்புவாயு புளிப்புத் திராவகம் முதலிய வஸ்துக்களிருக்கின்றன. இவைகளைத்தவிர ஆர்கான், கிரிப்டான், நியான் முதலிய வஸ்துக்களும் மிகக் கொஞ்சம் இருப்பதாக இப்பொழுது வஸ்து தத்துவ சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனல் இவைகளில் உப்புவாயு ஏறக்குறைய 5-இல் 4 பாகமும் (4/5), பிராணவாயு ஏறக்குறைய 5-இல் ஒரு பாகமும் (1/5) மற்றவை மிகக் கொஞ்சமாயுமிருக்கின்றன.

M. R. சுப்பிரமணியம், பீ. ஏ.

## வஸந்த மாளிகை

## VASANTHA MALIKAI

### அத்தியாயம் 3.

### திருவூர் மடம்.

**பா**ண்டியர் காலம் முதல் திருவூர் என்னும் கிராமத்தில், ராஜபுருஷர்கள் வஸதியின்பொருட்டு, உஷ்ண காலங்களில், தங்குவதற்காக ஓர் அரண்மனை யிருந்ததென்றும், அஃது கி. பி. 1310-ம் வருஷத்தில், டில்லியில் அரசாண்ட மகமதிய சக்ரவர்த்தி, 'அல்லாவுதீன்' என்பவரின் ஸேனாதிபதியான 'மாலிக் காபர்' என்பவரால் முற்றுகை போடப்பட்டு, அவ்வரண்மனையும் கைவசப் படுத்தப்பட்டபொழுது, ஆங்கு அடைக்கலம் புகுந்தவர்கள் கத்திக்கு இரையாக்கப்பட்டதுமல்லாமல், அவ்வரண்மனையும், அதைச்சார்ந்த சித்திரவேலைப்பாடுகளும், உயர்ந்த மாடமாளிகைகளும், ரமணீயமான உத்யான வனங்களும், அன்னவன் ஆக்ஞைப்படி, ராணுவ வீரர்களால் நாசஞ்செய்யப்பட்டனவென்றும், அதுமுதல் அவ்வரண்மனையில் அன்றிருந்தோரின் பிசாசங்கள் நிலையமாய் ஸஞ்சரித்துக் கொண்டிருந்ததால், அப்பக்கத்தில்கூட மனிதர் நடமாடக் கூடாமல் அவ்வரண்மனை பாழடைய விடப்பட்டதென்றும், இப்பொழுது நமது சரித்திர காலத்தில், சுமார் நானூறு வருஷங்கள் சென்று விட்டனவாதலாலும், அங்கே வஸிக்கும் பண்டார ஸந்நிதியின் மந்திர சக்தியாலும் ஜபதபாதிகளாலும், அப்பிசாசங்கள் முத்திபெற்றுப் போயினவென்றும் அச்சந்நிதியின் அற்புதச் செய்கைகளால், அதிக சந்தோஷமடைந்த மஹாராணியார், அவ்வரண்மனையையும், அதைச் சுற்றிலுமுள்ள திருவூர் கிராமத்தையும், மந்திரியின் சிபார்சின் பேரில், அப்பண்டார ஸந்நிதிக்கே தானம் செய்து சாசுவதக்கௌலும் கொடுத்திருப்பதாயும், அவ்வரண்மனை இப்பொழுது திருவூர் மடமாய் விளங்கி வருவதாயும் அதில் திருவூர் பண்டார ஸந்நிதி யொன்று ஸ்தாபிக்கப்பட்டிருப்பதாயும், சரித்திரங்கள் மூலமாயும், சில சாஸனங்கள், தாம்ரசாஸனங்கள், பிரத்யக்ஷதர்சிகளாலும், தெரிய வருகின்றன.

அம்மடாதிபதி யெப்பொழுதும் ஸ்நாநாதி ஜபதபம் யோகம் பிரம்மவிசாரணை முதலான வேதாந்த விசாரங்களினாலேயே அதிபுத்திமான்களுடனும் நல்லோர்களுடனும் ஸத்காலக்ஷேபம் செய்துவருவதால், ஸாதாரண ஜனங்கள் அப்பக்கம் எட்டிப்பார்த்தாலும் அதைப் பற்றிப் பேசினலும் ராஜதண்டனைக் குட்படுவார்க

ளென்றும், அவ்வளவு கட்டுக்காவலுடன் அம்மடம் பந்தோபஸ்து செய்யப்பட்டு வருகிறதென்றும், அப்பிரதேசத்தைச் சார்ந்த ஜனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

ஆனால் நமது சரித்திர தினத்துக்குமுன் சிலநாட்களாய், ஓர் யௌவன மங்கை யபகரிக்கப்பட்டு, அம்மடத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறாள் என்றும் அவ்விடத்திற்கு மந்திரியின் கார்யதர்சியாகிய 'மஹாவீரன்' போய் வருகிறான் என்றும் உலக அபவாதம் அப்பிரதேசம் முழுமையும் பரவியிருக்கிறது.

நமது சரித்திர காலத்தில், அவ்வரண்மனையின், இடிந்த கோபுரங்களும், ஆங்காங்கு வெடித்த மதில்களும், அக்கட்டிடங்களின் பலவிடங்களில் முளைத்து வளர்ந்திருக்கும், அரசு, ஆல் முதலான விருக்ஷக்கன்களும், மனிதர்கள் கைநாடாது ஒடிந்துகிடக்கும் உன்னதவிருக்ஷ சாலைகளும், அடர்ந்த புதர்களும், மூலைகளிலும், மாடங்களிலும் வைக்கப்பட்ட பக்ஷிக்கூடுகளும், அவ்வரண்மனையானது பாழடைந்த நிலைமையைத்தெரிவித்தனவாயினும், முன் ஒரு காலத்தில் அதன் உன்னத நிலைமையும், காலக்கொடுமையால் இவ்வாறு இக்கோலத்துக் குட்படுத்தப்பட்டதென்றும், பார்ப்பவர்கள் மனதில் அஃது ஓர் பரிதாபநிலையைத் தெரிவித்தன.

நாம் முன் அத்தியாயத்தில் கூறியபடி, நமது பிரயாணிகள் வாசற் காவலனிடம் தங்கள் குதிரைகளை ஒப்புவித்துவிட்டு, உள்ளே புகுந்து ஆசார வாசலை நோக்கிச் சென்றார்கள். 'கொ', 'கொ,' 'கொ' என்றும் 'சல' 'சல' வென்றும் இன்னும் பலவிதமான பக்ஷிகளின் சத்தம் இடையிடையே கலந்து கலந்து கேட்டதைத் தவிர வேறு யாதொரு மனித அரவமுமின்றி நிச்சப்தமாயிருந்தது. அப்பொழுது நமது குதிரைவீரன் வலபத்ரனை நோக்கி "ஐயா! நாயுடுகாரு நீர் என்ன அய்யா! பிறர் அரண்மனைக்குள் அனுமதியின்றி இவ்வளவு தைரியமாய்ப் பிரவேசிக்கின்றீரே! யாராவது உம்மைத் தடுத்தால்—"

வலபத்ரன்.—'சீ! நீயொரு ஆண்பிள்ளைதானா? வீரனும் வெறியனும் காலதேச வர்த்தமானங்களைக் கவனிப்பானா? கையெங்கே போச்சு, கத்தி யெங்கே போச்சு?" என்று சொல்லிக்கொண்டு தன் உடைவாளை வலக்கையால் உருவி கிறுகிறுவென்று தன் தலைக்குமேல் சுழற்றி தர்மராஜன் மார்புக்கு நேராகப் பிடித்தான்.

தர்மராஜன் 'இதேதடா! ஆபத்து! நல்ல சிநேகிதம் பிடித்தோம்—குடிகாரப்பயலைப்பார்த்து. ஆ! என்ன செய்வது! கார்யம் ஆகும்வரை கழுதையின் காலைப் பிடிக்க வேண்டியதுதான்' என்று மனதைரியப்படுத்திக்கொண்டு, வேண்டுமானால் ஸமயத்துக்கு உதவும் பொருட்டு, தன் வலக்கையால், தன் இடுப்பில் தொங்குகின்ற வாளின் பிடியைப் பலமாய்ப் பிடித்துக்கொண்டவாறே, தன் மனக்கலக்கத்தை வெளிக்காட்டாதவனாய்ப் "புன்சிரிப்புடன் பேஷ் 'நாயுடுகாரு அதுதான்—புருஷலக்ஷணம்—தைரியம் புருஷலக்ஷணம்—உம்முடைய மனோ தைரியத்தை யறியும்பொருட்டு—"

வலபத்ரன்.—தர்மு! நானென்ன கும்பினியான் பட்டாளத்திலே, இந்தக் கையாலே (பாடுகிறான்.)

அடே! கும்பினியான் சண்டையிலே!
கும்பினியான் சண்டையிலே,
கொலைகள் மெத்தச் செய்தேனடா!
கும்பினியான் கொடுத்தகள்ளு குடம்குடமாய்
குடித்தேனடா!
நன்னனே! நன்னனே!

என்று குதித்துவிட்டு மறுபடி நடந்து நமது வீரர்கள் ஆசாரவாசலுக்குமுன்னுள்ள சோலை வந்து சேர்ந்தார்கள்.

தர்மராஜன்.—(மறுபடி)வலபத்ரரே! நீர் இவ்வளவு துணிவாய்ச் சொல்லுகிறீரே!—உம்முடைய தைரியத்துக்கு யாதொரு குறைவும் நான் கல்பிக்கவில்லை.—நான் கேட்பது :—அங்கே யாராவது உமக்குப் பழக்கமா? என்ன காரணமாய்ப் போகிறீர். உமக்கு வேதாந்தம் முதலானவைகளில் பைத்தியமுண்டென்று தோன்றவில்லை—"

வலபத்ரன்.—'வேதாந்தமா! அதென்னது, அதைப்பற்றிச் சொல்லாதே. ஆனால் உண்மையைச் சொல்லுகிறேன்—நான் பலவிடங்களில் விசாரித்தமட்டில் அப்பண்டார சந்நதி யெனக்குமுன் பழக்கமென்று தோன்றுகிறது.—சரி! அதிருக்கட்டும்—உனக்கென்ன ஜோலி?—"

தர்மராஜன்.—நான்தான் முன்னமே சொன்னேனே வேடிக்கையாய்—

வலபத்ரன்.—ஆ! வேடிக்கை—என்னிடமே காது குத்துகிறாயே. நீங்களெல்லாம் பெரிய மனுஷ்யாள். என்ன பொய் சொன்னாலும் அது லௌகிக ஸம்பிரதாயம் (Policy) நாங்கள் சொன்னால் அது பொய்—ஆ—அப்படித்தானே. நாங்கள் மாத்திரம்,கபடமன்னியில்—"

தர்மராஜன்.—வலபத்ர! அப்படி வருத்தப்படலாகாது. உண்மையாய்ச் சொல்லுகிறேன். சும்மா வேடிக்கையாய்த்தான். தாங்கள் சொல்லப் பிரியமுண்டானால் சொல்லுங்கள். இல்லாவிட்டால்—"

வலபத்ரன்.—'தாராளமாய்க் கேட்டுக்கொள். தன்னயம் (Selfishness) ஸமயோசிதமாய் நடத்தல் (Adaptability),கபடம் (Humbug) என்னும் மூவ்வகைப்பட்ட திறமைகள் வாய்ந்தவனே இவ்வுலகில் கஷ்டப்படாமல் காலங்கழிக்கவல்லவன்—ஆ!முகத்தை வலிக்கின்றாயே—இதுதான் கபடமென்பது—எப்படியானாலும் சரி! இது என்னுடைய சித்தாந்தம்.

தர்மராஜன்.—ஒவ்வொருவனும் ஸ்வயலாபத்தைத் தான்—

வலபத்ரன்.—'தடையென்ன, ஸ்வயநயம் பாராட்டாதவன் உலோகத்தில் இல்லவேயில்லை. ஆனால் அதை ஸாதித்துக்கொள்ளுவதால் பலபேர் பலவிதமான ஸாதனங்களை உபயோகிக்கின்றார்கள். இதில்

ஏதோ தான் ஸ்வயநயம் கருதாமல், பரோபகாரந்தான் முக்கியம் என்றுசொல்லுபவன் ஓர் கபடஸ்தன். அவன் தான் பிறர்குடியைக் கெடுத்தாவது தன் கார்யத்தை ஸாதித்துக்கொள்ளுகிறவன்.

தர்மராஜன்.—(தன் தலையைக் கைவிரல்களால் அழுத்திக்கொண்டு) ‘ஏதோ நீர் சொல்லுவது எனக்கு ஆச்சரியமா யிருக்கிறது. இதைப்பற்றி யென்ன பேச்சு. நீர் சொல்லுகிறபடியே வைத்துக் கொள்ளு வோம்—அதிருக்கட்டும்—நீர் போகிற விஷயம்—”

வலபத்ரன்.—ஆ! அப்படி வா! என் செலவுக்கோ ஏராளமான பணம் வேணும் (தன் பணப்பையைக் குலுக்கி உயர எறிந்து மறுபடி கையில் பிடித்துக் கொண்டு) பணம் இல்லாதவன் பிணத்துக்குச் சமா னம்—நான் உத்தேசித்தபடி இந்தப் பண்டாரசந்நிதி, என் தோழனுய் இருந்துவிடும் விஷயத்தில்—ஒரு பெரிய கல்பக விருக்ஷத்தைக் கண்டு பிடித்த மாதிரி தான்—தவிரவும்—ஒரு குட்டியொன்று இருக்கிற தாகவும் கேள்வி—இந்தப் பண்டாரத்துக்கு—ஆ! பெண் என்ருல் வாயைப் பிளக்கிருயா? வா! வா! நல்ல ஆஸாமி நீ—

நமது வீரர்கள் இவ்வாறு ஸம்பாஷித்துக்கொண்டே முன்வாசலில் வந்து சேர்ந்தார்கள்.

வலபத்ரன்.—வாயிற் காப்போனைப் பார்த்து, ‘ஏனப்பா! சாமியாரவர்கள் என்ன செய்துகொண்டி ருக்காங்க? இப்போ அவுங்க தரிசனங்கிடைக்குமா?—

காவல்காரன்—சாமியாரவுக நிட்டையிலே இருக் காங்க,—இப்போ ஒருவனும் போகக்கூடாது—உத்தர வாயிருக்குது.—

வலபத்ரன்.—‘சீ! மூடா!’ (ஓர் வெள்ளி நாணயத் தைக் காவல்காரன் முன் எறிய அது ‘கல்’ என சத் தித்து, உருண்டோடி யவன் பாதங்களில் வீழ்ந்தது. அதைக் காவல்காரன் எடுத்துக் கண்களில் ஒத்திக் கொள்ளவே மறுபடியும் வலபத்ரன்:—அடே முட் டாள்! இப்பொழுது சொல்: சாமியாரை அவசியம் இப்பொழுதே பார்த்தாகவேணும், ஓர் அவஸர ஸமா சாரம்; உன் வெகுமதியும் அதிகமாகும்.

காவல்காரன்.—‘இதோ வந்துட்டேன். எசமாங்க ளே. நாய்க்குட்டி மன்னிச்சுக்கிடணும்’ என்று உள்ளே சென்ருன்.

வலபத்ரன்.—தர்மராஜனைப்பார்த்து ‘பார்த்தாயா காசுசெய்கிற வேலையை?’ என்று சொல்லி கண்களைச் சிமிட்டினன்.

உத்தம குணவானுன, தர்மராஜன் வலபத்ரன் செய் கைகளைப் பார்த்து இஃது ஏதோ அற்புதமான கனவு போல் தோன்றுகின்றதென்று உணர்ந்து, தன் துக்கங் களுக்கு மத்தியில் சற்றுப் புன்சிரிப்புமடைந்தான்.

இதற்குள் காவல்காரன் ஓடிவந்து, நமது வீரர்களை ஓர் அறைக்குள் அழைத்துச் சென்ருன்.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், பி.ஏ., பி.எல்.

## மாணவர் பக்கங்கள்

## STUDENTS' PAGES

## வியாஸ விதானம்

### Essay writing

### IV. ஆராய்ச்சி வியாஸங்கள்

### REFLECTIVE ESSAYS

### 1. பழமொழிகள்—பழகப்பழகப் பாலும் புளிக்கும்.

Proverbs:—Familiarity breeds contempt

குறிப்பு.—உண்டானவிதம்—அதன் பொருளும் உதாரணங்களும்—புறனடைகள்; எல்லை—மதவிஷயப் பொருத்தம்—விளக்கும் கதைகள்—முடிவு.

**பா**ல் மிக ருசியான வஸ்து; உடலுக்கு ஸௌக் யத்தை உண்டாக்கும் குணம் அதற்கு உண்டு. இதை மிதமாகச் சாப்பிடவேண்டிய காலங்களில் உட்கொள்ள வேண்டிய முறைப்படி குடித்து வந்தால், அதைக் காணும்பொழுதெல்லாம் நமக்கு ஒருவித திருப்தியும், அதை உட்கொள்ளவேண்டிய ஆவலும் உண்டாகும். அவ்வாறு இன்றி, செல்வ மிகுதியாலோ அல்லது வ்யாதி மிகுதியாலோ பாலை அடிக்கடி நாம்உட்கொள்ள வேண்டி வந்துவிட்டால் முன்னிருந்த விருப்பம் போய் வெறுப்பு உண்டாகிவிடும். இதை இப்பழ மொழியில் புளிக்கும் என்ற மொழியால் விளக்கப்பட் டிருக்கிறது. ருசிகளுள் தித்திப்புமிகச்சிறந்ததென்ப தும் புளிப்பு தாழ்ந்த ருசியில் ஒன்றென்பதும் எல்லோ ரும் அறிந்தவிஷயம். இதற்கேற்பவேதான் இங்கு ருசி யில் வெறுப்புண்டாகும் என்பதைக் காட்டப் புளிக்கும் என்ற பதம் இட்டிருக்கிறது. ஆகவே பால் எவ்வளவு நல்ல வஸ்துவாயினும் அதை அளவுக்கு மிஞ்சி அடிக் கடி குடித்துவந்தால் அதுவும் ருசியில் குறைந்துவிட் டாற்போலத் தோற்றும் என்ற அனுபவத்திலிருந்து இப்பழமொழி உண்டாயிருக்கிறது.

முற்கூறிய வெறுப்பு பால் விஷயத்தில் மாத்திரம் காணப்படுவதல்ல. எந்த ஸுகமான விஷயத்திலும் இந்த அனுபவம் எல்லாருக்கும் உண்டு. பஞ்சணை, சுகந்த வஸ்துக்கள், அழகிய தோற்றம் முதலிய உலக விஷய இன்பங்கள் எவையாயிருந்தபோதிலும் அவைக ளுடன் பழகப் பழக முன்போல அவைகள் ஸுகத்தை யும் ஆச்சர்யத்தையும் விளைக்கா. ஸமுத்ரத்தைக் காணு தவன் கண்டால் அவனுக்கு உண்டாகும் ஆனந்

தம், அதிலேயே கிடந்துழலும் செம்படவனுக்கு இருக்குமா? இக்காலத்தில் பட்டணங்களில் மாடு குதிரையின்றித் தானே ஓடும் வண்டிகளைக் கண்டவுடன் கிராமத்தானுக்கு உண்டாகும் ஆச்சர்யமும்மனக் குவிவும் ஒரு பட்டணத்தானுக்கு உண்டாகுமா? புதியவர்களைக் கண்டால் உண்டாகும் பயம் முதலியன குழந்தைக்குத் தாயைக் கண்டால் உண்டாகுமா? வாந்திபேதி முதலிய கொள்ளைநோய்கள் தோன்றிய காலங்களில் எவ்வளவு பயத்தை உண்டாக்கினவோ அவ்வளவு பயமும் இப்பொழுது இருந்தவிடம் தெரியாமல் பறந்தோடிப்போகவில்லையா? ஆதலால் இப்பழமொழி பால் விஷயமாக ஏற்பட்டபோதிலும் இது எல்லா விஷயங்களுக்குப்பொதுவான பொருளை உடையது. எந்த உலக விஷயத்தோடு ஒருவன் அதிகமாகப் பழகுகிறானோ அந்த விஷய சம்பந்தமான ஆச்சர்யம், ஆனந்தம், பயம் முதலிய மனோநிலைகள் குறைந்துகொண்டே வரும் என்பதே இதன் பொருள்.

பழகிவிட்டால் ஒருவிஷயத்தின் மேன்மை குறைந்ததாகக் காணப்படுமே என்று நாம் நல்ல விஷயங்களிலிருந்து முற்றிலும் ஒதுங்கிவிடவும் கூடாது, அதிகப் பழக்கம் வெறுப்பை உண்டாக்கும் என்றெண்ணி கெட்ட விஷயங்களில் அதிகமாகப் பழகிவிடவும் கூடாது. ஆகவே இந்தப் பழமொழியின் எல்லையை நன்கு உணரவேண்டும். கெட்ட விஷயங்களில் எவ்வளவு பழகியும் அதில் மனிதர்களுக்கு எளிதில் வெறுப்புத் தட்டாது, நல்ல விஷயங்களில் எவ்வளவு பழகியபோதிலும் அதிகப் பழக்கத்தால் உண்டாகும் வெறுப்புக்கு முன்னர் அவசியம் இருக்கவேண்டிய அதிக ஆவலே உண்டாவதில்லை. ஆகவே பழகப் பழக நல்ல விஷயங்களில் ஆவல் திடமாக நிலைப்பதரிது, கெட்ட விஷயங்களோ புளிக்கா, அப்படி இருந்தும் கொஞ்சகாலம் நிஸ்ஸாரமாகத் தோன்றின போதிலும் மறுபடி அவைகள் விஷயமான விருப்புத் திரும்பிவந்துவிடும். ஆகவே உலக விஷயங்களுடன் அதிகமாகப் பழகினால் அவைகளிடம் உள்ள மேன்மை விளங்காது, அவைகளிடம் அதிக ஆவல் முன்னர் இருந்தால் அது குறைந்தும் காணப்படுமே ஒழிய திடமான வெறுப்பு ஏற்படாது என்பதாயிற்று.

இனி மதவிஷயமாக இந்தப் பழமொழியைப் பொருத்துங்கால் இதன் ஆழ்ந்தபொருள் நன்கு விளங்கும். பரம்பொருள் நம்மை உண்டாக்கி நாம் நேர் வழியில் அனுபவித்துக் கடைத்தேற உலகையும் உண்டாக்கி யிருக்கிறார். இதற்கு விரோதமாக நம்மைத் தடுத்து நமது சக்தியை நன்றாக வெளிப்படுத்தப் பலமான தடைகளையும் ஏற்படுத்தி யிருக்கிறார். அவைகளுள் இந்த அதிகப் பழக்கத்தின் கேடு ஒன்று. இதனால் உலக விஷயங்களோடு ஏற்படும் அதிகப் பழக்கத்தால் உண்டாகும் வெறுப்பை நீடித்திருக்கும்படி செய்து ஒருவித வைராக்யம்கொண்டு, இதே அதிகப் பழக்கத்தால் ஸ்ருஷ்டி வைசித்ரியம் சிறப்பு முதலியவைகளை உள்ளபடி காணவொட்டாது தடுக்கும் சக்தியைத் தகைந்து, அதற்கு ஆளாகாது பகவத் விஷயத்தில் ஈடுபடுவதில் அப்பியாஸம் செய்து கடைத்தேறவேண்டும் என்பதே கடவுள் கருத்து என்று வெளியாகிறது. இப்படி இருக்க நாம் பொதுவாக உலக விஷயங்களில் உண்டாகும் வெறுப்பைத் தகைந்து அதற்கு ஆளாகாதும், ஸ்ருஷ்டிவிஷயத்தில் ஒருவித ஆச்சர்யக் குறைவை விருத்திசெய்தும் கொண்டு உலகில் கிடந்துழலுகிறோம். இது நீங்கிப் பிழைக்கவேண்டுமாகில் முற்கூறியபடி அதிகப் பழக்கத்தால் உண்டாகும் வெறுப்பைத் தடுக்கவேண்டிய விடத்தில் தடுத்து, திடப்படுத்தவேண்டிய விடத்தில் நிலைநிறுத்திப் பழகவேண்டும்.

இவ்விஷயமான கதைகள் அநேகம் உண்டு. கிருஷ்ணபரமாத்மா தகப்பனுருக்கு வஸுதேவர் என்று பெயர். அவர் ஒருகால் மேன்மை பெறவேண்டி குருக்ஷேத்திர பூமியில் ஒரு யாகம் செய்ய உத்தேசித்தார். அப்பொழுது நாரதர் அங்கு வந்து சேர அவரை அந்த யாகத்தை நடத்திவைக்கும்படி கேட்டுக்கொண்டார். ‘பகவானைப் பிள்ளையாகப் பெற்றும் மேன்மைபெற இவர் யாகம் செய்ய எண்ணுகிறாரே! யக்ஞேச்வரன் கிருஷ்ணனாகவிருக்க, இப்படி இவர் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறாரே! இது அதிகப் பழக்கத்தின் கொடுமை. இப்பொழுது உமது பிள்ளைதான் பரம்பொருள் என்று கூறிவிட்டால் அபிமானம் நிறைந்த அவர் மனதில் பதியாது. இந்த யாக முடிவில் பார்த்துக்கொள்ளுவோம்’ என்று யாகம் செய்துவைத்தார். அதில் வந்த மந்திரங்கள், செய்த தானங்கள், பிரஸங்கிக்கப்பட்ட பரமாத்ம வைபவங்கள் எல்லாவற்றாலும் வஸுதேவர் மனத்திலிருந்த அதிகப் பழக்கத்தின் கொடுமை கழல நாரதர் கிருஷ்ணன் பெருமையை எடுத்து உபதேசித்தார். அன்றுமுதல் கிருஷ்ண பரமாத்மாவை அதிகப் பழக்கத்தால் பிள்ளை என்று கருதாது கடைசிவரை பரம்பொருளாகக் கருதி கடைத்தேறினார் வஸு

தேவர். மஹாபாரதத்தில் விராடநகரத்தில் கௌரவ ஸேனையைக் கண்டு பயந்தோடிய உத்தரன் பாரத யுத்தத்தில் பழக்க விசேஷத்தால் வெகு தைர்ய மாக யுத்தம் செய்தான். தவளைகள் அரசன் வேண்டுமென்று கடவுளைக் கேட்டபொழுது அவர் ஒரு கட்டையை விட்டெறிந்தார் என்றும், அது தண்ணீரில் விழுந்த வேகத்தால் பயந்திருந்த தவளைகள் காலக்கிரமத்தில் அது அசையாததுகண்டு பயம் நீங்கி அதன்பேரில் ஏறிக்குதிக்கத் தொடங்கின என்று ஒரு கட்டுக்கதையும் உண்டு.

ஆகவே அதிகப் பழக்கத்தால் ஸத்விஷயங்களுக்கு ஏற்படக்கூடிய கெடுதியைத் தடுத்து, அதனால் அஸத் விஷயங்களில் ஏற்படும் வெறுப்பை நிலைத்த வைராக்கிய மாக்கி வெகு ஜாக்கிரதையாக இவ்வுலகில் நாம் கடைத்தேறவேண்டும்.

## இம்மாதிரியே விவரிக்கக்கூடிய வியாஸங்கள்

1. கெடுவான் கேடு நினைப்பான்.*
2. நன்மை விதைத்தால் நன்மை விளையும்.
3. இக்கரைக்கக்கரை பச்சை.
4. கரும்பு தின்னக் கூலியும் வேண்டுமோ ?
5. ஆருமில்லா வூரில் அசுவமேத யாகம் பண்ணுகிறாயா ?
6. பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது.
7. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
8. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
9. அடாது செய்பவர் படாது படுவர்.
10. உனக்கென்ன கொம்பு முளைத்திருக்கிறதோ ?
11. முயற்சி யுடையோர் இகழ்ச்சி அடையார்.
12. கொன்ற பாபம் தின்றால் போகும்.
13. ஆத்திச்சூடி முதலிய நீதிநூல் வாக்கியங்கள்.

* இவைகள் எல்லாம்விவேகபோதினியில் முன்னரே விஸ்தரிக்கப்பட்டவை.

### போதக்குறிப்புகள்

1. உண்டான விதம்.
2. அதன்பொருள் உதாரணங்கள்.
3. புறனடைகள் : எல்லை.
4. மத விஷயப்பொருத்தம்.
5. விளக்கும் கதைகள்
6. முடிவு.

## மொழிபெயர்ப்பு விளக்கம்
## TRANSLATION MODELS

### (11). HOW FAR IS THE SKY FROM US ?

What we call the sky is nothing but the appearance of blue that we get on a bright day, owing to the fact that particles in the air reflect the blue part of sun light to our eyes. When we see the blue sky, then what we really see is the air. The height of the particles that reflect this blue light to our eyes is not very great. It is perhaps fifty or sixty miles at the most, and compared with the size of the Universe, that is nothing at all. But by the sky we mean, not the blue sky of day time, but the great space around us, that we may see on any bright night. We see vastly farther then than in the day time because we can see right through the air out to the stars, whilst in the day time the sun is lighting up all the air around us, so that though we seem to see a long way, we cannot really see past the lit-up air—except when there is something very bright beyond it, such as the sun itself and sometimes the moon.

### நம்மிடமிருந்து வானம் எவ்வளவு தூரம் ?

ஸூர்யன் ஒளியின் நீலபாகத்தை நம் கண்களுள் புகும்படி வாயுவின் அணுக்கள் பிரதிபலனம் செய்கின்றன என்ற உண்மைக்கு ஏற்ப, பிரகாசமான பகலில் நீலவர்ணமாகமேலே உண்டாகும் நீலத்தோற்றத்தைத் தவிர நாம் வானம் என்று கூறுவது வேறொன்றும் அன்று. நீலவானத்தைப் பார்க்குங்கால் நாம் உண்மையில் வாயுவைத்தான் காண்கிறோம். இவ்வாறு நீல ஒளியை நமது கண்களில் விழும்படி பிரதிபலனம் செய்யும் அணுக்களிருக்கும் உயரம் வெகு அதிகமல்ல. அதிகமாக விருந்தால் ஒருவேளை இது 50 அல்லது 60 மைல் தூரம் இருக்கலாம்; இதைப் பிரபஞ்ச அளவோடு ஒப்பிடுங்கால் இது ஒன்றுமே இல்லாமல் போய்விடும். ஆனால் வானம் என்று கூறும்பொழுது பகலில்பார்க்கும் நீல வானமல்லாது, சிற்சில வேளைகளில் இரவு நிர்மலமாக இருக்குங்கால் நம்மைச் சுற்றிக் காணப்படும் பெரிய வெளியையும் நாம் கருதுவது உண்டு. இக்காலங்களில் வாயுவின் வழியாக ஊடுருவி அப்பாலிருக்கும் நக்ஷத்ரங்களைக் காணமுடியும். ஆதலால் பகலைவிட இரவில் நாம் அதிக விரிவாகக் காணலாம். பகற்காலத்தில் சுற்றியுள்ள வாயுவை ஸூர்யன் ஒளிவிடும்படி செய்வதால் அதிகதூரம் நாம் பார்க்கமுடியும் என்று தோன்றும். ஆனால் பிரகாசமான வாயுவுக்கு அப்பால், ஸூர்யனையும் சிற்சில வேளைகளில் காணப்படும் சந்திரனையும் போன்ற மிகப்பிரகாசமான வஸ்துக்கள் இருந்தால் அல்லது நம்மால் உண்மையில் அந்த வாயுவுக்கு அப்பால் பார்க்கவே முடியாது.

### (12). THE USES OF GRIEF.

Sweet are the uses of grief: it softens the heart, and ripens the understanding; it has a smoothening effect like the dews of December, and often has it been the instrument of salvation. In all Vedantic treatises, the student is made to weep before his guru, before he is saved. Sorrow has made saints of men, and in the intensity of grief, the sensory organs of mortals have been made alive to sights and sounds far above those of the earth. In the *Peria Purana*, the child *Tirugnana Sambhanda* is represented as having been rewarded for his weeping with Parvati's milk; and in life the weeping child it is, that first receives the caresses of the mother. The first of the four truths that Buddha discovered under the Bodhi Tree was that the world is filled with misery; and the first right thing in Buddhism is the recognition of the sorrows of life and grief for them. Sorrow is the sweet unction to the heart and as Jesus Christ said 'Blessed are they that mourn for they shall be comforted.'

### துக்கத்தின் பயன்

**து**க்கத்திற்கு இனிமையான பயன்கள் உண்டு; அது மனதை உருகச் செய்யும்; அறிவை முதிரச் செய்யும்; மார்கழிமாதத்திய பனியைப்போல அதற்குக் கனிவிக்கும் திறன் ஒன்று உண்டு; அடிக்கடி இதுவே மோக்ஷஸாதனமாகவும் ஏற்படும். வேதாந்த நூல்களில் கரை ஏற்றப்படும்முன் சிஷ்யன் குரு முன்னிலையில் கரைந்தழுவதாகக் காட்டியிருக்கின்றது. அடிக்கடி துக்கம்தான் மனிதர்களை மஹான்களாக்குவது. துக்கம் கரைபுரண்டோடுங்கால் உலகவிஷயங்களுக்கு அப்பாற்பட்ட தோற்றங்களும் ஒலிகளும் மானிடர்கள் ஞானேந்திரியங்களுக்குப் புலப்படுகின்றன. பெரிய புராணத்தில், மனமுருகி அழுததற்காகத் திருஞான சம்பந்தர் என்ற குழந்தைக்கு பார்வதியின்(ஞான)பால் கிடைத்தது என்று கூறியிருக்கிறது. உலகவாழ்க்கையிலும் அழுங்குழந்தைகளே முதல்முதல் தாயின் சீராட்டிற்கு ஆளாகின்றன. போதி மரத்தடியில் புத்தர் கண்டறிந்த நான்கு உண்மைகளுள் முதலாவது 'உலகம் துக்கமயம்' என்பதே. புத்தமதப்படி வாழ்க்கையின் துயரத்தை நன்கு உணர்ந்து அதற்காகத் துக்கிப்பதே மேலான கொள்கைகளுள் முதன்மையானது. துக்கம் மனதை ஆற்றும் ஒருவிதத் தைலம். இயேசுகிறிஸ்து நாதர் கூறினபடி 'துக்கப்படுவோர் தேற்றப்படுவார், ஆதலால் அவர்களே பாக்யவான்கள்.'

## சிறுவர்களுக்கான பக்கங்கள்
## CHILDREN'S PAGES

### உண்மை உயர்வு அல்லது வாஸுதேவ சாஸ்திரி
### TRUE GREATNESS OR VASUDEVA SASTRI

### அத்தியாயம் 6

### ஸுப்பியும் காட்டுப்பூனையும்

பேராசை யாற்பார் பிணிக்கப் படுகிறது
ஏரார் தொழிலாலும் எண்ணாலும்—சோர்வாகி.
ஓங்காயு ளின்குறைவை ஓர்வதில்லை ஆதலினால்
தூங்காதீர் தூங்காதீர் சோர்ந்து

**கி**ருஷ்ணன் வீட்டில் இம்மாதிரியான துக்கக்கடல் கரைபுரண்டு எல்லோரையும் மூழ்த்திக் கொண்டிருக்கையில், சில வீடுகளுக்கு அப்பால் ஒரு வீட்டுவாயில் திண்ணையில் கரிய கெட்டமுகத்தை உடையோன் ஒருவன் பெரிய மனோராஜ்யத்தில் ஆழ்ந்து உட்கார்ந்துகொண்டிருந்தான். அவன் முகம் மாறிய விதங்களையும், அதிற் காணப்பட்ட கோணல் முதலியவைகளையும் உற்று நோக்குங்கால் அது நல்ல விஷயத்தைப் பற்றி யல்ல என்பது விளங்கும். அவன் எதிரே ஒரு கோவணம் கட்டாத புழுதி படிந்த சிறுவனொருவன் விளையாடிக்கொண்டிருந்தான். நடுநடுவே விளையாட்டு ஆனந்தத்தால் அவன் கூவிக்கொண்டுமிருந்தான். இப்படி ஏற்பட்ட சப்தம் ஒன்றைக்கேட்டு முற்கூறியபடி இருந்தவன் திடீரென்று மனோராஜ்யம் விட்டெழுந்து அவன் பிள்ளையாகிய அந்தப் பையனண்டைபோய், அவனை வாரி எடுத்து இறுகத்தழுவி ஆனந்த பரவசனாகி முத்தமிடத் தொடங்கிவிட்டான்.

'காட்டுப்பூனை' என்று பட்டப்பெயர் பெற்ற அவன் தன் பிள்ளையை இவ்வாறு சீராட்டினதேயில்லை. ஸாதாரணமாக இவன் கடுகடுப்பாக விருப்பது வழக்கம். ஆதலால், அவனைவிட்டுத் தப்புவித்தால் போதும் என்றாய்விட்டது அச்சிறுவனுக்கு. நாயனசாஸ்திரி—அதுதான் காட்டுப்பூனையின் பெயர்—அவனை விடாமல் நன்றாகப் பிடித்துக்கொண்டு "அடே! குழந்தாய்! என்னருமைக் குழந்தாய்! என்ராஜா! என் ஆனந்தமே!" என்று பலவாறாகக் கொஞ்சி விளையாடினான். 'என்னைவிடு! நான் போகட்டும்! இல்லாவிட்டால் அம்மாவோடே செல்வேன்!' என்று கத்திக்கொண்டே காலால் விண் விண் என்று உதைத்துக்கொண்டே யிருந்தான் அச்சிறுவன். தகப்பன் விட்ட

பாடில்லை. அடிக்கடி அவனைச் சேரக்கட்டிக்கொண்டு அத்புதமான செல்ல மொழிகளால் சீராட்டினான். என்னசெய்தும் பையன் முன்போல ஓயாது உதைத்து துவைத்தானே ஒழிய வேறொன்றுமில்லை. தகப்பனார் இதனால் கோபங்கொள்ளாது ஸந்தோஷமாகக் குலுங்க நகைத்தார். திடீரென்று தகப்பனார் சீராட்டுவதற்குக் காரணம் இன்னதென்று குழந்தைக்கு விளங்காததால் வரவர வெறுப்பே அதிகரித்தது. ஒருவன் சிரித்துக்கொண்டு ஆனந்தத்தாண்டவ மாடுகையில், மற்றொருவன் கையைக்காலை உதைத்துக்கொண்டு வீரிட்டழுதான்.

இந்த விஷயம் நடந்தேறி வருகையில் ஒருஸ்திரீ அங்கு வந்து காலலம்ப ஜலம் கேட்டாள். அவள்தான் நாயன சாஸ்திரி பெண்சாதி; கிருஷ்ணன் ஸூதக வீட்டிலிருந்து வந்தபடியால் அவள் தண்ணீர் கேட்டாள். அவளைக்கண்டதும் பையன் அப்பன் முகத்தில் ஒரு உதை உதைத்து அவன் பல்லை அசையும்படிசெய்து வெளியேறி அம்மாவை நோக்கி ' காட்டுப்பூனை ! காட்டுப் பூனை !!' என்று கதறிக்கொண்டோடினான். முதல் முதல் நாயன சாஸ்திரியை அவர் அருமைக் காதலி இந்தச் செல்வப் பெயரிட்டு அழைத்தாள். அடுக்குள்ளிருந்து இப்பெயர் அம்பலமேறியது." அந்தவூர் சிறுவர்களுக்கு இப்பெயரிட்டு அழைத்தால்தான் இவரைத்தெரியும். இப்பெயர் பெண்சாதி வாக்கிலிருந்து வரும்பொழுது எவ்வளவு அருமையான செல்வப்பெயரென்று இவர் மதித்து மகிழ்ந்திருந்த போதிலும், ஊர்க்குழந்தைகள் இப்பெயரிட்டுத் தம்மை அழைக்க இவரால் ஸஹிக்கமுடியவில்லை. அடிக்கடி இவருக்கு இவ்விஷயத்தில் கெட்ட கோபம் வந்துவிடும். திருட்டுப் பயல்க்ள் இந்த உளவை அறிந்து விட்டார்கள். இவரைக் கண்டுவிட்டால் கோபம் மூட்டி வேடிக்கை பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவர்களுக்கு உண்டாகிவிடும். அவர் பின்னாலே இவர்கள் ' காட்டுப்பூனை ! காட்டுப் பூனை !' என்று ஸ்வஸ்திவாசனம் சொல்லிக்கொண்டு புறப்படுவார்கள். இதைக் கேட்டதும் கழிசறைப் பயல்களா!—என்ன நீங்கள் என்பெண்சாதிகளா? என்ன?' என்று முறு முறுத்துக்கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்து சென்று வாயில் வாராதவைகளை எல்லாம் திட்டிக் கொட்டிவிடுவார்.

இவர் வெளியில் வந்துவிட்டால் போதும், ஊரில் வேட்டைபட்ட பாடு படும். 'காட்டுப்பூனை' என்று இவரை ஸ்வாதீனமாக அழைக்க இவர்பெண்சாதி ஒருத்திக்குத்தான் பாத்யதை.

முற்கூறிய காட்டுப்பூனையினிடமிருந்து காப்பாற்ற வேண்டும் என்று கதறிக்கொண்டு அந்தப் பையன் ஓடோடியும் வந்து அவளிடம் சேர்ந்ததும், மிகுந்த கம்பீரமாகக் கணவனை வீட்டுள் போக ஸைகைசெய்தாள். உள்ளே போனதும் விதிப்படி விசாரணை செய்யத் தொடங்கிவிட்டாள். 'ஊர் முழுவதும் அழுவதாகப் பாசாங்கு செய்யுங்கால், காட்டுப்பூனே ! நீ மாத்திரம் தெருவிலிருந்து சிரித்துக்கொண்டிருந்தையே! இதுக்கென்ன அர்த்தம்? அதுதான் போகட்டும்; என் கண்மணியை ஏன் இவ்வாறு வருத்தினாய், என்றாள். ஒட்டைப்பல்லைக் காட்டிக்கொண்டு 'ஓஹோ ஹோ' என்று காட்டுப்பூனை சிரித்தானே ஒழிய வேறொன்றுமில்லை. 'என்ன உனக்கு வெறி மண்டைக்கேறி விட்டதா?' என்று செல்லமாகக் கண்டித்து, வைது, பின்வரும் வாக்குமூலத்தை அவள் மெதுவாக அவனிடமிருந்து வாங்கினாள். அப்பொழுது அவன் நான் நன்றாகக் கணக்கிட்டுப்பாத்துட்டேன், நாம் திடீருன்னு பணக்காரராய் விட்டோமே !' என்று தாண்டவமாடினான்.

'கணக்கிட்டதினாலேயே எங்களை நீ பணக்காரர்களாக்கி விடுவையானால்,சாப்பாடுகூட இல்லாமல் கணக்கிட்டுக்கொண்டு கிடந்து கழியேன்! என் பிள்ளையை ஏன் படுத்தினாய்' என்று மிகுந்த ஆவலுடன் கேட்டாள். 'எல்லாம் அவனாலேதானே! இந்தச் செல்வம் ஏற்பட்டதெல்லாம் என் செல்லத்தாலே தானே! ஒனக்குத் தெரியாதா? என்று அவன் மறுமொழி கூற, மிகுந்த பரபரப்புடன் ஸுப்பி அவன் பெயர்' 'என்ன! என் அருமைக்காட்டுப்பூனே! 'அவன் புதயலெடுத்துக் கொடுத்து விட்டானா என்ன' என்று கேட்டாள். 'இல்லை! அப்படி இல்லை! அந்தப்பயல் கிருஷ்ணன் போய்விட்டானோ இல்லையோ! அவன் ஸொத்துக்கு வார்ஸ் யாரு! நம்ம பயல் தானே! தெரிஞ்சுதா நோக்கு?' என்று வீடிடியக் கத்தினான்.

இந்த ரஸமான ஸம்பாஷணைக் கிடையில் சிவபூஜை வேளையில் கரடியை விட்டாற்போல மூன்றாவதொருவன் திடீரென்று தோன்ற, இது மேலோடாமல் தடைபட்டது.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

## டெல்ஹி தர்பார்க் கும்மி

### காப்பு

சீர்பெறு விக்டோரி யாமகா ராணியின்
செல்வப் பவுத்திரன் டெல்ஹி தன்னில்
பார்புகழ் தர்பார் நடத்து மகிமையைப்
பாடக் கணேசன் பகர் துணை யாமே.

### நூல்

அன்னமே யன்ன நடையுடை யீர்! அங்கைக்
காகும் கொடிநிகர் மெல்லிடை யீர்!
கன்ன லனைய மொழியுடை யீர்! இரு
காதள வோடும் விழியுடை யீர்! (1)

மாமதி போன்ற முகமுடை யீர்! மறு
மாசக ளில்லா அகமுடை யீர்!
தாமதம் சற்றும் இலாது தயாபரன்
தாளினை போற்றிநாம் கூடுவ மே! (2)

கூடுவோம்! கோமகன் ஜார்ஜு மகிபதி
கொற்ற முடிபுனை உற்சவத் தைப்
பாடுவோம்! கும்மி பரிந்தவர் செங்கோலிப்
பாரினில் ஓங்கிட வாழ்த்துவ மே. (3)

இங்கிலாந் தென்ப தொருநாடு, தோழீ!
எங்குமே இல்லை அதற்கீடு
பொங்கு கடல்சூழும் நாற்பாடும், கமழ்
பொங்கரிற் கிள்ளை கவி பாடும். (4)

சங்கென வெள்ளிய* சாக்குக்குன்று பல
சங்கரன் தங்கும் சைல மென
பொங்குறும் பூம்பொழி லூடே நதிபல
பூமணம் ஏந்தியே பாய்ந்திடு மே. (5)

கப்பல் துறைகளும் கைத்தொழிற் சாலையும்
கற்கரி தோண்டும் கனிபல வும்
செப்பரும் அச்சுக்கூ டங்களும் பத்திரிகை
சேரிடம் புத்தக சாலைக ளும் (6)

கப்பல் காலாட்படை தங்கும் இடங்களும்
கல்வி பயில்சாலை பற்பல வும்
ஒப்பரும் கண்காட்சிச் சாலையும் வர்த்தகம்
ஓங்கு மளிகையும் உண்டனந் தம். (7)

"லண்டன்" நகரே தலைநகராம் விரி
மண்டலத்தின் நடு நாயக மாம்.
அண்டர் பதியும் அதற்கிணை ஆகுமோ!
கண்டோ எனு மொழிக் கன்னிகையே! (8)

தேவர் நதியிற் சிறந்த நதியாகும்
"தேமஸ்" நதிநகர் பற்றியோ டி
மூவ ருலகினும் இல்லாமுப் போக
முறையே அளித்துப் பொலிவு றமே. (9)

எண்டிசையு முள்ள பற்பல சாதியர்
எண்ணில் நானுவகைப் பாஷையி னர்
கொண்டற் குழலே! குரைகடல் தாண்டியே
கூடுவர் ஆங்கே சுலபயில் வான். (10)

மன்னும் உயிர்க்குயர் ஞானம் அளித்தலால்
மல்கு பொருட்செல்வ மிக்குள தால்
மின்னு கதிர்செலும் தேயமெலாம் ஏக
வெண்குடைக் கீழ்வைத்தே ஆளுவ தால். (11)

தேவர் பதியும் அதுவெனலாம் ஜக
நாதன் பதியும் அதுவென லாம்
பூவமர் தேவும் புனல்முடி யோனும்
லியும் பதிய தெபொனல் ஆமே. (12)

குலத்தில் பெரியர் சிறியர் எனப்படும்
கோஷ்டிகள் சற்றும் அங்கில்லை யடி!
நலமுங் குணமும் படிப்பும் உடையோரே
நற்குலத் தார், அங்கே; நங்கை யரே! (13)

ஆங்கிலர் எண்ணில் அருங்குணம் வாய்ந்தவர்
அண்டம் எங்கும்புகழ் கொண்டவர் காண்
தீங்கிலர் மோசம் கபடு தெரிகிலர்
தெள்ளிய சிலர் தீந்தேன் மொழியே! (14)

சத்தியம் தீரம் சுதந்திரம் என்பன
நித்தம் அவர் தொழும் கர்த்தரடி!
மெய்த்திருவே! வெற்றி எத்திசையும் பெற்றே
உத்தம ராஞர், அத னாலே. (15)

பெண்ணும் புருஷனும் தெய்வப் படைப்பினில்
பேதமில் ஸ்தானம் உடையர் என
கண்ணிய சிலர் கருத்திருத்திப் பெண்கள்
கல்வி பயிலத் துணைபுரி வார். (16)

ஆண்பெண் இருகண்கள் ஆண்டவருக் கென்னில்
அவற்றுள் பெருமை சிறுமை எண்ணில்
பூணெனிர் கச்சணி மங்கையரே! மக்கள்
புன்மையாம் என்பதை ஓரா ரோ! (17)

"பெண்கள் புருஷர்க் கடிமையே" என்பவர்
பெற்று வளர்த்ததம் தாய்மார் கள்
கண்கணீர் சிந்தப் பல் ஏவல்கள் செய்து
கலுழ்ந்து வருந்துதல் காண்பா ரோ? (18

* Chalky Cliff

பெண்களைக் கண்ணியம் செய்பவர் தங்கள்
பிறப்பைப் பெருமைப் படுத்துவ ரே.
கண்கண்ட தேவரெனச் சிறந் தாங்கிலர்
காசினி ஆள்வதிக் காரண த் தால். (19)

அன்னவர் நாட்டின் பெருமை உரைத்திட
ஆகுமோ ஆதிநற் சேஷனுக்கும்!
கன்னல் மொழியே! குபேரன் அளகையும்
கற்பக நாடுஞ்சற் றுவ்வா தே. (20)

அத்துணைச் செல்வம் அமைதரு நாட்டினை
ஆண்டனள் விக்டோரி யாரா ணி.
உத்தமி மன்னுயிர் அத்தனைக்கு அன்னை
உண்மை நெறிக்குக் கருக்கா ணி. (21)

ஆயிரத் தெண்ணூற்றி யைம்பத்தி யெட்டாவ
தாண்டினிற் பாரதப் பொன்னாட் டின்
தாயெனச் சக்கிர வர்த்தினி ஸ்தானமும்
தார்குழலே! அவர் பெற்றனரே. (22)

அந்நாளே முற்பிறப் பிந்தியா செய்த
அருந்தவம் கைவந்த நன்னா ளாம்.
பன்னாளாய் நாமுற்ற துன்பம் பரிதிமுன்
பட்ட பனியாய்ப் பறந்த துவே. (23)

இந்தியர் மீதவர் சந்ததமும் கிருபை
வந்திய நோக்கே செலுத்தி வந்தார்
நந்திரு நாட்டின் நலம்பெருகத் தினம்
நன்மைகள் பற்பல செய்து வந்தார். (24)

அம்மை விக்டோரியா ஆதிபரன் பதம்
ஆனபின் அன்னவர் நற்புதல் வர்
செம்மைநெறி தவறாத "யெட்வார்ட்" மன்னன்
சீருடன் பாதுகாத் தார் நமையே. (25)

"வலிமை யுடையன் வலியன்" எனும் நீதி
வாரிதி சூழ்புவி விட்டோ ட
சலியா துழைத்துச் 'சமாதானம்' எங்கணும்
தங்கச் செய்தார் அவர் தண்மதியே! (26)

அத்தனடி அவர்பற்ற அவர் மகன்
உத்தமன் ஜார்ஜைந்தாம் கோமக னார்
"சத்தியம் தீரம் தருமம்" இவையெலாம்
சார்ந்துருப் பெற்றதோர் தன்மையி னார். (27)

"செய்கடன் தேர்ந்து திருத்தமாய்ச் செய்வதே
தெய்வ குணம்" எனும் கொள்கையி னார்
மொய்குழல் மாதே! முறைப்படி நாவிகம்
முற்று முணர்ந்த திறமையி னார். (28)

கப்பற்றலைமை வகித்தவர்காண் பல
கண்ணியப் பட்டங்கள் பெற்றவர் காண்.
செப்பரிய அரசாங்க முறைமை கள்
செவ்வையின் ஆய்ந்தே அறிந்தவர் காண் (29)

ஈஜிப்து தூர்க்கி இலங்கை இந்துதேசம்
எய்துபுகழ் சீனா ஜப்பா னும்
பூஜித போர்னியோ, ஜாவா, மலேதீபம்
பொன்மலி தென்னாப்பி ரிக்கா வும். (30)

ஆர்புகழ் ஆஸ்திரே லியாவும் புவி
யோர்புகழ் கானடாப் பொன்னா டும்
சீர்பெற யாத்திரை செய்துலக ஞானம்
நேர்பெறப் பெற்ற நெறியா ளர். (31)

நம்மைப் புரக்கும் பெருமைபெற் றோம் புது
நன்மைகள் பெற்றுக் கவலை யற்றோம்.
பொம்மை யெனமுன்னம் வாழ்ந்தது போகப்
புரக்கும் தொழிலிலும் பங்கு பெற்றோம். (32)

பாகொடு தேனும் பழமொடு சீனியும்
பாற்கட லானொடு பூமா தும்
பூக்கொடுதேனே! பொருந்திய தொப்ப நம்
பூபதி வாழ்க்கைத் துணைவி பெற்றார். (33)

"மே" யெனும் செல்வப் பெயர்பெற்ற பெண்மணி
"மேரி" யே நம்மிறை யின் தேவி.
தாயென மன்னுயிரி யாவும் கருத்துறத்
தண்ணருள் காட்டிடும் சீதே வி. (34)

வாசிப்பில் மிக்க விருப்புடையாள் வீணை
மாத்திரை போக்க வெறுப்புடை யாள்.
தேசுறு சித்திரத் தையல்முதல் பல
செய்ய தொழிலில் படிப்புடை யாள். (35)

ஆதர வற்ற பிணியாளர் தங்கும்
அனைத்து வைத்திய சாலை யெலாம்
மாதரசி மேரி பார்த்து நோயாளி
மனங்களிக்கப் பல வந்தல் செய்வார் (36)

நங்கையே! இத்தகை மன்னனும் தேவியும்
நாடும் டிசம்பரில் தேதி ரெண்டில்
பொங்கும் கடல்கடந் திங்கே நம்பாக்கியம்
பொங்கிய தொப்ப வந்தெய்தி னரே. (37)

தேதிபனி ரெண்டாமின்று டெல்ஹிப் பதி
சோதியுருப் பெற்றுத் தான் விளங்க
ஓதிம மென்னடை மேரியொடு மன்னன்
சோதி மணிமுடி தானணி வார். (38)

பண்டு தருமனும் ராமன் அசோகனும்
பாவையே! மாமகு டஞ் சூடி
அண்டர் புகழ்திருப் பாரதம் ஆண்டது
யாவுமே இன்று பழங் கதையே. (39)

இன்றடி! இந்திரப் பிரஸ்தமாம் டெல்ஹியில்
எங்கள் தருமவான் ஜார்ஜு மன்னர்
சென்றடி போற்ற ஜகம்புகழ்ந் தேத்தவே
தெய்வத் திருமுடி தான் புனைவார். (40)

இலங்கையோ டிந்தியா இங்கிலாந் தாதி
இருநிலம் யாவும் ஒருகுடைக் கீழ்
நலங்கொளக் கண்கண்ட ராமனு யின்றடி
நங்கையே! மாமுடி ஜார்ஜணிவார். (41)

இந்து ஜயினம் எழில்பெறு புத்தமோ
டிஸ்லாமும் கிறிஸ்து சமயம் முதல்
எந்தச் சமயமும் எத்தும் அசோகராம்
ஏந்தல் ஜார்ஜின்று முடி தரிப்பார். (42)

எண்ணில் தருமனும் ராமன் அசோகனும்
எம்மிறை ஜார்ஜோ டிணையா கார்.
கண்ணில் காணும் ஜகந்நாத்னுக்குப் பழங்
காதைசொல் வேந்த ரீடாவா ரோ! (43)

கொற்றமுடி ஜார்ஜுச் சக்கிரவர்த்தி செங்
கோலுக் கடங்கித் திறை செலுத்தும்
சிற்றரசத் தொகை தேன்மொழியே! சொல்வேன்
சற்றே கவனமாய்க் கேளடி யே! (44)

மிஞ்சுபுகழ் வஞ்சிபாலன் கிருபா கரன்
மேவு திருமூல ராம வர்மன்.
கொஞ்சு கிளிமொழியார் மலி கொச்சிமன்
கூர்மதி தொண்டமான் பூபதியும். (45)

ஆவிடையாள் கிருபை யாளுடையார் மைசூர்
மேவுடையார் விரி நாடுடை யார்,
பூவிடை மேவும் பொலிவுடையான் பங்கன்
சேவடியார் சேது நாடுடையார். (46)

மெய்த்திரு நாடாளும் ஐதிரா பாத்துக்கோன்,
மேவு பரோடா ஜய வேந்தன்,
எய்த்தவர்க் கீயும் இந்தூரின்கோ, குவாலியர்
ஏந்தல், ஜயபுர ராஜாவும், (47)

காசிமா மன்னன் காஷ்மீர்மா வேந்தனும்
கண்ணியன் ஆஜ்மீர் மஹா ராஜன்
பூசிதன் பீஹார் பதியும், பட்டியாலா
பூபதி, பீஜ்வார் ராஜா வும். (48)

ராஜகர் வேந்தொடு ரீவா மகீபதி
ரஞ்சித சுடார் இயல் வேந்தன்
தேஜன் திவாஸ்மஹா ராஜன், பவல்புர
ராஜன், ஜம்மூபதி, அஜ்மீர் பதி, (49)

ஆலி ஜயப்பூர் அதிபன், கபர்த்தாலம்
ஆளும் அரசன் முத லாக,
நாலிரு திக்கிலும் நம்மிறை ஜார்ஜடி
நாளும் பணியும் நரேந்திரர் கள், (50)

தத்தமக்குச் சொந்த மான விருதொடு,
தாரணி ஆளும் மன்னுதி மன்னன்
உத்தமன் ஜார்ஜின் பதம்பணியும் பரி
சித்தரையில் யாரே பெற்றன ரே! (51)

டெல்லிப் பதியின்று பெற்ற சிறப்பினைச்
சொல்லித் தெரிக்கச் சொல் வன்மையுள்ள
வில்லி கூத்தன் கம்பன் மெய்ப்புகழேந்தியு
மேவெம்மே * சுந்தரனும் இலரே. (52)

ஆங்கிலர் ஆட்சியில் நாம்பெற்ற நன்மை
அநந்தம் எனினும் அவையிற் சில
பூங்குயிலே! மொழிவேன். சம பாவனை,
போர்ப்பய மின்மை, பொருட் காப்பு. (53)

சாதி முறைமை கருதாச் சமநீதி,
சஞ்சல மற்ற சுக வாழ்வு,
ஓதி உணர எவர்க்கும் சுதந்திரம்,
உத்தமக் கல்வி பயில் சாலை. (54)

சீக்கிரம் யாத்திரை செய்யப் புகைவண்டி
செய்தி யறியத் தபால், தந்தி
நோய்க்கிரை ஆனரைப் போற்ற மருத்துவ
நூல்வலோர், ஔஷத நற் சாலை. (55)

வர்த்தகம் பற்பல கைத்தொழில் வேளாண்மை
விர்த்தி யடைய நல்லேந்தல் களும்,
அர்த்த நிசியிலும் சொஸ்தமா யாத்திரை
யார்க்கும் செய நல்ல ரஸ்தாவும், (56)

குடிகள் மிகுபொருள் சேமிக்கப் பாங்குகள்
கொண்டு கொடுத்திட நாணயங் கள்
கடிநகர் தோறும் கண்காட்சிப் பொருட்சாலை
காலி மருத்துவச் சாலை களும், (57)

அச்சுக்கூடங்கள், அரசியல் மாட்சி
ஆராய்ந்து தெரிந்திடப் பத்திரி கை,
மெச்சு பிரசங்க சாலைகள், சங்கங்கள்
மேவு சமுதாய நல்லுணர்ச்சி. (58)

சர்வ சமய சமரச பாவனை,
சாதி யொன்றே யெனு மெய்யுணர்வு,
பூர்வ வழக்கங்களிற் கழி வாயின
போக்க விருப்பம் இவை யாமே. (59)

ஆங்கில ரோடுற வாடியே நாம்பல
ஆசார நன்மைகள் பெற்றனமே,
பாங்கியே! அன்னர் பரிந்துசெய் நன்றிக்குப்
பாரதம் செய்யும் கைம்மா றேதே! (60)

வாழ்க! அரசனும் தேவியும் மக்களும்
வாழ்க! பாராள்மன்று மெம்பரு மே
வாழ்க! பெருமக்கள் ஆங்கிலரும் நனி,
வாழ்க! அரசியல் வாழிய வே. (61)

வாழிய! நந்தமிழ்த் தேமொழியு மோங்கி
வாழிய! செந்தமிழ்ப் பாவல ரும்,
வாழிய! நந்தமிழ் மாக்களும், நாடுமே
வாழிய! நூல்களும், வாழிய வே! (62)

* 'மனோன்மணீயம்,' ஆசிரியர், Prof. P. சுந்தரம் பிள்ளை, M. A.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

**ராஜ தம்பதிகள் வந்து சேருதல்.**—ராஜ தம்பதிகளை ஏற்றிவந்த மேடினு கப்பல் பம்பாய் துறைமுகத்துக்குள் சனிக்கிழமை காலை 9-30 மணிக்கு நுழைந்ததும், 101 ராஜமரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. நமது ராஜப்பிரதிநிதி அவர்கள் தமது பரிவாரங்களுடன் 10-45 மணிக்கு மேடினு கப்பலுள் சென்று ராஜ தம்பதிகளிருவரையும் வழக்கப்படி மரியாதைகளுடன் கண்டு கொண்டார்கள். பிறகு 11 மணிக்கு நமது ராஜப்பிரதிநிதி பம்பாய் கவர்னரவர்களை ராஜ தம்பதிகளுக்கு அறிமுகம் செய்துவைத்தார். ராஜ தம்பதிகள் 4 மணிக்கு அப்பாலோ பந்தர் வந்துசேர அவர்களிருவரும் ராஜப்பிரதிநிதியால் வரவேற்கப்பட்டார்கள் 101 மரியாதைக்குண்டுகள் போடப்பட்டன. ராஜதம்பதிககள் தமக்கென்று அமைக்கப்பட்டிருந்த சிங்காரப் பந்தலுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு, அவர்களுக்கு அமைக்கப்பட்டிருந்த ஆஸனங்களில் அமர்ந்ததும், பம்பாய் முனிசிபல் கார்ப்போரேஷன் உபசாரப்பத்திரம் ஷை கார்போரேஷன் பிரஸிடெண்டு ஸிர். பி. மேதா அவர்களால் வாசிக்கப்பட்டது. அதைப் பெற்றுக்கொண்டு மஹாராஜா சக்கிரவர்த்தியவர்கள் அன்புடனும் கருணையுடனும் பதில் அளித்தார்கள்—இதைப் பற்றியும், ராஜதம்பதிகள் நாளை வியாழக்கிழமை மிகுந்த கோலாஹலத்துடன் டெல்ஹிமாநகர் அடைந்து அங்கு நடக்கப்போகும் வைபவங்களைப்பற்றியும் அடுத்த பத்திரிகையில் விரிவாய் எழுதுவோம்.

* * *

**சென்னை மகுடாபிஷேகக் கொண்டாட்டம்.**—இம்மாதம் 12-ந்தேதி 12-மணிக்குக் கவர்ன்மெண்டு விருந்து மண்டபத்தின் படிமீதிருந்து, அதிகாரிகளால் ராஜவிளம்பரம் வாசிக்கப்படும், அப்போதங்கு காலேஜியில் வாசிக்கும் 3000-மாணவர்கள் கூட்டப்பட்டிருப்பார்கள். சம்ஸ்கிருத பாஷையிலும் தேசபாஷைகளிலும் தேசகீதம் பாடப்படும். காலேஜ் மாணவர்கட்குச் சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி, யவர்களினுருவமமைந்த பதக்கங்கள் கொடுக்கப்படும். பீபிள்ஸ் பார்க்கில் கீழ்தரப்பாடசாலைகளிலும் ஹைஸ்கூல்களிலும் வாசிக்கும் 10000-பிள்ளைகள் வரையிற் கூட்டப்பட்டு, சிற்றுண்டி தரப்படுவார்கள். பீபிள்ஸ் பார்க்கிற்குப் போவதற்குக் கூடாத சிறுகுழந்தைகள் பற்பல வீடுகளிற் கூட்டப்பட்டு, சிற்றுண்டிகள் தரப்படுவார்கள். பழைய ஹைகோர்ட்டிலிருந்து மவுண்டு ரோட்டின் மைதான பரியந்தம் ஊர்கோலமொன்று நடைபெறும். ஷை மைதானத்தில் வேடிக்கை பல நடைபெறும். சென்னையிலுள்ள பல மத தேவாலயங்களில் தீபாலங்காரங்களும் ஆராதனைகளும் நடைபெறும். தேசகீதங்கள் அச்சிட்டுள்ள துண்டுப்பத்திரங்கள் இலட்சக்கணக்காக மாணவர்கட்குக் கொடுக்கப்படும். இந்நகரமுழுதும் மிகவும் அழகாய் அலங்கரிக்கப்படும்.

* * *

**நூறாண்டுள்ளவர்களின் தொகை.**—ஜர்மனியிலெடுத்திருக்கும் கணிதப்பிரகாரம் ஐரோப்பாக்கண்டத்தில் அடியிற் குறிப்பிட்டவாறு 6760 பேர் நூறு வயதுடையவர்களாக விருக்கின்றனர். டென்மார்க் 2, பெல்ஜியம் 5, ஸ்வீடன் 10, நார்வே 23, ஜர்மனி 76, ருஷியா 89, கிரேட்பிரிட்டன் 92, ஆஸ்டிரியோ ஹங்கேரி 113, இத்தாலி 197, பிரான்சு 213, ஸ்பெயின் 410, செர்வியா 573, ரோமானியா 1074, பல்கேரியா 3883.

* * *

**துக்க ஸம்பவங்கள்.**— இக்கோலாஹலங்களுக்கிடையில் நமது பத்திரிகாபிமானிகளுள் இருவராகிய ம-ா-ா-ஸ்ரீ, ராவ்பஹதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை அவர்கள், பாலவநத்தம் ஜமீந்தார் ம-ா-ா-ஸ்ரீ பாண்டித் துரைஸாமி தேவரவர்கள் இறக்கும்படி நேர்ந்த துக்க சங்கதியைக் கூறாமல் விட எமக்கு மனமெழவில்லை. இவர்களைப்பற்றி விரிவாகப் பின்னால் எழுதுவோம்.

* * *

**டில்லி தர்பாரும் கைதிகளின் விடுதலையும்.**—நமது சக்ரவர்த்தி யவர்களின் மகுடாபிஷேக ஞாபகார்த்தமாகத் திருவனந்தபுரத்துச் சென்ட்ரல் ஜெயிலில் 12-கைதிகள் விடுதலை யடைவார்களென்று தெரிகின்றது.

* * *

**உண்ணும் நெய்யில் பாம்பின் கொழுப்பு.**—கொஞ்சநாளைக்கு முன் ஹூக்ளி ஸப் ஜட்ஜு முன்பாக ஒரு கேஸ் விசாரணைக்குவந்தது. அந்தக்கேஸில் கக்ஷிக்காரன் ஒரு மகமதியன். நெய் வியாபாரம் செய்வோன். அவனால் தாக்கல் செய்யப்பட்ட கணக்குப புத்தகத்தை கோர்ட்டார் அவர்கள் பரிசோதனை செய்ததில் நேபாளப் பிரதேசங்களிலிருந்து பாம்பு வாங்குவதற்கு ரூ 500-செலவானதாய் எழுதி யிருந்தது. அதன் விபரத்தை கோர்ட்டாரவர்கள் கேட்டதற்கு, தான் விற்றுவரும் நெய்யில் பாம்பின் கொழுப்பைக் கலப்பது வழக்கமென்று சொன்னான். இது வாசிப்பவர்களுக்கு மிகவும் அருவருப்பையும், ஆச்சர்யத்தையும் உண்டாக்கும்.

# No Library is Complete without these Books

## இப்புத்தகங்கள் ஒவ்வோர் புத்தகசாலைக்கும் இன்றியமையாதவை

### விவசாயிகளுக்கு அவசியமான புத்தகங்கள்.

பென்ஷன் விவசாய இன்ஸ்பெக்டர் ம-௱-௱-ஸ்ரீ ஜி. ராஜகோபால்நாயுடு அவர்களால் இயற்றப்பட்டவை

**நெல்.**—இதை வாசித்தால் நமது பழக்கங்கள் மிகவும் தாழ்ந்திருக்கின்றன வென்றும், நவீனவிஷயங்களை அனுசரிப்பதற்குச் செலவு இல்லாமலே சாதகங்கள் உண்டென்றும், அவ்வாறு அனுசரித்தால் விளைவு அதிகப்படுமென்றும், அதனால் லாபம் அதிகம் கிடைக்குமென்றும் உள்ளங்கை நெல்லிக் கனியைப்போல் விளங்கும். விலை ரூ 1.

**தென்னை.**—தென்னைமரம் தமிழ் நாட்டில் தக்கபடி காப்பாற்றப் படுவதில்லை. மேற்கு சமுத்திர நாட்டில் மரம் ஒன்றுக்கு மாதம் 1 ரூபா முதல் 3 ரூபா வரையில் வாடகைவாங்க, சென்னையில் 4 அணு முதல் 2 அணுவுக்கு மேல் கிடைப்பதில்லை. இவ்வித்தியாசம் நிலவாக்கு நீர்வாக்குமுதலியன என்று சமாதானம் சொல்லிக் காரணம் அறியாமலிருக்கிறார்கள். இவை ஆராய்ச்சி செய்ய கோதாவரி ஜில்லாவிலும், சென்னையிலும் பலவிதமாய் பரிட்சை செய்ததில் திருப்தி உண்டாகும்படி காய்களும் கள்ளும் கிடைத்தன. இவ்வாறே குடித்தனக்காரரும் லாபமடைய வேண்டுமென்றும் விருப்பத்தால் இலங்கையிலும் மேற்குச் சமுத்திர நாட்டிலும் அனுசரிக்கும் மாதிரி விருத்தி செய்யத் தகுந்த பழக்கங்களை ஒன்று சேர்த்து இப் புத்தக மூலமாக வெளியாயின. விலை ரூ 1

**கரும்பு.**—கரும்பின் ஜாதி, குணங்கள், கரும்பு விபாகங்கள், வகைகள் தேசகால முதலியன. பயிர் மாற்றம், மண் உழவு, விதை, விதைநடல், நீர்பாய்ச்சல், எருவிடல், கலப்புபயிர், களையெடுத்தல், மண்ணணைத்தல், கெடுதிகள். பந்தல் அடுப்பு விறகு பானை கொகப்பரை துடுப்புச் சல்லடை ஆலை பாகு வெல்லம் கற்கண்டு சீனிசர்க்கரை இவைகள் இதில் அடங்கும். ரூ 1

**வியவசாய விளக்கம்.**—கவர்ன்மெண்டாரால் அபிமானிக்கப்பட்டு 500 புத்தகங்களை குடிகளுக்கு இனாமாக வாங்கிக் கொடுத்தும் பாட புத்தகமாக நியமிக்கப்பட்டும் வாசிப்பவர்களை விவசாய விஷயத்தில் ஊக்கமும் கவனமும் எடுத்துக்கொள்ளும்படி செய்யும். விலை ரூ I 4

**மாம்பழம்.**—இத்தேசத்திய பஞ்ச நிவர்த்திக்கு என்று உண்டாகும் மாம்தோப்புகள் அதிகப்பட்டு வருகின்றன. அவைகளை பாதுகாக்க வகை தெரியாமல் பல இடங்களில் நஷ்டம் சம்பவிக்கிறது. இது விஷயமாய் சாஸ்திர சம்பந்த புஸ்தகம் இத்தேசத்திற்கு அவசியமென்று எழுதப்பெற்றது. அணு 6

### சச்சிதானந்த சிவம்

ஹிந்து வேதாந்த சாஸ்திரத்தில் விருப்பமுள்ளவர்களும் ஜீவகாருண்ய முள்ளவர்களும் படிக்கத்தகுந்த புத்தகம் இது. சேலம் ஜெயிலில் இருக்கும் சுப்பிரமணிய சிவா அவர்களால் சம்சாரத்தின் வேண்டுகோளின்படி, அவர்கள் ஜீவனத்துக்காக ஜெயில் சூபரின்டென்டெண்டின் அனுமதியின் பேரில் எழுதி பிரசுரம் செய்யப்பட்ட புஸ்தகம். நடை எளிதாகவும் வாசிக்கப் பிரியமாயுமிருக்கும். விலை அணு 12.

### PERIA PURANAM

## பெரிய புராணம்

மூலமும், அரும்பதவுரையும், வசனமும் அறுபத்துமூவர் சரிதங்களடங்கியது

இந்நிலவுலகத்தில் ஆன்ம நாயகனை யடையப் பலவித நெறிகளிருப்பினும் அவைகளுள் சிறந்தது பத்தி நெறியே யாகும். இதைப்பற்றி விரிவாகக் கூறும் பதிநூல் பெரியபுராணம் ஒன்றே.

இப்பெரிய புராணத்தை உரையோடு 19 ரூபாய்க்கும், மூலத்தைமாத்திரம் 3 ரூபாய்க்கும் விற்கின்றமையால் எளியவர் எளிதில் பெறமுடியவில்லை. ஆனது பற்றி இந்நூல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் அச்சிட்ட பிரதிக்கிணங்கப் பரிசோதித்த மூலத்தோடு அரும்பதவுரையும், வசனமும் சேர்த்து உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் டிம்மி 109 பாரம் அல்லது 872 பக்கங்கள் கொண்ட புத்தகமாக அச்சிடப்பட்டிருக்கிறது. இடையிடையே தேவாரங்களுஞ் சேர்க்கப்பட்டுள்ளன. இளங்கல்வி யுடைய சிறுமியர்களும் வாசித்து எளிதில் பத்திச்சுவையை யுணர்ந்து களிப்பார்கள். கலிகோபயிண்டுசெய்தது வி... ரூ. 3 0 0

சம்பந்த சரணாலய சுவாமிகள் அருளிச்செய்த கந்தபுராண மூலமும், பொழிப்பும், விருத்தியும் ரூ.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 0 6 0

### TIRUMANDIRAM

## திருமந்திரம்

மூவாயிரவருடஞ் சிவயோகமிருந்து ஒவ்வோராண்டிற்கு ஒவ்வோர் அருட்பாவாகத் திருமூலநாயனாரவர்களால் அருளி செய்யப்பட்டது. தனை பிரித்திருக்கிறது. அரும்பாக்கட்கு நக்ஷத்திரப்புள்ளி யிட்டிருக்கிறது. திருமூலநாயனார் கலர்படம் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. உயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. 59½ பாரம் அல்லது 476-பக்கங்கள் உடையது. காலிகோ பயிண்டு செய்யப்பட்டது. விலை ரூபாய் 1 8 0

விலாஸம்.—ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்

# No Library is Complete without these Books

## இப்புத்தகங்கள் ஒவ்வோர் புத்தகசாலைக்கும் இன்றியமையாதவை

**BOJA CHARITRAM**

**போஜ சரித்திரம்**

இது ம-ள-ள-ஸ்ரீ. T. S. நாராயண சாஸ்திரியார், B.A., B.L., அவர்கள் இயற்றியது. ஏராளமான திரவியச்செலவு செய்து கண்ணைப் பறிக்கக் கூடிய 16-சித்திரப்படங்கள் மிகவும் அழகாய் அச்சிட்டு ஆங்காங்குச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 1 8

ம-ள-ள-ஸ்ரீ, பண்டித நடேச சாஸ்திரியாரால் எழுதப்பட்டவை.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| திக்கற்ற இருகுழந்தைகள் | ... | 0 | 12 |
| தீனதயாளு | ... | 0 | 8 |
| ஸ்ரீ மாமி கொலுவிருக்கை | ... | 0 | 8 |
| தலையணை மந்திரோபதேசம் | ... | 0 | 8 |
| முத்திராராக்ஷஸம் | ... | 0 | 4 |
| மிருச்சகடி | ... | 0 | 4 |
| வேணீ ஸம்ஹாரம் | ... | 0 | 3 |
| ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் | ... | 0 | 6 |
| கோமளம் குமரியானது | ... | 0 | 8 |
| நளோபாக்கியானம் | ... | 0 | 12 |
| பாலகாண்டம் வால்மீகி | ... | 1 | 12 |
| அயோத்தியாகாண்டம் இராமாயண | ... | 3 | 0 |
| ஆரண்யகாண்டம் வசனம் | ... | 1 | 12 |
| கிஷ்கிந்தாகாண்டம் உயர்ந்தபதிப்பு | ... | 1 | 12 |
| ஸுந்தரகாண்டம் | ... | 1 | 12 |

**BY THE SAME AUTHOR IN ENGLISH.**

| | | | |
|---|---|---|---|
| "Indian Folk Tales," containing 51 interesting tales, 533 pages | ... | 2 | 8 |
| "Hindu Feasts, Fasts and Ceremonies" | | 1 | 8 |

**ம-ள-ள-ஸ்ரீ, ஏ. மாதவய்யா, பி. ஏ. அவர்களால் இயற்றப்பட்டவை**

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| பத்மாவதி சரித்திரம்.—ஒரு தமிழ் நாட்டுக் கதை. (இரண்டு பாகமும், அநேக படங்களுடன்.) புதிய பதிப்பு | ... | 1 | 0 |
| விஜயமார்த்தாண்டம்.—ஒரு தமிழ் நாவல். வெகு அற்புதமான கதை | ... | 0 | 12 |
| ஷை (காலிகோ பைண்டு) | ... | 1 | 2 |
| முத்துமீனாக்ஷி.—ஓர் பிராமணப் பெண்ணின் சுவசரிதை | ... | 0 | 8 |
| ஒதெல்லோ என்ற வெனிஸ்மோரியன்.—இச்சிறந்த நாடகம் ஷேக்ஸ்பியர் சரித்திரம், பொதுப்பாயிரம், குறிப்புரை, வியாக்கியானங்களுடன் எளிய தமிழ் நடையில் மொழிபெயர்க்கப் பட்டது; ஷேக்ஸ்பியர் மகாகவியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. | | 1 | 0 |
| ஷை (காலிகோ பைண்டு) | ... | 1 | 6 |
| திருமலை சேதுபதி.—ஓர் நவீன நாடகம் | ... | 0 | 8 |

**ஹைகோர்ட்டு வக்கீல் ம-ள-ள-ஸ்ரீ-ப-சம்பந்த முதலியார் அவர்கள் இயற்றிய நவீன நாடகங்கள்**

| | | | |
|---|---|---|---|
| அமலாதித்யன்.—இது ஷேக்ஸ்பியர் மகாகவி எழுதிய 'ஹாம்லட்' என்னும் நாடகத்தின் தமிழ் அமைப்பு | ... | 1 | 0 |
| லீலாவதி ஸுலோசனா | ... | 0 | 12 |
| இரண்டு நண்பர்கள் | ... | 0 | 12 |
| சத்ருஜித் | ... | 0 | 12 |
| மனோஹரன் | ... | 0 | 12 |
| காலவரிஷி | ... | 0 | 8 |
| யயாதி | ... | 0 | 8 |
| சாரங்கதரன் | ... | 0 | 8 |
| வேதாள உலகம் | ... | 0 | 8 |
| காதலர் கண்கள் | ... | 0 | 12 |
| பேயல்ல பெண்மணியே | ... | 0 | 8 |
| கள்வர் தலைவன் (புதியபதிப்பு) | ... | 0 | 12 |
| ரத்னாவளி | ... | 0 | 12 |
| பொன் விலங்குகள் | ... | 0 | 8 |
| நற்குல தெய்வம் | ... | 0 | 8 |

**BY THE SAME AUTHOR (IN ENGLISH)**

| | | | |
|---|---|---|---|
| Harischandra (A Drama) | ... | 1 | 0 |
| Yayathi | ... | 0 | 8 |
| அனுமான்லிங் | ... | 0 | 12 |
| காமாக்ஷி | ... | 0 | 8 |
| பிரேமகலாவதியம் | ... | 0 | 12 |
| வத்ஸலா | ... | 0 | 8 |
| கண்மணி | ... | 0 | 3 |
| சின்னத்தம்பி | ... | 0 | 4 |
| எலேன் | ... | 0 | 6 |
| சாரதாம்பாள் | ... | 0 | 8 |
| புருஷோத்தமன் | ... | 0 | 10 |
| மாலிகாபூஷணி | ... | 0 | 10 |
| ஆங்கில சிரோமணிகள் | ... | 0 | 12 |
| ஸ்ரீ விவேகானந்த விஜயம் | ... | 1 | 4 |
| ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸ விஜயம் | ... | 1 | 4 |
| தாயுமானவர் பாடல் உயர்ந்த பதிப்பு | ... | 1 | 0 |
| நைடதம் மூலமும் உரையும் | ... | 2 | 0 |
| விநோதரஸ மஞ்சரி | ... | 1 | 8 |
| அராபியன்நைட்கதை படங்களுடன் | ... | 2 | 2 |
| விக்கிரமாதித்தியன்கதை | ... | 1 | 8 |
| தேசபக்தர்கள் சரித்திரம் | ... | 0 | 12 |
| நாலடியார் உரையுடன் | ... | 1 | 2 |
| அம்பாலிகை | ... | 0 | 12 |
| தாமோதரன் | ... | 0 | 12 |
| இளமையும் ஒழுக்கமும் | ... | 0 | 8 |
| மானிட மர்ம சாஸ்த்திரம் | ... | 5 | 0 |
| மானஸ மர்ம சாஸ்திரம் | ... | 2 | 0 |
| பீமலா | ... | 0 | 6 |

**விலாஸம்.—ஜனரல் ஸப்ளைஸ் கம்பெனி, மயிலாப்பூர், மதராஸ்**

"VIVEKA BODHINI" 299 January, 1912

Coronation Special with 6 full plate illustrations

Vol. IV No. 7



## CONTENTS


The Durbar and the Imperial Visit ... ... ... ... i

Contentment ... ... ... ... ... ... 267

Image Worship and Vedic Teachings ... ... ... ... 268

Ancient Hindu Civilization : by M. R. Ry. R. S. Narayanaswami Aiyar Avl., B.A. B.L ... ... ... ... ... ... 272

Saivite Hymns—A critical Note : by M. R. Ry. V. S. Chengalvaroya Pillai Avl., M.A. ... ... ... ... ... 275

Life of Kamban : by Brahma Sri Vasishta Barathi Avl. ... ... 279

Moral Sayings explained ... ... ... ... ... 282

Some Lower Forms of Life : by M. R. Ry. N. S. Jambunatha Aiyar Avl., B.A., L.T., F.Z.S., Sub-Assistant Inspector of Schools ... ... 284

Prose writing : by M. R. Ry. T. Chelvakesavaraya Mudaliar Avl., M.A. ... 286

H. M. King George V—(a life sketch) by M R. Ry. V. Muthuswami Aiyar Avl., B.A., L.T. ... ... ... ... ... ... 290

Cholan Karikalen : by M. R. Ry. C. P. Venkatrama Aiyar Avl., M.A. ... 295

Popular Maxims explained ... ... ... ... ... 296

The Sun and the Earth—Annual Motion : by M. R. Ry. S. Balakrishna Aiyar Avl., B.A., L.T., Lecturer, Government College, Kumbakonam... ... 298

Birds' Nests, Eggs, &c.: by M. R. Ry. V. R. Duraisami Sastri Avl., M.A., L.T., of the Presidency College, Madras ... ... ... ... 302

Stories from Local History : by M. R. Ry. G. Ratnam Pillai Avl., B.A., L.T., Head Master, Banadurai Secondary School, Kumbakonam ... ... 306

Summary of Minor Upanishads ... ... ... ... ... 308

Shakespeare—A life sketch (Concluded) by a Master of Arts ... ... 311

The Tempest : By a Master of Arts ... ... ... ... 314

Kalyani—An adaptation of Sir Walter Scott's Bride of Lammermoore : by M. R. Ry. S. V. Kallapiran Pillai Avl., B.A., Deputy Collector ... 318

Adventures of Ulysses: by M. R. Ry. K. Venkatrama Aiyar Avl., B.A. ... 321

Vasanta Malikai : An adaptation of Sir Walter Scott's Kenilworth : by R. S. Narayanaswami Aiyar Avl., B.A., B.L ... ... ... 324

Students' Pages—Reflective Essays: Familiar Metaphors—Monkey's treatment of garlands ... ... ... ... ... ... 327

Naganandam—A Classical drama : by M. R. Ry. V. Seshagiri Sastri Avl., B.A. 330

Children's Pages—True Greatness or Vasudeva Sastri (Translated) ... 333

Ladies' Pages ... ... ... ... ... ... 335

News and Notes.—Hon'ble late Mr. V. Krishnaswami Aiyar, C.S.I. ... 337

☞ *Specially adapted for Elementary Training & High Schools*

# LESSONS from GEOLOGY

(IN TAMIL)

BY MR. M. R. SUBRAHMANYAM, B. A.

## பூதத்வ போதினி

நாமிருக்கும் பூமியின் தத்துவங்களை அறியாதிருப்பது பெரும் பேதமையே யன்றோ? பூமியின் தத்துவங்களைச் சரியாக அறியவேண்டுமாயின் Mr. சுப்பிரமணிய ஐயாவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டு 30 படங்களால் நன்றாக விளக்கப்பட்டிருக்கும் பூதத்வ போதினி என்னும் நூலினை வாங்கி வாசித்தறியவும். இதில் அருமையான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகம் எலிமெண்டரி ஸ்கூல் மாணாக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும், உபயோகப்படும்படி எழுதப்பட்டிருக்கிறது. விலை அணா 8

This treats of rocks and minerals: their action and uses: Contains more than 30 fine illustrations, specially prepared for the book: most of the examples and illustrations given in the book are Indian.

**Beautifully bound in full Calico: As. 8**

இதைப்பற்றிய சில முக்கிய அபிப்பிராயங்கள்.

**H. Narayana Rao, Esq., M. A., F. G. S., Lecturer on Geology, Presidency College, Madras,** writes:—This little book (Lessons in Geology by Mr. M. R. Subrahmanya Iyer, B. A.) is an introduction to Geology in Tamil. By referring to Indian Examples, the author has attempted to familiarize the reader with the various Geological phenomena without going too much into the details of the subject which would materially be repulsive to an ordinary reader, the author has given a general outline of the subject *in an easy and popular style*. The concluding chapter deals with the mode of occurrence in India of the most important minerals, coal, gold and diamond. *I have no doubt that the book will supply a real want and I hope it will be largely used in Secondary Schools and especially by teachers.*

**The "Madras Mail."**—The General Supplies Co., Mylapore Madras has published a little primer in Tamil embodying easy lessons in Geology by Mr. M. R. Subramaniam, B.A. It is intended to serve as an introduction to the study of this important science for the benefit of Tamil Readers. The illustrative examples are mostly of their country and the specimens referred to are such as must be familiar to readers selected as they are from their surroundings. The book is priced at As. 8 and is well adapted for introduction into Elementary Schools.

* * *

**T. V. Sivakumara Sastry, Esq., B.A., L.T., Lecturer, Teachers' College, Saidapet.**—* * * One of the most commendable features of the book is the *absence of all difficult technical terms. The style is simple and easy.* The book is sure to become highly popular.

* * *

**The "Hindu."**—This little book on Geology in Tamil by Mr. M. R. Subrahmanyam, B.A. is an introduction to the important science of Geology, the knowledge of which has been long neglected in our country. The author has placed before us the important geological phenomena *in a simple and popular style* avoiding the use of all difficult technical terms. We are glad to note that English words are not introduced into the body of the book but a glossary of the important Tamil terms used in the book with the translation of those into English has been added at the end of the book. In the course of the lessons the author has described several simple experiments to illustrate the phenomena so that even young pupils may easily understand the facts. The book contains more than 30 fine illustrations. We are sure the pupils of the Elementary and the Secondary Schools and specially the teachers of the Elementary and the Training Schools will be highly benefitted by this book. We wish the author all success in his attempt. The book has been published by the General Supplies Co., Mylapore, and it has been neatly bound in full calico and is priced low, *viz.* As. 8 a copy.

*Address:*—**The General Supplies Co., Mylapore, Madras, S.**

# "VIVEKA BODHINI"

## A High Class Illustrated Popular Tamil Monthly

**Patronised by almost all Educational Institutions, Local Boards & Municipalities &c.**

**Started in 1908** — **Devoted to various subjects**

**Annual Subscription including Postage Rs. 3** — **Appreciated by one and all**

# Among some of the Contributors

M.R.Ry. Mahamahopadhyaya Pundit, V. Swaminatha Aiyar Avergal; Mahamahopadhyaya Pundit, Sri Chandra Sekhara Sastrigal Avergal; Hon. Dewan Bahadur R. Raghunadha Rao Avl, C.S.I.; T. Kanakasundaram Pillai Avl, B.A.; S V. Kallapiran Pillai Avergal, B.A.; Mahesa Kumara Sarma Avergal; N. Balarama Aiyar Avergal; T. Chelvakesavaroya Mudaliyar Avergal, M.A.; T. A. Gopinatha Rao Avergal, M.A.; V. S. Chengalvaroya Pillai Avergal, M.A.; P. V. Shama Rao Avergal, M.A.; S. Kuppuswami Sastrigal Avergal, M.A.; C. P. Venkatarama Aiyar Avergal, M.A.; T. S. Subramania Aiyar Avergal, M.A., L.T.; V. R. Duraisami Sastri Avergal, M.A., L.T.; A. Panchapagesa Aiyar Avergal, M.A., L.T.; S. Appasami Aiyar Avergal, M.A., L.T.; A. S. Kasturiranga Aiyar Avergal, B.A., L.T.; V. Seshagiri Sastriar Avergal, B.A; B. S. Subramania Aiyar Avergal, B.A.; P. Sambanda Mudaliyar Avergal, B.A., B.L.; R. Narasimha Aiyengar Avergal, B.A., M.L. P. Krishnaswami Sastri Avergal, B.A., B.L.; T. S. Narayana Sastriar Avergal, B.A., B.L.; R. Srinivasa Aiyar Avergal, B.A., B.L.; S. E. Sankara Aiyar Avergal, B.A., B.L.; N. R. K. Tatachariar Avergal, B.A., B.L.; R. S. Narayanaswami Aiyar Avergal, B.A., B.L.; A. K. Sundaram Aiyar Avergal, B.A., B.L.; V. Subramania Aiyar Avergal, B.A.; T. R. Ramanatha Aiyar Avergal, B.A., L.T.; A. Madhaviah Avergal, B.A.; P. Kuppuswami Aiyar, B.A.; K. Narayana Aiyar Avergal, B.A, M.B. & C.M.; M. Gopalakrishna Aiyar Avergal; J. V. Subramania Aiyar Avergal, B.A.; C. Ramaswami Aiyengar Avergal, B.A.; V. G. Subbier Avergal, B.A., L.T.; G. Sundaresa Aiyar Avergal, B.A., L.T.; G. Tatacharyar Avergal, B.A.; C. Sundaram Aiyar Avergal, B.A., L.T.; C. S. Sundaram Aiyar Avergal, B.A., L.T.; P. S. Sundaram Aiyar Avergal, B.A., L.T.; T. Balasubramania Mudaliyar Avergal, B.A.; G. S. Krishnaswami Aiyar Avergal, B.A.; R. Rajam Aiyangar Avergal, B.A., L.T. M. R. Subrahmanyam Avergal, B.A.; S. Balakrishna Aiyar Avergal, B.A., L.T.; G Ratnam Pillai Avergal, B.A., L.T.; K. Venkatrama Aiyar Avergal, B.A.; Nagai C. Gopalakrishnan Avl; G. Rajagopal Naidu Avergal; S. V. Rangaswami Iyengar Avergal, B.A.; S. Krishnaswami Aiyar Avergal, B.A., L.T.; C. Narayanaswami Aiyar Avergal, B.A., L.T.; N. S. Jambunatha Aiyar Avergal, B.A., L.T., F.Z.S.; V. A. Venkatasubbiah Garu, B.A., L.T., N. Vanamamalai Pillai Avergal; P. N. Srinivasachariar Avergal, B.A.; R. P. Kulandaswami Pillai Avergal, B.A. L.T., V. K. Veeraraghava Chariar Avergal, B.A.; M. V. Minakshisundara Mudaliar Avergal, B.A.; J. R. Ranga Raju Avergal; L. Ananta Aiyar Avergal; &c., &c., &c.

# WHAT OTHERS SPEAK

**Rao Bahadur Mr. L. C. Williams Pillai, B.A., Retired Inspector of Schools,** writes:— The "Viveka Bodhini" is a *very readable Journal full of interesting matter written in chaste Tamil.* As a means of disseminating valuable information on various subjects among the masses, it deserves the liberal support of the educated public.

***

**Rao Bahadur Mr. C. Nagoji Rao, B.A., Retired Inspector of Schools.**—I have glanced through several numbers of the *Viveka Bodhini* and found them *interesting* and *instructive.*

**Hon'ble Dewan Bahadur R. Ragoonatha Row Avergal, C. S. I.,** writes:— * * * It is written in good easy Tamil and deals with subjects of importance and usefulness to the general public. Its annual subscription is Rs. 3 so that even the poor can have valuable and useful reading in good Tamil for a small sum.

***

**Hon'ble Mr. P. S. Sivaswami Ayar, B. A., B. L., C. I. E., Advocate General, Madras,** writes:—* * The articls are written in an easy, readable style and deal with a variety of interesting subjects Its usefulness and cheapness, will, I hope commend it to the Tamil public and secure popularity.

*Only to subscribers*:—**Back numbers of the Current Volume, As. 4 each.**